

# காசி ஆனந்தன்

# கவிதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் கனவு

1965–ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகள் மட்டக்களப்பு மருத்துவ மனையில் நோயாளியாய்த் தங்கியிருந்தகாலை 'தமிழன் அரசு மலராதா?' என்னும் தவிப்போடு கவிஞர் பாடிய குறுங்காப்பியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தன்
# கவிதைகள்

## தமிழ்க்கனல்
முதல் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பதிப்பு : தை, 1982

நூலுரிமை ஆசிரியருக்கு

விலை ரூபா. 10-00

உணர்ச்சிக்கவிஞர் பதிப்பகம்

8, புதுச்சிறை ரோடு,
மதுரை 625010

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்,
சென்னை—600014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினத் தலைவர்

# டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி

அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

ஈழம் நமக்குத் தந்த இனமான வேழம் கவிஞர் காசி ஆனந்தன்!

அந்தக் கவிக்கோவின் எழுத்தில் இதயம் பறி கொடுத்தவன் நான்.

அவரது கவிதைகளில் புயலின் வேகத்தை—பூகம்பக் குலுக்கலை—எரிமலையின் சீற்றத்தை உணர முடியும்.

வேகப் பாட்டெழுதும் புலவர் மட்டுமல்ல; வெஞ் சிறை வாழ்வுக்கும் வன்கணாளர் கொடுமைக்கும் அஞ்சிடாத நெஞ்சுரம் கொண்டவர். அதனாலே அவர்பால் எனக்கொரு தனி மதிப்பு உண்டு!

இந்த நூல் முழுதும் தமிழனின் இரத்த நாளங்களில் உணர்ச்சித் துடிப்புகளையேற்றிச் சூடு கிளம்பச் செய்யும் கவிதைகள் நிறைந்து கிடக்கின்றன.

**"காற்று வானிலே சிட்டுக்கள் கண்டேன்!**
**களிப்பினில் என்னை மறந்தேன்!—இன்பம்**
**ஏற்று மறுபொழு தென்கரம் பார்த்தேன்...**
**இரு கை விலங்கோ டிருந்தேன்!"**

என்ற வரிகளைப் படிக்கும்பொழுது சுதந்திர தாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைச் சுட்டிக்காட்டும் அவரது கவிதையோடு நானும் இணைந்து விட்டேன்! ஒன்றாகக் கலந்து விட்டேன்!

**“களமெனில் முழங்கி வரும் ஏறு!—தமிழன்**
**கங்கு கரை பொங்கிவரும் ஆறு!”**

தமிழனின் ஆற்றலை இந்த இரண்டு வரிகள் எப்படிப் புலப்படுத்திக் கம்பீரமாக நிற்கின்றன!

**“நெருப்புப் பழம் ஒன்று**
**நெஞ்சில் கனிகிறது!”**

இந்த உணர்ச்சி அலையெழுப்பும் பாடல் சிறைக் கோட்டத்தில் காசி ஆனந்தன் அடைக்கப்பட்டிருந்த போது எழுதியது!

அதைப் படிக்கப் படிக்க கண்கள் பனிக்கின்றன! இதயம் விம்மிப் புடைக்கின்றது!

நூல் முழுவதுமே கவிதை வரிகள் போர்க்கோலம் பூண்டு வீர நடை போடுகின்றன!

எழுத்துக்கள் அல்ல; ஈட்டிகள்! வேல்கள்! போர் வாட்கள்!

களம்பல கண்டு விழுப்புண் பெற்றவர் கவிஞர் என்ற காரணத்தால் அவரது கவிதைகளில் உணர்வு பூர்வமாகவே கலந்து விடுகிறோம்!

அன்புள்ள,

**தமிழ்நாடு**
7–1–82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தலைவர்

# திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

தங்க மாமணித் தமிழ் ஈழத்தைப் பற்றிக் கனவு கண்ட தமிழ்க் கவிஞன் காசி ஆனந்தன். பாகிஸ்தான் பூவுலகில் அமைவதற்கு முன்பே அதைக் கனவில் கண்டு கவிதை புனைந்த கவி இக்பால்போல ஈழமண்ணில் அமையப்போகும் தமிழ் ஈழம்பற்றிப் பாடிய விடுதலைக் கவிஞன் காசி ஆனந்தன்.

ஈழத்தமிழன் தன் தளையறுக்க வீறுகொண்டெழப் பாடிய கவிக்குயில் காசி ஆனந்தன். அவன் கவிதையின் ஆற்றல்கண்டு, சிங்கள ஆட்சியாளரால் ஐந்து ஆண்டுகளாகக் காராக்கிரகத்தில் அடைக்கப்பட்ட சிறைப் பறவை காசி ஆனந்தன்.

இத்தனை பெருமை பெற்ற என் அருமைத் தம்பி ஆனந்தனின் கவிதை நூலுக்கு முன்னுரை எதற்கு? கவிதையால், பேச்சால், செயலால், ஈழத் தமிழினத்தின் விடுதலைக்கு உழைத்துவரும் காசி ஆனந்தன் தமிழ் இனத்தின் சொத்து.

அவன் கவிதைநூல் தமிழ் இனத்தைப் புத்துணர்ச்சி கொண்டு எழுந்து செயலாற்றச் செய்யும் மாமருந்து என்பதில் ஐயமில்லை.

தமிழ் ஈழம்
14-1-82

அ. அமிர்தலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பேரறிஞர்

## பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி

எம்.ஏ, எம்.லிட், பிஎச்.டி.

அவர்கள் வழங்கிய

# பாராட்டுரை

கவிஞர் காசி ஆனந்தன் நாம்தமிழர் இயக்கத் தந்தை சி.பா. ஆதித்தனரால் உணர்ச்சிக் கவிஞர் என்று போற்றப் பட்டுள்ளார். ஆனல் எளியேன் உள்ளம் அவரை உணர்ச்சிக் கவிஞராக மட்டும் பார்க்கவில்லை. உண்மைக் கவிஞராகவும் உயர்தமிழ்க் கவிஞராகவுமே காண்கிறது. வேறு சொற் களில் சொன்னல் காசி ஆனந்தன் ஓர் கடமை வீரக் கவிஞர் எனலாம்.

ஈழத் தமிழகத்தில் வேழக் கவிஞராக விளங்கும் காசி ஆனந்தன் அவர்களுக்கு ஒரு பெருந்தனிச் சிறப்பு உண்டு. அது அவர் அந்நாட்டின் பாரதியாகவும் பாரதிதாசனுகவும் விளங்கும் சிறப்பே ஆகும். அவ்வகையில் இன்றைய உலகத் தமிழ் இலக்கியம் தாய்த் தமிழகத்திற்கு அப்பாலும் பெற்ற தனிப்பெருங் கவிஞர் காசி ஆனந்தன்.

கடவுள் நம்பிக்கையைக் கடமை நம்பிக்கையின் வாயிலாகவே காட்டும் பண்பாடும் பயன்பாடும் படைத்த தியாகவீரர் காசி ஆனந்தன் அவர்களுக்குத் தமிழ்ப் புலவர்கள் வரலாற்றிலேயே தனிஇடம்—தலைஇடம் உண்டு. காரணம் பல்லாண்டுக் காலம் தமிழ்—தமிழின வாழ்வுக் காகச் சிறைவாழ்வை தலைவாழ்வாக மேற்கொண்ட வீறும் பேறும் அவர்களுக்கு உண்டு. அந்த வகையில் அவர் வெறும் களம்பாடும் கவிஞர் மட்டுமல்ல, பெரும் களம் சாடிய—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிய கவிஞரும் ஆவார். கடமை வீரக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களுக்குக் கவிதைக்கலை கருவிலேயே வாய்த்த திருவாகத் திகழ்கின்றது. இவ்வுண்மை அவர்தம் கடமை உணர்வு நிறைந்த கவிதைகளில் உள்ள ஒவ்வொரு சொல்லி லும் காணப்படும் உணர்ச்சி உச்சிகளாலும் புலனாகும்.

கவிஞர் காசி ஆனந்தனின் கலைநிறைந்த கவிதைகளில் மூன்று பெரும் அடிப்படைகள் மிளிர்கின்றன. ஒன்று தமிழ் மரபில் அவருக்குள்ள ஊற்றம்—தோய்வு. இரண்டு, தமிழர் சமுதாயத்தில் சீர்திருத்தங்களின் தேவைகள் பற்றிய அவர் தம் தேற்றம்—ஆய்வு. மூன்று, தமிழ்—தமிழினத்தின் எதிரிகளிடம் அவருக்கு இருக்கும் சீற்றம்—காய்வு. இவை மூன்றுக்கும் சில சான்றுகள்—ஆம்—ஒத்த வைர மணிகளிடையே ஒன்றிரண்டைச் சிறந்தன எனக் காட்டல் மன்னிக்க முடியாத குற்றம் எனினும் காலம் இடம் ஆகிய வற்றின் எல்லை—தொல்லை கருதி மன்னித்தல் இன்றியமை யாதது.

I

கோட்டுப் புலிக்குலம் வாழக் குகையுண்டு!
குருவிக்குக் கூடு மரத்திலுண்டு!
காட்டு வயற்புற நண்டுக்குப் பொந்துண்டு!
கஞ்சல் எலிக்கோர் குழியுமுண்டு!
கோட்டை அமைத்துக் கொடியொடு வாழ்ந்தவர்
குலத்துக் கொருபுகல் இங்கிலையோ?
நாட்டை அமைப்பாய் தமிழ்மகனே! புவி
நடுங்கப் புயல்போல் நடைகொளடா!

II

சாதி மதமெனும் பேதங்கள் சாயவே
தமிழா ஒன்றுபடு!
ஆதி மகளெனும் தமிழை அரசியாய்
ஆக்கி வாழவிடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தன் பறையனென் றுரைக்கும் கயவனைக்
கண்ணீர் வர வதைப்பாய்!
இந்துவும் இஸ்லா மியனும் பொருதினால்
இருவரையும் உதைப்பாய்!

III

ஓடுக தானை! ஓடுக பகைவர்
உலவிடும் திசைவழி யெல்லாம்!
தேடுக தமிழர் தேசத்தின் மானம்!
தெய்வத்தில் ஆணையிட் டெழடா!

பைந்தமிழ் மொழியை எவன் பழித்தாலும்
பழித்தவன் தலைகொண்டு வாடா!
ஐந்து துண்டாக்கி அடுப்பினில் வைப்போம்!
அது நமக்குணவாகும் போடா!

*காசி ஆனந்தனின் கவிதைகளில் என்னைப் பெரிதும் கவர்ந்த கவிதை—தமிழை தமிழ்க் கவிதை வரலாற்றிலேயே பாடப்பெற்றுள்ள முறையில் பாரதியையும் பாவேந்தரையும் கூட மிஞ்சும் தலைமைக் கவிதை—இன்றைய இனப் போர்க் கவிஞனின் இலக்கைக் காட்டும் கவிதை இதோ:*

என்னகவி எழுதுகிறீர்...?
பாவலரே...போலிகளாய்
இருக்கின்றீர்கள்!
கன்னியெழிற் றமிழணங்கு
கையிரண்டில் விலங்குடையாள்
கண்ணீர் கண்டும்
செந்நெருப்பு விழிகொண்டு
சீறியெழ மாட்டீரா?
சீச்சீ...வானில்
புண்ணிருந்தாற் போலிருக்கும்
நிலாவினையும் காதலையும்
புனைகின்றீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கு வெறித் தமிழ்கொண்டு
போர்க்களத்தே ஔவையெனும்
பூவை அந்நாள்
செங்குருதி குளித்திருந்த
தமிழ்மன்னர் சிறப்பெல்லாம்
கவிதை ஆக்கிச்
சங்கமணித் தமிழ்தந்தாள்...
அட நீங்கள் தாய்த்தமிழை
மறந்து நாட்டில்
தெங்கிளநீர் முலைபாடித்
திரிகின்றீர்...கவிஞர்களா?
செத்துப் போங்கள்!

கடமை வீரக் கவிஞர் காசி ஆனந்தனின் விடுதலைக் காதல் மேட்டுக்குடி மக்களுக்காக இல்லை. ஏழை எளிய பாட்டாளி மக்களுக்காகவே ஆகும். இவ்வுண்மைக்கு ஓர் இலக்கியச் சான்று:

"இலங்கை மலைதனிலே...தமிழச்சி
என்ன துயரெலாம் காணுகின்றாயடி!
முழங்கை வலித்திடவே தேயிலை
முனைகள் பறித்து முகம் சிவப்பாயம்மா!
விலங்கும் உறங்கிநிற்கும் சாமத்தில்
விழித்து நெடுமலை ஏறி இறங்குவாய்!
பழங்கள் பழுத்திடாதோ உன்காலில்
பச்சைக் குருதிநீர் பாயாதோ கண்மணி?

பிஜித் தீவினில் பெண்கள் படும் துயரைப் பற்றிப் பாடிய பாரதி இன்றிருந்தால் கவிஞர் காசி ஆனந்தனை 'என்பு நெக' அன்பால் கட்டித் தழுவி ஆத்திரக் கண்ணீர் சொரிதல் உறுதி.

கடமைதான் பெரிது; காதல் இல்லை! காரணம் தன்னலத்திலும் பொது நலமே பெரிது! கடமை இல்லாக் காலத்தில் வேண்டுமானால் காதல் பெரிது! வேறு சொற்களில் விளம்பினால் காதல் ஊற்றுக் கண்—கடமை ஆற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளம். காதலிவிடக் கடமைதான் பெரிது எனக் களத்தில் நிற்கும் காசி ஆனந்தன் உணர்கிறார். இதோ பாடல்:

காதலர் வரவில்லைத் தோழி!—அவர்
களத்திலே இருக்கட்டும்! இங்கென்ன வேலை?
மோதட்டும் பகைவர்கள் முன்னால்!—தோழி
முத்தமும் சத்தமும் வெற்றிக்குப் பின்னால்!

முகில் வானும் வான்தான். முகிலில்லா வானமும் வான்தான். முன்னதைக் கலைஞன் மனதிற்கும் பின்னதை ஞானி மனதிற்கும் ஒப்பிடலாம். கடமை வீரக் கவிஞர் காசி ஆனந்தன் பற்றற்ற பற்றுளர். இதற்கு—இந்த விதிவிலக்கு வீரப் பண்பிற்கு ஒப்பற்ற தகு சான்றாய் ஒளிர்கிறது பின்வரும் பாடல்:

காதலியே! உள்ளமெனும் காயத்தோடும்
கனத்துவரும் மூச்சோடும் கண்ணீரோடும்
வாதையுறவோ இவனைக் காதலித்தாய்?
சாதலுறவோ இவனைக் காதலித்தாய்!

சுகங் காட்டும் காதலர் தோள்கள்மீது
துயில்கொள்ளும் எழில்மாதர் வாழும் மண்ணில்
முகங்கூடக் காட்டாது களத்தே வாழும்
முண்டத்தை ஏனம்மா காதலித்தாய்?

இறுதியாக ஒரு கருத்து. கடமை வீரக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் தனது வாழ்வில் முதன் முதல் பாடிய பாட்டு.

காந்தி தாத்தா நல்ல தாத்தா
கருணை உள்ள தாத்தா!
தாழ்ந்தவர்க்கு வாழ்வு தந்தார்
தாத்தா பெரிய தாத்தா!

என்று அவர் தம் வாழ்க்கை வரலாற்றை சுருங்கிய—ஆனால் சூடான வகையில் எழுதியுள்ள ஆசிரியர் திரு. பா. சின்னத்துரை அவர்கள் தெரிவிக்கின்றார். அப்படிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட கவிஞரா இப்படிப் பாடுவது? "பாம்பை அடிக்கும் படையே சக்தி" என்று பாடிய பாரதியையும் 'கொலே வாளினை எடடா' 'பச்சை ரத்தம் பரிமாறுவோம்' என்று பாடிய பாவேந்தர் பாரதிதாசனையும் வெற்றி கொள்ளும் வகையில்—'இப்படியா பாடுவது?' என்று அதிரும் வகையில் காலச் சூழல்—கடமைக் கொடுமைச் சூழல் காரணமாகக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் பாடியுள்ளார். இதோ ஒரு சான்று! இதுவே போதும் போதும் என்று தோன்றுகிறது.

மண்ணைக் குடைந்தால் மணிகள் கிடைக்கும்!
மலையைக் குடைந்தால் வைரம் கிடைக்கும்!
விண்ணைக் குடைந்தால் நிலவு கிடைக்கும்!
வேறெது வேண்டும்? இங்குள மாற்றார்
கண்ணைக் குடைந்தால் விடிவு கிடைக்கும்!
கவிதை பாடவோர் வாய்ப்புக் கிடைக்கும்!
எண்ணிக் குடைந்து வீசுக புயலே!
எங்கள் விடுதலை இயக்கம் நீயே!

அரிது அரிது மானிடராய்ப் பிறப்பதரிது. அந்த அரிய மானிடர் வாழ்க்கை இப்படியெல்லாம் ஆகிவிடுகிறதே என்று நமக்கெலாம் வேதனை பிறக்கிறது. ஆனால் இதற்கு கவிஞர் காசி ஆனந்தன் எள்ளளவும் பொறுப்பில்லை. அவர் கடமையை அவர் செய்கிறார். முட்டாள் மூர்க்க மனித சமூகமே கவிஞரின் பேனா முனையை இப்படி நகர்த்துகிறது. இந்தச் சமூகமே பாவி. புத்தரைப் போன்ற புண்ணியர்கள் பெயராலும் இந்தப் பாவி வாழ்வதுதான் இன்னும் பெரும் பாவம். மனிதனை மனிதன் சுரண்டாத சமதர்ம உலகம் ஒன்றுதான் இத்தகைய பாவிகளை மாற்றும் போலும்?

அந்நாள் விரைவில் வர—வந்து வாழ்வின் அழகுகளையும் உயர்வுகளையும் அவர் அழியாக் கவிதைகளாக்கிப் பாட—கடமை வீரக்கவிஞர் காசி ஆனந்தன் வாழ்க. வெல்க.

சென்னைப் பல்கலைக் கழகம்
தமிழ்நாடு
20—1—82

**ந. சஞ்சீவி**
தலைவர்
தமிழ் இலக்கியத் துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் வாழ்க்கை

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் களத்தில் நிற்கும் விடுதலை வீரர் ஆவார். இடி ஓசைக்கும் இருளுக்கும் இடையில் நடக்கும் மின்னலைப் போல் இன்னல்களுக்கும் பெருமூச்சுக்கும் இடையில் அவர் பயணம் நிகழ்கிறது.

தமிழ் ஈழத்தில் தேனாடு என்று அழைக்கப்படும் மட்டக்களப்பில் நாவற்குடா என்னும் சிற்றூரில் கவிஞர் 4-4-1938 இல் காத்தமுத்து—அழகம்மா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.

சின்ன வயதிலேயே தமிழுணர்ச்சி கவிஞர் நெஞ்சில் பூத்தாடிற்று. முதல் கவிதையை அவர் பாடியபோது ன்னிரண்டு வயதுச் சிறுவனாக இருந்தார்.

பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் தம் எழுத்துக்கள் சிந்தனைகள்—இவைகளே கவிஞரைச் சின்ன வயதில் பெரிய சிந்தனையாளர் ஆக்கிற்று.

1957–ஆம் ஆண்டு இலங்கையின் வெறிபிடித்த சிங்கள ஆட்சியாளர் வண்டிகளில் சிங்கள 'சிறீ' எழுத்தை இலக்கத் தகடுகளில் பொறித்தார்கள். தந்தை செல்வா தலைமையில் இயங்கிய தமிழரசுக் கட்சி போர்க்கொடி உயர்த்திற்று. மட்டக்களப்பு போலீஸ் நிலையத்தின் உள்ளே நுழைந்து கவிஞர் அங்கிருந்த பெயர்ப்பலகையில் சிங்கள எழுத்துக்களை மை பூசி அழித்தார். போலீசாரின் கொடுமையான தாக்குதலுக்கு ஆளானார். இரத்தவாந்தி எடுத்த கவிஞர் இதன் விளைவாகக் காச நோயாளி ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிக் கவிஞர் ஐந்து ஆண்டுகள் சிங்கள ஏகாதிபத்தியத்தின் சிறைச்சாலைகளில் கைதியாக வாழ்ந்தார். அதே போன்று ஐந்து ஆண்டுகள் மருத்துவமனைகளில் காசநோயாளி ஆகவும் வாழ்ந்தார்.

1959–ஆம் ஆண்டு முதல் 1963-ஆம் ஆண்டு வரை தமிழ் நாட்டில் கவிஞர் பட்டப் படிப்பு காரணமாகத் தங்கியிருக்க நேர்ந்தது. காஞ்சியிலும், சென்னையிலும் பச்சையப்பன் கல்லூரியில் அவர் பயின்றகாலை டாக்டர் மு.வ., டாக்டர் ந. சஞ்சீவி, பேராசிரியர் அ.மு.ப., டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், பேராசிரியர் மா. கி. தசரதன் ஆகியோர் கவிஞருக்கு ஆசிரியர்களாக இருந்தார்கள். இந்நாட்களில்தான் பாவேந்தர் பாரதிதாசன் தொடர்பும் கவிஞருக்கு ஏற்பட்டது.

நாம் தமிழர் இயக்கத் தந்தை சி. பா. ஆதித்தனார் 'உணர்ச்சிக் கவிஞர்' என்னும் பட்டத்தை வழங்கி கவிஞர் காசி ஆனந்தனைப் பாராட்டினார். 'உறுமி மேளத்தின் முழக்கத்தைக் காசி ஆனந்தனின் ஒவ்வொரு பாடலிலும் கேட்கிறேன்' என்று கவிஞரைப்பற்றி ஆதித்தனார் உணர்ச்சி வசப்பட்டுக் கூறுவதுண்டு.

பட்டப்படிப்பை முடித்த கவிஞர் அரசு மொழி பெயர்ப்பாளராக இலங்கையில் சிலகாலம் பணியாற்றினார். 1972 ஆம் ஆண்டு இலங்கை குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டபோது தமிழரை அடிமைகளாக்கிய புதிய குடியரசு அரசியல் அமைப்பை எதிர்த்து—கைநிறையச் சம்பளம் வாங்கிய பதவியைத் தூக்கி எறிந்து—களத்தில் குதித்தார் கவிஞர். இந்நிகழ்ச்சியின் பின்புதான் கொடுமையான அவர் சிறைவாழ்க்கை துவங்கிற்று. இலங்கைப் போலீசார் இவரைக் கைது செய்வதும் சிறையில் தள்ளுவதும் வழக்கமாயிற்று.

1979-ஆம் ஆண்டு கவிஞர் காசி ஆனந்தன் சரோஜினி தேவியாரைத் திருமணம் செய்து கொண்டார். அமுதநிலா என்னும் பெண் குழந்தைக்கு தந்தையும் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் குடும்பத்தினர் அனைவருமே தியாகத்தில் ஊறியவர்கள். அவருடைய தம்பியர் இருவர் (சிவஜெயம்—சுதர்சன்) அவர் கூடவே சிறைவாசம் அனுபவித்தவர்கள். தந்தையார், கவிஞர் சிறைச்சாலையில் இருந்தபோது கவலையினால்—இரத்த அழுத்தமும், மாரடைப்பும் ஏற்பட்டு மரணமானார். கவிஞரின் வீடு பல தடவைகள் இராணுவத்தினர் சோதனைக்கு இலக்காயிற்று.

உணர்ச்சிக் கவிஞர் இன்றும் எரிதழல் நடுவிலேயே உட்கார்ந்திருக்கிறார். கரடுமுரடான அடக்குமுறைச் சட்டங்களுக்கு நடுவில் நின்றுதான் அந்தக் குயில் கம்பீரமான குரலில் பாடுகிறது. தமிழர் தலைவர் அமிர்தலிங்கம் அவர்களுக்குப் பக்கத்தில் அவரது அன்புத் தம்பியாக கவிஞர் தமிழ் ஈழத்தில்—விடுதலைக் களத்தில் நிற்கிறார்.

உணர்ச்சிக் கவிஞர் இன வெறியரல்லர். இனவெறியை உயிரோடு வெட்டிச் சாய்க்கும்—வாளை ஈட்டியைக் கவிதையாய்ப் படைக்கும் உலைக்கூடம் அவர். உலகின் நாலு திசைகளிலும் அடிமைப் பட்டுக் கிடக்கும் தமிழினத்துக்குப் புத்துயிரளிக்கவே அவர் உணர்ச்சிக்கவிதைகளை அள்ளிப் பொழிகிறார்.

தமிழ் ஈழம் அவரை ஈன்றது. தமிழ்நாடு அவரைத் தமிழ் ஊட்டி வளர்த்தது. தமிழ் உலகம் அவரைப் பயன் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இந்தியாவுக்குப் பாரதி போல, இத்தாலிக்கு கரிபால்டி போல, தமிழீழ விடுதலை எழுச்சியின் உயிர் நாடியான கவிதைகளைப் புனைந்து வருபவர் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன். அவர் பாடல் வரிகள் துப்பாக்கிக் குண்டுகள். அதை உணர்ந்தே நாம் தமிழர் இயக்கத் தந்தை சி. பா. ஆதித்தனார் அவர்கள் கவிஞருக்கு "உணர்ச்சிக் கவிஞர்" என்னும் பட்டத்தை வழங்கினார்.

முன்னர் சங்க காலப் புலவர்களின் பாடல்களைக் கடல் கோள் சூறையாடிற்று. இன்று கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் எழுதிய பாடல்களை—அவர் கண்முன்னேயே வீட்டைச் சோதனையிடும் போர்வையில்—சிங்கள அரசின் காவற் படையினரும், இராணுவத்தினரும் சூறையாடிச் செல்கின்றனர். சங்கத்தமிழ்ப் பாடல்கள் போல கவிஞரின் பாடல்களும் காலத்தால் காப்பாற்றப்பட வேண்டியவை. அவற்றைப் பாதுகாக்கும் கடமை தமிழகத்துக்கு உண்டு. எனவே, கவிஞரின் படைப்பை எமது முதல் வெளியீடாகக் கொண்டு வருவதில் நாம் பெருமையடைகிறோம்.

எமது இந்த முயற்சிக்குத் துணை நின்று அணிந்துரை வழங்கிய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் இலங்கைத் தமிழர் தலைவர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களுக்கும், பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுக்கும் நன்றி.

எமது இப்படைப்பைத் தமது சொந்தப் படைப்புப் போலத் தனி அக்கறையோடு கவனித்து, அழகாகவும், விரைவாகவும், அச்சிட்டுதவிய மூவேந்தர் அச்சக உரிமையாளர் திரு. முத்து அவர்களுக்கும் எம் நன்றி.

கவிஞரின் தமிழ், தமிழுணர்வு பற்றிய பாடல்களைக் கொண்ட எமது இம் முதற்படைப்பினை வாங்கிப்படிப்பதன் மூலம் அவரது ஏனைய பாடல் தொகுப்புக்கள் வெளி வருவதற்கு ஆதரவு நல்கும்படி தமிழ் நெஞ்சங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

பதிப்பகத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


அணிந்துரை ... 1
வாழ்த்துரை ... 3
பாராட்டுரை ... 4
கவிஞர் வாழ்க்கை ... 10
பதிப்புரை ... 13
பொருளடக்கம் ... 14

உயிர் தமிழுக்கு

1. தமிழ்மேல் ஆணை! ... 17
2. பலி ஆடுகள் ... 18
3. ஏடு படைப்போம்! ... 19
4. களம் புகுவாய்! ... 20
5. மடிந்து போ! ... 21
6. கலங்கரை ... 23
7. மறப்பேனு? ... 24
8. தமிழச்சி! ... 26
9. சாவும் ஒரு வாழ்வே! ... 27
10. ஒன்றுபடு! ... 29
11. விடுதலை கிடையாதோ? ... 30
12. போராடு! ... 31
13. வான் முகிலே! ... 32
14. புகழ்பாடு! ... 33
15. புறப்படடா! ... 34
16. நிலாவே! ... 36




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 17. | பெருமூச்சு | ... | 37 |
| 18. | தாயே! | ... | 38 |
| 19. | போர் முரசு! | ... | 40 |
| 20. | செருக்களம் வா! | ... | 42 |
| 21. | களையெடுப்பு | ... | 43 |
| 22. | கடலே! | ... | 44 |
| 23. | தோழி! | ... | 45 |
| 24. | தழலிடு! | ... | 47 |
| 25. | வீசுக புயலே! | ... | 48 |
| 26. | முரசொலி | ... | 49 |
| 27. | அட தமிழா! | ... | 50 |
| 28. | தோழா! | ... | 52 |
| 29. | பாவலரே! | ... | 53 |
| 30. | தோழரே! | ... | 55 |
| 31. | தாவுவோம்! | ... | 56 |
| 32. | காதலியே! | ... | 57 |
| 33. | பேயன் | ... | 58 |
| 34. | குமுறி எழடா! | ... | 60 |
| 35. | போர்! | ... | 61 |
| 36. | வீரத்தாய் | ... | 62 |
| 37. | எழுச்சி! | ... | 64 |
| 38. | தமிழர் படை! | ... | 66 |
| 39. | வா தமிழா! | ... | 67 |
| 40. | எக்களிப்பு | ... | 69 |
| 41. | தமிழ் உணர்வு | ... | 71 |
| 42. | வாருங்கள்! | ... | 72 |
| 43. | ஆடடா களத்தே! | ... | 74 |
| 44. | எழுகவே! | ... | 76 |
| 45. | கூனுமோ தமிழன் வீரன்? | ... | 77 |
| 46. | உயிரைத் தூக்கி எறி! | ... | 79 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. சீறி எழுந்திடடா! ... 80
48. களம் வருவோம்! ... 82
49. வெற்றி சூடுவோம்! ... 83
50. அந்நாள் எங்கே? ... 84
51. தமிழே! உயிரே! ... 86
52. ஓடுக கூணர்களே! ... 87
53. நாயே! ... 88
54. தமிழர் விடுதலை! ... 89
55. நில்லடா தம்பி! ... 91
56. பாடு குயிலே! ... 92
57. செத்த நாள் ... 93

களமும் கவிஞனும்

1. முழக்கம் ... 95
2. வேலி ஒரு கேடா? ... 97
3. குயிலுக்கு வாழ்வு கொடு! ... 100
4. புகழ் படைப்போம்! ... 102
5. நெருப்புப் பழம் ... 104
6. தம்பிகாள்! ... 107
7. நெற்றி சுழித்தால் நெருப்பு ... 109
8. கியூபா முழக்கம் ... 111
9. பிடி சாபம்! ... 113

தமிழன் கனவு ... 115
(குறுங் காப்பியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் தமிழுக்கு...

தமிழ் நாட்டில் 1959–ஆம் ஆண்டு முதல் 1963-ஆம் ஆண்டு வரை தங்கியிருந்த நாட்களிலும் தமிழ் ஈழத்தில் வாழ்ந்த நீண்ட காலப் போராட்ட வாழ்வின் நடுவிலும் கவிஞர் பாடிய தமிழ்மொழி — இன — நாட்டு விடுதலைப் பாடல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மேல் ஆணை !

தாயே...தமிழே!
தலை கவிழ்ந்த பொற்செல்வி!
நீ கலங்க வேண்டாம்...
வருங்காலம் நின் காலம்!

அன்னாய்...இதுகேள்!
அடுத்த பரம்பரையில்
பொன்னால் முடி நீ
புனை நாள் இவண் செய்வேன்!

எள்ளி நகைத்து
நினைப்பழிப்போன் செந்நீர்
வெள்ளம் குளித்து
விளையாடுவேன் தாயே!

சத்தை இழந்த தமிழ்ச்
சாதி பிழைக்க நான்
பத்தாயிரங் கவிதை
பாடாமல் போவேனோ?

தாயே! துயரம்
தவிர்த்திரடி...மாற்றானை
நாயாய் அடித்து
நடுத்தெருவில் வைக்கின்றேன்!

என்னுயிரைத் தூக்கி
எறிந்து தமிழணங்கே
அன்னை நினதுயிராய்
ஆவேன் நான்...ஆணையடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலி ஆடுகள்

நாங்கள் பலி ஆடுகள்...நம்புங்கள்!
வேங்கடம் ஈழம் இருபால் விளங்க
ஏனை இருதிசை அலைகடல் ஆர்ப்ப
நின்ற மண்ணில் நாளை விடுதலை
ஒன்றே மூச்சாய்த் தமிழன் உயர்த்தும்
வேள்வித் தீயில் வீழ்ந்து மடிவோம்!
ஆணை! இது தமிழ் மண்மேல் ஆணை!
எந்தாய்க் குலத்தீர்! எமக்கெலாம் மானம்
தந்த முலைகளே! வருக! வந்து...
கழுத்தெலாம் மாலை கட்டுங்களம்மா!
சந்தனம் கொணர்ந்து சாத்தி மகிழ்வீர்!
தடவிக் கொடுங்கள்! உங்கள் தமிழ்க்கை
படப்படத் தோள்கள் விம்மிப் பருப்போம்!
அன்னைத் தமிழின் அழுகுரல் கேட்டும்
திண்ணை ஆண்டிபோல் சிலபேர் தூங்கினர்!
நாங்கள் தூங்குதல் செய்யோம்! ஏனெனில்
எங்கள் உடலில் இரத்தம் உள்ளது!
கேளீர்...இந்தக் குருதியை நாங்கள்
வேள்வித் தீயில் விடும்நாள் திருநாள்!
எங்கள் இன்னுயிர் எனப்படும் எங்கள்
தங்கக் காற்று தமிழன் ஊனக்கே!
நாங்கள் பலி ஆடுகள் நம்புங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏடு படைப்போம்!

பாண்டிய மன்னவன் சோழன் பனிவரை
பாய்ந்து கலக்கிய சேர மகன்
ஈண்டு முளைத்த குலத்தில் எழுந்தனை!
ஏடா தமிழா! எடடா படை!
கூண்டுக் கிளிநிலை எத்தனை நாள்வரை?
கூப்பிடு கூப்பிடு வீரர்களை!
ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை
ஆள நினைப்பதில் என்ன குறை?

கோட்டுப் புலிக்குலம் வாழக் குகையுண்டு!
குருவிக்குக் கூடு மரத்திலுண்டு!
காட்டு வயற்புற நண்டுக்குப் பொந்துண்டு!
கஞ்சல் எலிக்கோர் குழியுமுண்டு!
கோட்டை அமைத்துக் கொடியொடு வாழ்ந்தவர்
குலத்துக்கொரு புகல் இங்கிலையோ?
நாட்டை அமைப்பாய் தமிழ்மகனே! புவி
நடுங்கப் புயல்போல் நடைகொளடா!

மானம் அழைத்தது! வீரம் அழைத்தது!
மலைத்தோள் இரண்டும் எழவில்லையோ?
ஊனத் தசைதான் தமிழுடலோ? அட
உணர்ச்சி கடவுள் தரவில்லையோ?
ஏனம் சுமந்து பிழைப்பதற்கோ பிறன்
எச்சில் பொறுக்கவோ தமிழரினம்?
ஈனச் சரிதை கிழியப் புதியதோர்
ஏடு படைப்போம்! எழுதமிழா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் புகுவாய்!

மானம் எனுமொரு பானையில் வாழ்வெனும்
தீனி சமைத்தவனே!—தமிழ்
போனதடா சிறை போனதடா! அட
பொங்கி எழுந்திடடா!

காட்டு தமிழ்மறம்! ஓட்டு வரும்பகை!
பூட்டு நொறுக்கிடுவாய்!—நிலை
நாட்டு குலப்புகழ்! தீட்டு புதுக்கவி!
ஏற்று தமிழ்க் கொடியே!

முந்து தமிழ்மொழி நொந்து வதைபட
இந்தி வலம் வரவோ?—இது
நிந்தை! உடனுயிர் தந்து புகழ்பெறு!
வந்து களம் புகுவாய்!

நாறு பிணக்களம் நூறு படித்தநம்
வீறு மிகுத்த குலம்—பெறும்
ஊறு துடைத்திடு மாறு புறப்படு!
ஏறு நிகர்த்தவனே!

நாலு திசைகளும் ஆள நடுங்கிய
கோழை எனக்கிடந்தாய்!—மலைத்
தோளும் குனிந்தது போலும்! விழித்தெழு!
காலம் அழைக்குதடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடிந்து போ!

தேனைப் பொழிந்தும் கனிகள் சொரிந்தும்
செங்கரும்பைப் பிழிந்தும்
ஆநெய் கறுவா ஏலம் கலந்தும்
அமுதாய்த் தமிழ்ப் புலவன்
ஊனை உயிரை உருக்கும் தமிழை
உன்றனுக்கே தந்தான்...
சோணைப் பயலே! தமிழை இழந்தும்
தூங்கி நின்றாயோடா?

முத்துக் குறளும் காப்பிய மைந்தும்
முதுகாப்பியன் தமிழும்
பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும்
பதிகமும் உலா நூலும்
தித்திக்கும் கம்பன் புகழேந்தி
தேன்தமிழும் வீழ்ந்தே
செத்துத் தொலையப் பகை பொங்கியது!
சிரம் தாழ்ந்தனையோடா?

காள மேகக் கவிதை மழையும்
கவி பாரதி தமிழும்
கோலத் தேம்பா வணியும் அழகு
கொஞ்சு நற்சீறாவும்
தாளம் போட்டு வாழாப் பாரதி
தாசன் வெறித் தமிழும்
ஏலம் போட்டார் பகைவர்! அடநீ
எங்குற்றாயோடா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைத் தமிழன் அன்னைத் தமிழை
முக்கூடல் நிறுவி
கண்ணாய் உயிராய் ஓம்பிய காலம்
கனிந்த புகழெல்லாம்
உன்னை ஒருதாய் உருவாக்கியதால்
உடைந்து துகள்படவே
மண்ணுனது மானம் என வாழ்ந்தாய்!
மடிந்து போ தமிழா!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்கரை

முந்தி முளைத்த கலங்கரை
தமிழ்ப் பரம்பரை—நடுச்
சந்தியில் வீழ்ந்து துடிப்பதேன்?
தாழ்ந்து கிடப்பதேன்?

அள்ளிக் கொடுத்தகை கேட்குதே!
ஓடு தூக்குதே!—இலை
கிள்ளிப் பொறுக்கித் திரியுதே!
உள்ளம் எரியுதே!

மாற்றார் தலைதனில் ஏற்றினாய்
கல்லை! வாட்டினாய்!—இன்று
மூட்டை சுமந்து நடக்கிறாய்!
தாழ்ந்து கிடக்கிறாய்!

ஆதியில் மாடம் அமைத்தவர்
வாழ்வு சமைத்தவர்—அட
வீதியில் காலம் கழிப்பதோ?
நால்வர் பழிப்பதோ?

'முல்லைக்குத் தேரை வழங்கினோம்'
என்று முழங்கினோம்!—இங்கே
பிள்ளைக்குப் பாலில்லை பாரடா!
தருவார் யாரடா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறப்பேனு?

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும்—என்றன்
கட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து
கவலை மிகுந்தாலும்—வாழ்வு
கெட்டு நடுத்தெரு வோடு கிடந்து
கீழ்நிலை யுற்ருலும்—மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ்மகளின் துயர்
துடைக்க மறப்பேனு?


நோயில் இருந்து மயங்கி வளைந்து
நுடங்கி விழுந்தாலும்—ஓலைப்
பாயில் நெளிந்து மரண மடைந்து
பாடையில் ஊர்ந்தாலும்—காட்டுத்
தீயில் அவிந்து புனலில் அழிந்து
சிதைந்து முடிந்தாலும்—என்றன்
தாயில் இனிய தமிழ்மொழியின் துயர்
தாங்க மறப்பேனு?

பட்ட மளித்துப் பதவி கொடுத்தொரு
பக்கம் இழுத்தாலும்—ஆள்வோர்
கட்டி அணைத்தொரு முத்த மளித்துக்
கால்கை பிடித்தாலும்—என்னைத்
தொட்டு விழுந்து வணங்கி இருந்தவர்
தோழமை கொண்டாலும்—அந்த
வெட்டி மனிதர் உடல்களை மண்மிசை
வீழ்த்த மறப்பேனு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கு வெறியர் சிறைமதிலுள் எனைப்
பூட்டி வதைத்தாலும்—என்றன்
அங்கம் பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும்—உயிர்
தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்
தூள்பட நேர்ந்தாலும்—ஒரு
செங்களம் ஆடி வரும் புகழோடு
சிரிக்க மறப்பேனு?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழச்சி !

இலங்கை மலைதனிலே... தமிழச்சி!
    என்ன துயரெலாம் காணுகின்றாயடி!
முழங்கை வலித்திடவே தேயிலை
    முளைகள் பறித்து முகம் சிவப்பாயம்மா.
விலங்கும் உறங்கிநிற்கும் சாமத்தில்
    விழித்து நெடுமலை ஏறி இறங்குவாய்!
பழங்கள் பழுத்திடாதோ உன் காலில்?
    பச்சைக் குருதிநீர் பாயாதோ கண்மணி?

காலைப் பனிநனைவாய்! என்னம்மா...
    காய்ந்து நடுவெயில் தனிலே கருகுவாய்;
பாலை நினைந்தழுவான் உன் பிள்ளை...
    பாவி வெறும்முலை நினைந்தழுவாயடி!
ஏழை அடிமையடி தமிழச்சி!
    இங்கோர் தமிழுடல் ஏனெடுத்தாயம்மா?
ஊழை நினைந்தழவோ? தமிழனின்
    உரிமை இலாநிலை எண்ணி அழவோடி?

காட்டு மலைதனிலே... தமிழச்சி !
    காலம் முழுவதும் நீ உழைத்தென்னடி?
ஓட்டைக் குடிசையொன்றும் வாழ்விலே
    ஓயா வறுமையும் நோயும் இவையன்றி
தேட்டம் எதுபடைத்தாய்? அடி ஒரு
    செம்புப் பணமேனும் தேறியதுண்டோடி?
நாட்டின் முதுகெலும்பே தமிழச்சி!
    நானிலம் வாழநீ மாள்வதோ அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவும் ஒரு வாழ்வே!

ஏடா! தமிழ் வீரா! உனை
எலிபோல் நினைத்தாரா?
வாடா படை யூடே அற
வலியின் துணை யோடே!
நாடா பிணக் காடா என
நால்வர் மடிந்தாலும்
போடா அவர் வழியே! நகை
புரிவாள் தமிழ் மொழியே!

குண்டாந்தடி கொண்டே அடி
தந்தார் வெறியாளர்
என்றால் அது நன்றே! எமை
ஈன்றாள் புகழுண்டே!
பண்டை மொழி என்பார் தமிழ்
பார்ப்போம் அதை வீணர்
வென்று விடுவார்கள்? மற
வேங்கை விடுவானோ?

'முத்தே! முழு நிலவே! விடை
மொழிவாய்!' என இல்லாள்
பத்தே விரல் பற்றி அவள்
பதிலின்வெறி பெற்று...
'சொத்தே! மொழி வித்தே! தமிழ்ச்
சொல்லே! உனக்காகச்
செத்தே மடிகின்றேன்!' எனச்
செல்வாய் தமிழ் ஏறே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கை சிறுதம்பி ஒரு
தந்தை வயதன்னை
மங்கை இள மனையாள் புது
மழலை முதலானோர்
என்கை தனிலுண்டே எனும்
ஏக்கம் விடு தோழா!
சங்கை பெறப் போவார்பெறும்
சாவும் ஒரு வாழ்வே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபடு!

சாதி மதமெனும் பேதங்கள் சாயவே
தமிழா ஒன்றுபடு!
ஆதி மகளெனும் தமிழை அரசியாய்
ஆக்கி வாழவிடு!

கந்தன் பறையனென் றுரைக்கும் கயவனை
கண்ணீர் வர வதைப்பாய்!
இந்துவும் இஸ்லாமியனும் பொருதினல்
இருவரையும் உதைப்பாய்!

ஊருக்கூர் சண்டை தெருத்தெரு சண்டை
உருப்படு வோமோடா?
பாருக்குள் அடிமைத் தமிழர் நமக்குள்ளே
பத்துப் பிரிவோடா?

தேசம் பலவினும் வாழும் காக்கைக்குலம்
சிதைந்து பிரிவதில்லை!
பேசும் மொழியால் அவை ஒன்றுகூடும்
பெருமை நமக்கில்லை!

ஒன்று படடா தமிழா! உறுதுயர்
ஓடப் படை நடத்து!
வென்று புகழ்கொண்டு வாடா! விடுதலை
வேண்டும் தமிழனுக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை கிடையாதோ?

கடமுட என ஒரு கவியிடி
　　கொடியவர் பொடிபட வெடியாதோ?
திடுதிடு மென ஒரு படையணி
　　அடிமைகள் படுதுயர் துடையாதோ?
மடமட எனஒரு நொடியினில்
　　இடுகர விலங்குகள் ஒடியாதோ?
கொடியொடு படையொடு முடியொடு
　　தமிழின விடுதலை கிடையாதோ?

மறவலி மிகுதமிழ் நெறியினர்
　　சிறையக மதில்களை நிறையாரோ?
அறவலி யுடையவர் வெறிகொள
　　உறுபகை தளர்வொடு முறியாதோ?
முறைகெட நெறிசெயு மரசினர்
　　பறையொடு சுடலையில் உறையாரோ?
கறையொடு தமிழ்படு துயர்கெட
　　வருபடை புகழ்மொழி அறியாதோ?

இழிநிலை ஒழியென மறமகள்
　　வளர்இள மழலையை விளியாளோ?
வழிவழி புகழ்நிலை தழுவென
　　உயிர்நிகர் கொழுநனை அழையாளோ?
ஒளிமிகு விழியொடு குலமெனு
　　முணர்வொடு செருவிடை நுழையாளோ
அழகிய தமிழின மொழிமகள்
　　களியினில் முழுநகை பொழியாளோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடு!

செந்தமிழை உயிரெனக் கொண்டவர்
வெந்தழல் விழியாளர் தமிழரின்
சொந்தமான தமிழக மண்மிசை
இந்திமொழி வருமா? எவன் சொன்னவன்?

பண்டை வீரத் தமிழர் பழங்கதை
கொண்ட ஏடுக ளாயிரம் கூறுமோர்
சண்டையும் தமிழ்வீரர் சரிதமும்
கண்டறியாத கழுதை கனைத்ததோ?

எங்கள் மானம் பழித்தொடா இந்தியை
கங்கை நாடர் திணிக்கக் கருதினர் ?
சிங்கமே...தமிழா! களம் வந்தது!
சங்கம் ஆர்த்துப் படைசரி செய்யடா!

வஞ்ச நெஞ்சினர் இந்தி வடவர்
அஞ்சி நடுங்க அணிகள் திரட்டி வா!
நெஞ்சு தூக்கி நில்தமிழா! எழு!
புன்சிரிப்பொடு போர்க்களம் ஆடு போ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான் முகிலே!

இடிக்கின்றாய்...வான்முகிலே!
ஏன் இடித்தாய்? இங்குள்ள
தமிழர் நெஞ்சில்
வெடிக்கின்ற விடுதலையின்
பேரார்வம் வெளிக்காட்ட
விரும்பினாயா?

கருப்பாக வருகின்றாய்...
வான்முகிலே! ஏன் கருத்தாய்?
களத்தில் பாய
விருப்போடு நாள்பார்க்கும்
தமிழ்வீரர் வெறித் தோற்றம்
விளக்கினாயா?

சிரிக்கின்றாய்...மின்னல் வாய்
வான்முகிலே! ஏன் சிரித்தாய்?
சினந்து மண்ணை
எரிக்கின்ற தமிழ்ப்புலவன்
கவிதையினை வானேட்டில்
எழுதினாயா?

ஓடிப்போ...! ஓடிப்போ...!
வான்முகிலே...ஓவென்று
முழக்கமிட்டுப்
பாடிப்போ! அதிரட்டும்
மண்மேடு! காணட்டும்
பகைவர் என்போர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் பாடு!

களமெனில் முழங்கிவரும் ஏறு!—தமிழன்
கங்கு கரை பொங்கிவரும் ஆறு!
உளபகைவர் இலைஎனவே
உடல் எரிந்து நீறுபட
பளபளக்கும் வெந்தழலின் கூறு!—தமிழன்
படைவலியும் தோள்வலியும் நூறு!

மானமே தமிழனுயிர் அங்கம்!—தமிழன்
மனம் இனிய தமிழ்குலவு சங்கம்!
தேனெனும் தமிழ்அழியும்
சேதிவரும் போதினிலே
வானளவு பாயுமறச் சிங்கம்!—தமிழன்
மாசுபடாத் தூயமணித் தங்கம்!

தமிழன் உடற்குருதி சூடு!—தமிழன்
தனை எதிர்ப்போன் பாடுபெரும் பாடு!
இமயம் கடாரமெனும்
இடம் பலவென்றவனலவோ
தமிழனுக்கு யாவனுளன் ஈடு?—தமிழன்
தாங்கு புகழைத் தமிழா! பாடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறப்படடா!

எழுந்திரடா தமிழா!
ஏடா...என்னடா உனக்
கின்னும் உறக்கமோடா?
பழந்தமிழர் நிலத்தை
ஈழம் என்றதோர் மண்ணைப்
பறி கொடுப்ப தோடா?
அழுந்திடவோ பிறந்தோம்?
மூடா! ஆமை போலிருந்தால்
வழி பிறக்குமோடா?
இழந்த புகழ் பெறுவோம்
வாடா! நாமின்றி இங்கோர்
ஆட்சி நடப்பதோடா?

குடிப் பெருமை அனைத்தும்
சாய்ந்து குப்புற விழ
நாங்கள் குறைபாடுற்ருேம்!
அடக்குமுறை தொடுக்கும்
பேயர் ஆட்சியின் பிடி
ஒன்ருல் அவதியுற்றோம்
துடித்தெழுவோம்...நமது
வீரத் தோள்களுக் கொரு
வேலை துவக்கி வைப்போம்!
படைக் களத்தில் நடந்து
பார்ப்போம்! மார்புகள் எழப்
பாய்ந்து புறப்படடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைக் கதவு திறந்து
வாவென் றழைப்பினும் சரி
ஆங்கே செருக்களத்தில்
நரிக் குரல்கள் எழுந்து
காதைப் பிளப்பினும் சரி
நாங்கள் பணிய மாட்டோம்!
வெறிப் படைகள் நுழைந்து
தாக்கி நொறுக்கினும்: அட...
வீழ்ந்து வணங்குவோமா?
மறக்குலத்தில் வளர்ந்த
வீரன் உயிரையும்விட
மானம் பெரிதன்றோடா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாவே !

நிலாவே! நீயேன் தமிழர் நிலமிசை
உலா வருகின்றாய்? ஓடிப் போய்விடு!
அடிமைச் சிறையின் இடையே அழுந்தி
துடியாய்த் தமிழன் துடித்து நலியும்
கண்ணீர் ஆற்றுக் காவிரி மண்ணில்
வெண்ணிலா உனக்கு விழல்உலா வேறு?
போ! போ! நிலாவே! போய்எங் கேனும்
வாழ்வுடை யோர்முன் வலம்வா! இங்கே...
ஒடிந்த தமிழன் உலர்ந்த தமிழன்
மடிந்து மடிந்து வாழும் தமிழன்
கண்ணில் நெருப்பு வார்க்காதே...
மண்ணில் எங்கேனும் மறைந்துபோ நிலாவே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமூச்சு

வலிபடைத்து முறமெடுத்துப்
புலியடித்த தமிழகம்
கிலிபிடித்த நிலைபடைத்து
வெலவெலத்து வாழ்வதோ?

பகையொதுங்கப் பறைமுழங்கிப்
புகழடைந்த தமிழகம்
கதிகலங்கி விழி பிதுங்கி
நடுநடுங்கி வாழ்வதோ?

படைநடத்தி மலைமுகத்தில்
கொடிபொறித்த தமிழகம்
துடிதுடித்து அடிபிடித்து
குடிகெடுத்து வாழ்வதோ?

கடல்கடந்த நிலமடைந்து
கதையளந்த தமிழகம்
உடல்வளைந்து நிலைதளர்ந்து
ஒளியிழந்து வாழ்வதோ?

மகனிறக்க முலையறுக்க
முடிவெடுத்த தமிழகம்
புகழிறக்க மொழியிறக்க
வெளிநகைக்க வாழ்வதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயே !

அன்னையே! என்றன் தாயே!
அம்மா நீ அடுத்தாரைப் போல்
தின்னவும் காலை நக்கித்
திரியவும் படைத்திடாமல்
என்னையேன் தமிழை எண்ணி
ஏங்கிடப் படைத்தாய்? இங்கே
உன்னரும் பிள்ளை நாளும்
உயிர் துடிக் கின்றேன் தாயே!

கும்பிட்டால் பல்லைக் காட்டிக்
குழைந்தால் நான் குனிந்துபோனல்
நம்பிக்கையொடு மாற்ருன் கால்
நக்குவேன் என நாணுது
தம்பட்டம் அடித்தால் நாளை
தாங்கலாம் பதவி கோடி!
வெம்பிப்போய் உலர்கின்றேன் யான்...
வீரமேன் கொடுத்தாய் தேவி?

பாரம்மா...முன்னுள் என்னைப்
படுக்கையில் அருகே வைத்து
சேரனுர் கதைநீ செப்பிச்
சிறியேனைக் கெடுத்ததாலே
பாரம்மா... மாற்ருனுக்குப்
பணியான் உன் பிள்ளை...வீதி
ஓரமாய்க் கிடந்தும் காய்ந்தும்
உரிமைப்போர் நிகழ்த்துகின்ருன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானத்தின் வடிவே! என்னை
    மகவாக ஈன்ற தாயே!
தேனொத்த முலைப்பா லோடும்
    தீரத்தை அளித்த தேவி!
ஈனத்தை ஏற்கா நெஞ்சம்
    எனக்களித்தவளே! அன்னாய்!
ஊனத்தின் உடல் வீழ்ந்தாலும்
    உரிமைப்போர் நிறுத்தே னம்மா!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் முரசு!

தவளைக் குரலில் முழங்கினால் இங்குள்ள
தாழ்வு மறைந்திடுமோ?—நாலு
கவிதை எழுதிக் கிழித்துவிட்டால் எங்கள்
கவலை குறைந்திடுமோ?—வீட்டுச்
சுவருக்குள் ஆயிரம் திட்டங்கள் தீட்டிச்
சுதந்திரம் வாங்கிடவோ?—தலை
குவியக் கிடந்த செருக்களம் ஆடிக்
குதிக்கப் புறப்படடா!

உச்சியில் நின்று விழுந்துவிட்டோம் அட
உணர்ச்சி இழந்துவிட்டோம்!—உயிர்
அச்சத்தினால் இங்கு சாய்ந்துவிட்டோம்!—வீட்டில்
அடங்கி இருந்துவிட்டோம்!—தெருப்
பிச்சை எடுத்து வளர்ந்துவிட்டோம்—புகழ்
பேண மறந்துவிட்டோம்!—இந்த
எச்சில் நிலை இனி இல்லை எனக்கொடி
ஏற்றிப் புறப்படடா!

நாற்றிசை மண்ணும் கடலும் மலைகளும்
நடுங்க வலம் வருவோம்!—பெரும்
ஆற்றல் மிகுந்தவள் அன்னை அவள்மிசை
ஆணை எடுத்திடுவோம்!—இங்கு
வேற்று நிலத்தவர் ஆட்சியெனில் அந்த
விலங்கை உடைத்தெறிவோம்!—அட
சோற்றுக்கு வாழ்ந்து சுருண்டது போதும்!
சுழன்று புறப்படடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் அனைத்தையும் வென்ற குலத்தினை
ஊழ்வினை வெல்லுவதோ?—எங்கள்
மலைகள் எனுமிரு தோள்களையும் விதி
மங்கை மறந்தனளோ?—அவள்
கலகம் நடத்தித் தமிழர் குலத்தைக்
கவிழ்க்க முடியுமோடா?—அன்னை
முலையில் பருகிய மூச்சுடனே பறை
முழக்கிப் புறப்படடா!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செருக்களம் வா!

மூச்சை எடுத்தெறி தமிழா!
முழங்கு மேகமாகிக் கிளம்பு:
சீச்சீ அடிமையாய் வாழ்ந்தோம்...
செந்தமிழ்த்தாய் இதற்கொடா பெற்ருள்?

கூனி வளையவோ மேனி?
கும்பிட்டுக் கால் பிடிக்கவோ கைகள்?
தீனி மகிழவோ வாழ்க்கை?
செந்நீர் ஆடி முழக்கடா சங்கம்!

நாங்கள் கவரிமான் சாதி!
நாய் போல் எசமான் அடிகளை நக்கோம்!
தீங்கு படைப்பவன் எங்கே?
தேடி உதைப்போம்! செருக்களம் வாடா!

ஓங்கி முழங்குக தாளே!
உடைந்து நொறுங்கி விலங்கு சிதறுக!
தூங்கி வழிந்தது போதும்!
துள்ளி எழுக தமிழ்த்திருநாடே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களை எடுப்பு!

களை எடுப்போம் வாரீர் தமிழரே!
தமிழரைக் காட்டிக் கொடுக்கும் தமிழர்
தலை எடுப்போம் வாரீர்! மீண்டும் நாம்
தலையெடுக்க வேண்டுமாயின் இவரை
முளை தனிலே கிள்ளி எறிதலே
முதல் வேலை! ஓடிப் புறப்படுங்கள்!
கொலை நெடுவாள் தூக்கி இவர்சிந்தும்
குருதியில் பகைவரை மூழ்கடிப்போம்!

நெடுங்கடலை நாங்கள் அடக்கலாம்
புயலை நிறுத்திப் போர்செய்திடலாம்
சுடும் அனலை வென்று நொடிப்போழ்தில்
கொடியும் தூக்கலாம் போராடி மாற்றார்
விடுங்கணைகள் கோடி எனினும் போய்
எதிர் நின்று வென்றி கொண்டு வரலாம்!
கொடுங் களைகள் இருக்கும் வரை நாங்கள்
இவை செய்யோம்! களை கொழுத்துவீரே!

நிறை கருவில் எமைப் பல திங்கள்
சுமந்த தாய் எனினும் சரியே இன்னல்
சிறிதளவுமின்றி எமை வளர்த்துச்
சிறப்பீந்த தந்தை எனினும் சரியே
உறுபகைவர் நட்பில் மகிழ்ந்தெங்கள்
தமிழருக்குலை வைப்பராயின் ஓடி
வெறியொடவர் உடலம் வீழ்த்துமின்கள்!
அதன்பின்போர் விழாவும் நடத்திவைப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலே!

ஈழம் தமிழகம் எனுமிரு நாட்டிடை
ஓலம் இடுமோர் உப்புக் கடலே!
இந்நாள் இடிநிகர் அலைக்குரல் எழுப்பி
என்னதான் நீ இரைந்து நின்றாலும்
கோடிக் கரங்கள் ஒருநாள் உன்னை
மூடித் தமிழ்மண் போடுவதுண்மை!
அந்நாள் உனது சாநாள் ஆகும்!
நாங்களெல்லாம் கரத்தே பறைகள்
தாங்கி நின்று தாளம் கொட்டுவோம்!
உள்ளத் தோணியில் ஊர்ந்த தலைவனை
கள்ளத் தோணி ஆக்கிக் கனிமகள்
ஈழநாட்டில் எலும்பாய் உருக
காளையைத் தமிழ்நாட்டுக் கனுப்பினாய்!
அலறும் தாயைத் தமிழகத் தமர்த்தி
குழறும் சேயைக் கொழும்பில் விட்டாய்!
அண்ணன் ஒருவன் தொண்டியில் புலம்ப
தம்பி ஒருவனைக் கண்டியில் வைத்தாய்!
கடலே! உன்னை இனியும் தமிழர்
விடுவார் என்று கருதுதல் வேண்டா!
நின்றன் சாநாள் நெருங்கி விட்டது!
வெறி அலைக் கரங்கள் வீசும் உன்னைச்
சிறைசெய் தடக்கி நின்னுயிர் சிதைத்து
மண்ணிடும் நாள்வரை ஓயோம்...
அந்நாள் தமிழர் ஆளுநாள் கடலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழி!

நானோர் கனாக்கண்டேன் தோழி!—தமிழ்
நாட்டின் விடுதலை கேட்கப் பிறந்தவர்
தானை நடத்தினர் தோழி!—அங்கு
சட்டம் உடைந்தது! பகைவர் தலைகள்
வானில் பறந்தன தோழி!—இந்த
வையம் குருதியில் தோய்ந்து கிடந்தது!
மானத்தின் வேகமோ தோழி!—தமிழ்
மாந்தரின் வீரத்தை என்னென்று சொல்வேன்?

ஈழத்தில் சிங்களம் என்றார்! — தமிழ்
இல்லத்தில் இந்திதான் என்றும் குலைத்தார்!
வேழத்தை வென்றவர் நாட்டில்—இந்த
வீணர்கள் ஏன் வந்து மோதினர் தோழி?
கூழுக்கு வழியற்றுப் போனோம்—என்றால்
குலவீரம் கூடவா இல்லாமல் போனோம்?
பாழுக்கு வந்தார்கள் தோழி!—வந்த
பகைவரை வணங்காத தமிழ்நாடு வாழி!

வீண்சண்டை போட்டதும் இல்லை! — தமிழன்
வீணாக வந்ததை விட்டதும் இல்லை!
தூணொன்று சாய்ந்தாலும் சாயும்—தமிழர்
தோள்வீரம் இதுவரை சாய்ந்ததே இல்லை!
ஆணென்று வாழ்ந்தவரெல்லாம்—இங்கே
ஆமைபோல் அடிமைபோல் உயிர் வாழ்ந்ததில்லை!
பூணாத போர்க்கோலம் பூண்டார்! — பகைவர்
புலியோடு மோதினர் என்செய்வோம் தோழி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலர் வரவில்லைத் தோழி!—அவர்
களத்திலே இருக்கட்டும்! இங்கென்ன வேலை?
மோதட்டும் பகைவர்கள் முன்னால்—தோழி
முத்தமும் சத்தமும் வெற்றிக்குப் பின்னால்
மாதர்கள் வீரமே பெரிதாம்! — அவர்
மாண்டாலும் போரிலே மாளட்டும் என்பேன்!
ஆதலால் இசைபாடு தோழி! — தமிழ்
அன்னையின் புகழ்பாடு! வாழட்டும் நாடு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தழலிடு !

காட்டிக் கொடுப்பவன் எங்கே?—அந்தக்
கயவனைக் கொண்டு வா! தூணோடு கட்டு!
சாட்டை எடுத்துவா இங்கே!—தம்பி
சாகும்வரை அடி! பின்பு கொளுத்து!

அன்னைத் தமிழை மறந்தான்!—பாவி
அடுத்தவன் கால்களை நக்கிக் கிடந்தான்!
என்ன கொடுமை இழைத்தான்!—தீயன்
எட்டப்பனார் வேலை செய்து பிழைத்தான்!

மாற்றார்க் கழைப்பு விடுத்தான்!—வீட்டில்
மதுவும் கொடுத்தான்! மகளும் கொடுத்தான்!
சோற்றுப் பதவிகள் ஏற்றான்!—மானம்
தூள் தூளாய் ஆக்கி நெருப்பிலே போட்டான்!

பல்லாயிரம் நாட் பயிரை—வீரம்
பாயும் தமிழ்க் குல மாந்தர் உயிரை
எல்லாம் நிறைந்த தமிழை—தழலில்
இட்டவன் உடல்மேல் இடடா தழலை!

தீயன் உடல்தீயத் தீவை!—எங்கள்
தெய்வத் தமிழ்வாழ இவன் சாவு தேவை!
பாயும் புலியே! தமிழா!—தம்பி!
பச்சைத் துரோகி விழப்பாய்ந்து வாடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீசுக புயலே!

வீசுக புயலே! வீசுக புயலே!
விடுதலை உணர்வில் ஆடினர் தமிழர்!
வீசுக...வெள்ளம் விரைந்து வரட்டும்!
வெடித்துப் பாய்க! விண்ணை மோதுக!
வீசுக புயலே...வீசுக நன்றாய்!
வெள்ளி வாளை விசிறி மின்னுக!
வீசுக சிறையின் வேலி விழட்டும்!
வெளுத்து வாங்குக! வெற்றி நமதே!

மண்ணைக் குடைந்தால் மணிகள் கிடைக்கும்!
மலையைக் குடைந்தால் வைரம் கிடைக்கும்!
விண்ணைக் குடைந்தால் நிலவு கிடைக்கும்!
வேறெது வேண்டும்? இங்குள மாற்றார்
கண்ணைக் குடைந்தால் விடிவு கிடைக்கும்!
கவிதை பாடவோர் வாய்ப்புக் கிடைக்கும்!
எண்ணிக் குடைந்து வீசுக புயலே!
எங்கள் விடுதலை இயக்கம் நீயே!

நாளை விடிந்தால் வேலை முடிந்தது!
நாடு பிறந்தது! வீசுக புயலே!
கோழையர் இல்லை தமிழக மண்ணில்!
குழுறி ஆடுக! ஆடுக பார்ப்போம்!
தோளை நிமிர்த்திய வீரர் துள்ளினர்!
தொல்லை மடிந்தது வீசுக புயலே!
வேளை மலர்ந்தது! வீசுக! வீசுக!
விளித்தது சங்கம்! ஒலித்தது முரசே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசொலி

தீம் தீம் தீமென முழங்கு முரசே!
செந்தமிழ் நாட்டின் தீராப் பிணிகள்
போம் போம் போமென முழங்கு முரசே!
புன்மைகள் தீரப் பொங்கி முழங்கு!

தீம் தீம் தீமென முழங்கு முரசே!
செவ்விழி உடையோம் செருமாண் தமிழர்
யாம் யாம் யாமென முழங்கு முரசே!
யானைகள் புலிகள் ஆனோம் முழங்கு

ம் தீம் தீமென முழங்கு முரசே!
சிறைமதில் சாய்ந்து சிதறிப் போமா?
ஆம் ஆம் ஆமென முழங்கு முரசே!
அரசொடு தமிழன் ஆளமுழங்கு!

தீம் தீம் தீமென முழங்கு முரசே!
தீயவெம் பகைவர் ஓடமுழங்கு!
தீம் தீம் தீமென முழங்கு முரசே!
தேச விடுதலை பாட முழங்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட தமிழா!

என்னருந் தமிழா!
ஏனடா.....ஆண்டான்
புண்ணினை நக்கிப்
போட்டதை விழுங்கும்
உண்ணி நாயானாய்
ஒழிந்ததோ மானம்?
கண் சிவந்தோடிக்
களம் புக வாடா!

ஆண்டவன் அன்றோ?
அட தமிழா நீ
பாண்டியன் அன்றோ?
பாரடா உன்னை
ஈண்டு மாற்றார்கள்
எச்சிலால் வளர்த்தார்...
கூண்டினை நொறுக்கு!
குதியடா வெளியே!

உரிமை இழந்தாய்!
ஊழியஞ் செய்தாய்!
வரிகள் கொடுத்தாய்!
வளைந்து பிழைத்தாய்!
விரிபழம் புகழை
விற்றனை பாவி!
எரிமலை ஆகடா!
எழுக! நீ எழுக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கடா வாளை!
    தோளை உயர்த்தடா!
தாக்கடா பகையை!
    தலைகள் வீழ்த்தடா!
நீக்கடா தளையை!
    நிமிர்ந்து நில்லடா!
ஆக்கடா கொற்றம்!
    ஆளடா இன்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழா!

என்னைப் போலொரு மானிடன் என்னை
எப்படித் தாழ்த்தலாம் தோழா?—அவன்
அன்னை போலவே என்னையும் அன்னை
ஆக்கினள் நானென்ன கீழா?

ஆணை செலுத்தவும் ஆளவும்இங்கே
ஆவி அவனெடுத்தானு?—பிச்சைப்
பானை ஏந்திய கையனுய் இந்தப்
பாவி பிறந்து வந்தேனு?

காற்று வானிலே சிட்டுக்கள் கண்டேன்...
களிப்பினில் என்னை மறந்தேன்—இன்பம்
ஏற்று மறுபொழு தென்கரம் பார்த்தேன்...
இருகை விலங்கோ டிருந்தேன்!

அஞ்சி நடுங்கியும் நெஞ்சம் பதைத்தும்
ஆயுள் கழிந்தது தோழா!—உயிர்
கொஞ்சம் இருந்தது...கூறடா இந்தக்
கொடுமைக்குப் பேரென்ன ஊழா?

என்ன தமிழனே? ஏன் பிறந்தேனே?
என்னடா அடிமையின் வாழ்வு!—சீச்சீ
இன்னோர் மனிதனுக் கூழியஞ் செய்தேன்!
இருப்பதிலும் நன்று சாவு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவலரே!

என்ன கவி எழுதுகிறீர்
பாவலரே! போலிகளாய்
இருக்கின்றீர்கள்!
கன்னி அருந்தமிழணங்கு
கையிரண்டில் விலங்குடையாள்
கண்ணீர் கண்டும்
செந்நெருப்பு விழிகொண்டு
சீறியெழ மாட்டீரோ?
சீச்சீ! வானில்
புண்ணிருந்தாற் போலிருக்கும்
நிலாவினையும் காதலையும்
புனைகின்றீரே!

பொங்கு வெறித் தமிழ்கொண்டு
போர்க்களத்தே ஔவையெனும்
பூவை அந்நாள்
செங்குருதி குளித்திருந்த
தமிழ்மன்னர் சிறப்பெல்லாம்
கவிதை ஆக்கிச்
சங்க மணித் தமிழ்தந்தாள்...
அடநீங்கள் தாய்த்தமிழை
மறந்து நாட்டில்
தெங்கிளநீர் முலைபாடித்
திரிகின்றீர்...கவிஞர்களா?
செத்துப் போங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் பற்றி மொழி பற்றி
ஒரு பொழுதேனும் நீவிர்
உணர்கின்றீரா?
தீ பற்றி எரிகின்ற
வீட்டினிலே இசைபாடிச்
சிரிக்கின்றீர்கள்!
வாய்பற்றி எரியாதா?
தமிழன்னை மனம் நொந்து
வயிறெரிந்தால்
நீர்பற்றும் எழுத்தாணி
நொறுங்காதா? விளையாடல்
நிறுத்துமின்கள்!

சொல்லடுக்கிச் சொல்லடுக்கிச்
சோடித்த பாடலெலாம்
போதும்...மாற்றார்
பல்லுடைத்து நமக்குற்ற
பழிதுடைக்க நாலுகவி
படைப்பீர்...ஓடி
வில்லெடுத்து வேலெடுத்துத்
தமிழிளைஞர் வெளிக்கிளம்ப
நெருப்பு வீசும்
சொல்லெடுப்பீர்...பாவலரே!
இல்லையெனில் தொழில்விடுங்கள்!
அதுவும் நன்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழரே !

தட்டுங்கள் தோழரே! தட்டுங்கள் தோழரே!
தமிழர் நெஞ்சமெலாம் தட்டுங்கள் தோழரே!

பட்ட நரம்பில்
பழையபடி செந்நீர்
சொட்ட உணர்ச்சி
சுரக்க விரைந்தோடி...

தட்டுங்கள் தோழரே! தட்டுங்கள் தோழரே!
தமிழர் நெஞ்சமெலாம் தட்டுங்கள் தோழரே!

மானம் உறங்கியது!
மான மறத்தமிழர்
தானை உறங்கியது!
தாவி விரைந்தோடி...

தட்டுங்கள் தோழரே! தட்டுங்கள் தோழரே!
தமிழர் நெஞ்சமெலாம் தட்டுங்கள் தோழரே!

மணித் தமிழின் கண்ணீர்
மறைய உலகில்
தனித் தமிழன் ஆட்சி
தழைக்க விரைந்தோடி...

தட்டுங்கள் தோழரே! தட்டுங்கள் தோழரே!
தமிழர் நெஞ்சமெலாம் தட்டுங்கள் தோழரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவுவோம்!

பண்டை நாள் பகைமை கொண்ட நாடுகளை
வென்ற மானிடர்கள் வீழவோ?...
மண்டை ஓடுகளை நண்டின் ஓடுநிகர்
துண்டு செய்தவர்கள் தூங்கவோ?
சண்டையின் பெருமை கொண்ட தமிழர்கள்
கண்ட கண்டபடி சாகவோ?
குண்டை ஏந்தியெமை அண்டும் மாற்றானை
முண்டமாக்கி வர ஓடுவோம்!

குங்குமக் குருதி பொங்கிடத் தமிழன்
வெங்களச் செருவில் ஆடவும்
சிங்களப் பகைவர் கண்களைத் தமிழர்
தங்கொடித் திரைகள் மூடவும்
கங்கையின் வடவர் சங்கடப் படவும்
இங்கு வெம்பரணி பாடவும்
சங்கு கத்தியது! பொங்கு மாமறவர்
செங்களத்து மிசை தாவுவோம்!

தட்டுவோம் தோள்கள்! கொட்டுவோம் முரசு
வெட்டுவோம் தளைகள் வெட்டுவோம்!
எட்டெனும் திசைகள் முற்றிலும் கொடியர்
வெற்றுடல் கால்கொண் டெற்றுவோம்!
கிட்டுவாள் இனிய வெற்றி மாமகளின்
ஒட்டிலே புகழை முட்டுவோம்!
பட்டிலே கொடிகள் வெட்டவான் வெளியில்
விட்டிசைகள் மிழற்றுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலியே !

காதலியே! உள்ளமெனும் காயத்தோடும்
கனத்துவரும் மூச்சோடும் கண்ணீரோடும்
வாதையுறவோ இவனைக் காதலித்தாய்?
சாதலுறவோ இவனைக் காதலித்தாய்?

புல்லைப்போல் மெலிந்த உனைக் காதல் நோயால்
புண்ணாக்கி மென்மேலும் மெலியவைக்கும்
கல்நெஞ்சக் காரனைஏன் காதலித்தாய்?
களம்நின்ற வீரனை ஏன் காதலித்தாய்?

அமிழ்தொன்றை எதிர்பார்க்கும் இளமைக்காலம்
அனலொன்றை நின்மேனி அருந்தவிட்டு
தமிழென்றும் போரென்றும் களத்தே தங்கும்
தடித்தமரம் இதையோடி காதலித்தாய்?

சுகங்காட்டும் காதலர் தோள்கள்மீது
துயில்கொள்ளும் எழில்மாதர் வாழும் மண்ணில்
முகங்கூடக் காட்டாது களத்தே வாழும்
முண்டத்தை ஏனம்மா காதலித்தாய்?

பொறு கண்ணே! போர்வாழ்வு நெடுநாள் இல்லை!
பூக்கட்டும் தமிழாட்சி! மறுநாள் உன்றன்
சிறுகாலில் விழஓடி வருவேன் அத்தான்!
தித்திக்கும் முத்தம்உன் செவ்வாய்க்கேதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேயன்

அருவண்ணத் தமிழ் மண்ணில்
ஆரியனை முன்போர் நாள்
வருக என அழைத்திங்கே
வாழ்வித்த முதுதமிழன்
சுருள்குடுமி ஆரியனின்
சூழ்ச்சிக்கே பலியானான்...
பெருமனத்தால் கெட்ட
பேயனுக்குப் பேர்தமிழன்!

கருநெஞ்சன் வங்கத்தான்
கயவன் விசயனென்பான்
வருபோதில் இலங்கைமண்
வாசல் திறந்துவைத்த
உருகுவிழல் மனத்தமிழன்
ஒளி ஈழம் பறிகொடுத்தான்...
பெருமனத்தால் கெட்ட
பேயனுக்குப் பேர்தமிழன்!

அரு ஞாலத் திசையெல்லாம்
அங்கெல்லாம் இங்கெல்லாம்
கருகி உழைத்து வளம்
கனிவித்த உயர் தமிழன்
எருவாகிப் பிறன்வாழ்வை
எழிலாக்கித் தான் மாய்ந்தான்...
பெருமனத்தால் கெட்ட
பேயனுக்குப் பேர்தமிழன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவோங்கு பாரதம்
தெய்வமென்றும் சிங்களம்
தருசுகமே சுகமென்றும்
தனை மறந்த பெருந்தமிழன்
ஒருநாடு தனக்கின்றி
ஊர் ஊராய் உதைபட்டான்...
பெருமனத்தால் கெட்ட
பேயனுக்குப் பேர்தமிழன்!

அருளாளன் எந்தமிழன்
அனைத்தூரும் ஊரென்றான்...
எருமை இவனை ஒருவன்
'ஏ!கள்ளத் தோணி!' என்றான்!
பொருமி எழா இழிதமிழன்
பொறுத்திருப்போம் என்றானே...
பெருமனத்தால் கெட்ட
பேயனுக்குப் பேர்தமிழன்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமுறி எழடா!

உன்னை எடுத்தெறி தமிழா!
    ஒதிய மரம்போல் நின்றனை பேடி!
அன்னை துடித்திடல் அழகா?
    அவள் படுந்துயர் எத்தனை கோடி!
தன்னை மறந்தொரு வாழ்வா?
    தமிழ்மண் அன்றோ நம்முயிர் நாடி?
முன்னைக் கதைகள் அளப்பாய்...
    முண்டம்! எங்கடா மூவேந்தர் பாடி?

மேடைத் தமிழ்விழா வைப்பாய்!
    மேனிசிலிர்க்க வெறும்வாய் பிளப்பாய்!
ஓடைத் தவளைபோல் கத்தி
    உலகில் என்னதான் பண்ணிக் கிழிப்பாய்?
பாடை உடன்கொண்டு வாடா!
    பகைவன் களத்தே விழப்பாய்! அழிப்பாய்!
பீடை தொலைவதெந் நாளோ?
    பிள்ளாய் விழிப்பாய்! பிள்ளாய் விழிப்பாய்!

எட்டி உலகினை நீ பார்!
    எங்கும் விடுதலை வாழ்வே இருக்கும்!
கட்டி உனைமட்டும் போட்டார்!
    கைவிலங் கென்று நொறுங்கிப் பறக்கும்?
தட்டி எழுக உன் தோளை!
    தாவுக போரில்! இத்தாய்மண் சிரிக்கும்!
கொட்டி நிறைத்திடு குருதி!
    குமுறி எழடா...விடுதலை பிறக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்!

எழுந்தது தமிழன் தோள்!
இடிந்தது சிறையின் தாள்!
சுழன்றது மறவன் வாள்!
பிறந்தது தமிழர் நாள்!

திரிந்தது பொறிகொள் தேர்!
எரிந்தது பகைவன் ஊர்!
பொழிந்தது குருதி நீர்!
நிகழ்ந்தது தமிழன் போர்!

அதிர்ந்தது முழவின் தோல்!
அழிந்தது திசை ஓர் பால்!
பறந்தது வெறியர் கோல்!
பிறந்தது புறப்பா நூல்!

குவிந்தது பகைவர் ஊன்!
மகிழ்ந்தது கழுகு தீன்!
நிமிர்ந்தது தமிழர் கூன்!
பறந்தது புலிவில் மீன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத்தாய்!

தாலாட்டெனும் தமிழைத்
தவிர்ந்த பிற தமிழனைத்தும்
தமிழே அம்மா!
காலாட்டித் தமிழினத்தார்
கண்மூடி உறங்குதற்கோ
இஃது காலம்?
ஏன் பாட்டி பாடுகிறாய்?
இப்போதே போ! எனது
பிள்ளை கையில்
கூர்ஈட்டி ஒன்றெடுத்துக்
கொடு! களத்தே பாயட்டும்
குருதி வெள்ளம்!

தாயா நான்? யார் சொன்னார்?
தசைகொடுத்தேன்...அவ்வளவே!
தமிழ்த்தாய் அன்றோ
சேயவனின் உடல் தாங்கும்
செங்குருதி மணி நீரின்
சொந்தக்காரி!
தீயோர் தம் கொடுஞ்சிறையில்
வாடுகிறாள் தமிழன்னை!
சீச்சீ...இங்கே
வாய்மூடிக் கண்மூடி
உறங்குதற்கோ வளர்க்கின்றேன்
உதவாப் பிள்ளை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவென்று வீசுகின்ற
புயல்வெளியே மின்வெளியே
உடைந்து வீழ்ந்து
போமென்று வெடிக்கின்ற
வான்வெளியே இவ்வேளை
புதல்வன் உள்ளே
யாமின்று பாடுகின்ற
தாலாட்டில் உறங்குதற்கு
நீதி யாதோ?
சாவொன்று பாய்ந்து தமிழ்
தனையழிக்க வரும்போதோ
தமிழா தூக்கம்?

தேன்கட்டி தோற்றுப்போம்
இன்தமிழைப் பெற்றெடுத்த
தமிழ்த்தேன் நாடே!
ஏன் தொட்டில் ஆட்டுகிறாய்?
கயிறுகளை அறுத்துவிடு!
பிள்ளை தூங்கும்
பூந்தட்டைச் சிறு பாயை
தலையணையைத் தூக்கி எறி!
இப்போதே போ...
நீந்தட்டும் செந்நீரில்
உன்பிள்ளை! நிகழட்டும்
ஒருபோர் இன்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சி!

பொறிகக்கும் விழியோடு புறப்பட்டு விட்டோம்!
போராட நாள் குறித்தோம்!
எறிகுண்டு பாய்ந்தாலும் இருகைகொண் டேற்போம்!
எதற்கும் நாம் துணிந்துவிட்டோம்!
நெறிகெட்ட பகைவரின் முறைகெட்ட வாழ்வால்
நெருப்பாக மாறிவிட்டோம்!
வெறிகொண்டு தாவினேம்! வீரத்தின் மடியில்
விளையாடத் தொடங்கிவிட்டோம்!

திசையெட்டும் அதிரயாம் பறைகொட்டி நின்றோம்!
தெய்வத்தை வணங்கி வந்தோம்!
தசையெலாம் முறுக்கேறி நின்றோம்! எழுந்தோம்!
தாயின் மேல் ஆணையிட்டோம்!
வசை கேட்டு வாழாத வரலாறு கொண்டோம்!
வல்லமை நூறு கொண்டோம்!
இசை பெற்று மிளிர்கின்ற எதிர்காலம் ஒன்றை
இப்போதே செய்து வைப்போம்!

கடல் பொங்கினுற்போல் உடல்பொங்கி வந்தோம்!
களத்திலே ஆட வந்தோம்!
படைகொண்டு மானத்தின் நடைகொண்டு வந்தோம்!
பழி தீர்க்க ஓடிவந்தோம்!
திடல் பள்ளமாகத் திசைகள் நடுங்கத்
திடுதிடு மென்ன வந்தோம்!
தடைகளை வெல்வோம்! விடுதலை கொள்வோம்!
தமிழர் யாம் ஓயமாட்டோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறங்கொண்டு விளையாடும் திறங்கொண்ட தமிழர்
மலைகொண்ட தோள்கள் கொண்டோம்!
முறங்கொண்டு புலியோடு மோதினோம் அந்த
மூச்சோடு போராடுவோம்!
புறம்கொண்டு வாழ்வெலாம் புகழ்கொண்டு நின்றோம்!
புதியதோர் ஏடுசெய்வோம்!
அறங்கொண்டு நின்றவர் அனல்கொண்டெழுந்தோம்!
அன்னையை வாழவைப்போம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் படை !

மறவர் படைதான் தமிழ்ப்படை!—குல
மானம் ஒன்றுதான் அடிப்படை!
வெறிகொள் தமிழர் புலிப்படை!—அவர்
வெல்வார் என்பது வெளிப்படை!

புதிதோ? அன்று போர்க்களம்!—வரும்
புல்லர் போவார் சாக்களம்!
பதறிப் போகும் சிங்களம்!—கவி
பாடி முடிப்பான் மங்களம்!

தமிழன் பண்பில் உருப்படி!—அவன்
தலையும் சாய்ப்பான் அறப்படி!
அமையும் தன்மை முதற்படி!—பிறர்
அடக்க வந்தால் செருப்படி!

வீரம் வீரம் என்றாடு!—நீ
வேங்கை; மாற்றான் வெள்ளாடு!
சீறும் பாம்பை வென்றாடு!—கண்
சிவந்து நின்று போராடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வா தமிழா!

முறங்கொண்டு புலியடித்தாள்
முன்பொருத்தி! அவள் முலையில்
இறங்கிய பால் குடித்தவனின்
இனத்தோனே! அட தமிழா!
மறங்குன்றிப் பொதி சுமக்கும்
மாடாளுய்...சீ! பகைவன்
புறங்காலை நக்குகிருய்!
போடா போ! செத்துப்போ!

என்ன பிறப்போ? அட நீ
ஏன் தமிழன் எனும்பெயரை
உன்னுடலுக் கிட்டாயோ?
உண்மையில் நீ தமிழனேடா?
என்னருமைத் தமிழனெனில்
எழு! பகைவன் உடல்பொழியும்
செந்நதியில் ஆடி எழு!
சிவந்த விழி கொண்டெழடா!

கைநெடுவேற் படை எங்கே?
கணை எங்கே? வில்லெங்கே?
மை நெடுவான் வரையெழுந்த
தோள் எங்கே? மறமெங்கே?
ஐயிரண்டு திசை மோதி
அகன்ற தமிழ் மார்பெங்கே?
வையகமும் வானகமும்
நடுங்க வலம் வா தமிழா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தகுடி இராவணனை
முழுதுலகும் புகழ் குவித்த
போர்த்தமிழர் தலைமகனைப்
புலிப்பிறப்பைத் தமிழீழம்
காத்த நெடுங் குன்றத்தை
களிகொள்ள நினைந்தொருகால்
ஆர்த்தெழடா தமிழ்மகனே!
அமையட்டும் தமிழரசு !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்காளிப்பு

குங்குமச் செங்குருதி
குளித்து வந்தான் எழுபரிதி!
தங்கத் தழல் ஒளியில்
பூத்ததடா தமிழ் ஈழம்!
பொங்குபோர்ஆடிவர
இளம் புலிகள் புறப்பட்டார்...
சங்கொலியும் முழவொலியும்
கேளீரோ தமிழ்மக்காள்!
எங்கள் அருந் தமிழ்மண்ணில்
இராவணனுர் பொன் மண்ணில்
அங்குலமும் இனி நாங்கள்
அயல் வெறியர் ஆளவிடோம்!
கங்குல் விலகின காண்!
எங்கள் தமிழ் மேல் ஆணை!
தங்கத் தமிழ் ஈழம்
தமிழனுக்கே! தமிழனுக்கே!

மூச்சுடையீர்! தமிழரே!
முன்வாரீர்! இனியும் வாய்
வீச்சினிலே நாள் கடத்தி
விளையாடல் வேண்டாங்காண்!
மேய்ச்சலிலே போனதுகள்
ஆள்வோரின் தொழுவத்தில்
பூச்சி புழு வைக்கோலும்
பிண்ணுக்கும் விழுங்கட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூச்சமுடையோம் நாங்கள்
குலமானம் ஒன்றுடையோம்!
சீச்சீ...அட தமிழா!
சிறப்பிழந்து வாழ்வோமா?
ஆச்சி! உன் பிள்ளையை
ஆடவிடு போர்க்களத்தே!
போச்சுதடி பழங் காலம்!
பூத்தது பார் தமிழ் ஈழம்!

நாம் பிறந்த நம் மண்ணில்
நாமே இனி அரசர்!
கூம்புகரம் இங்கில்லை!
குனிந்த தலை இன்றில்லை!
பாம்புக்கும் முதலைக்கும்
பணிந்து தலைவணங்கி
தேம்பி இனித் தமிழன்
திரிவதில்லை... !போர்க்களத்தில்...
மாம்பழம் போல் குண்டுவரும்
மார்பினிக்க நாம் உண்போம்!
சாம் பொழுதும் தமிழரசு
தனைநிறுவி உயிர்விடுவோம்!
ஆம் தமிழா! அதோ பாராய்...
அரும்பியது தமிழீழம்!
மேம்பட்டான் தமிழ்மறவன்!
வீரன் தோள் வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் உணர்வு

தமிழென் அன்னை! தமிழென் தந்தை!
தமிழென்றன் உடன் பிறப்பு!
தமிழென் மனைவி! தமிழென் பிள்ளை!
தமிழென் நட்புடைத் தோழன்!
தமிழென் சுற்றம்! தமிழென் சிற்றூர்!
தமிழென் மாமணித் தேசம்!
தமிழ்யான் வாழும் எழில்மா ஞாலம்!
தமிழே என்னுயிர் மூலம்!

என்றன் தமிழுடல் எழவே எழுவான்
எழுதமிழ் வானின் பரிதி!
என்றன் தமிழ் மூச் சென்பது தமிழாம்
எறிவான் இடிபுயல்! அறிதி!
என்றன் தமிழ்நரம் பினிலே பாயும்
எரிதழல் ஆற்றுக் குருதி!
என்றன் தமிழை எவன் பழித்தாலும்
எமன் அவனைத்தொடல் உறுதி!

நான் தமிழனடா! நானொரு தமிழன்!
நாற்றிசையும் இது மொழிவன்!
நான் ஒரு வெறியன் எனநகை செய்வோன்
நற்றமிழ் அறியான்- இழிஞன்!
நான் உயர்தமிழின் வளமுணர் தமிழன்!
நந்தமிழ் எழயான் எழுவன்!
நான் இழிகழுதை அல்லன்... வலியன்!
நானிலத்தீர்! இது தெளிமின்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாருங்கள்!

வாருங்கள் புலிகளே!
தமிழ்ஈழம் காப்போம்!
வாழ்வா? சாவா?
ஒருகை பார்ப்போம்!

முந்தை எங்கள் தந்தைவாழ்ந்த
முற்றம் அல்லவா?
முடிசுமந்து நாங்கள் ஆண்ட
கொற்றமல்லவா?
இந்த மண்ணின் மக்கள் எங்கள்
சுற்றமல்லவா?—தமிழ்
ஈழமண்ணை மறந்து வாழ்தல்
குற்றமல்லவா?

ஞாலம்போற்ற வாழ்ந்தோம் இந்தக்
கோலம் நல்லதா?
நாலுதிக்கும் நம்மை அடிமை
என்று சொல்வதா?
ஈழமண்ணில் எங்கள்கண்ணீர்
நாளும் வீழ்வதா?— அட
இன்னும் இன்னும் அந்நியர்கள்
எம்மை ஆள்வதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்பிள்ளை உடல்தளர்ந்த
கூனல் பிள்ளையா?
தடிமரத்தின் பிள்ளையா!
உணர்ச்சி இல்லையா?
தமிழா! என்னடா உனக்குப்
போர்ஓர் தொல்லையா?—உன்
தாய்முலைப்பால் வீரம்நெஞ்சில்
பாய வில்லையா?

வேல்பிடித்து வாழ்ந்த கூட்டம்
கால் பிடிக்குமா?
வீழ்ந்த வாழ்வு மீள இன்னும்
நாள் பிடிக்குமா?
தோள் நிமிர்த்தித் தமிழர்தானை
போர் தொடுக்குமா?—எங்கள்
சோழர் சேரர் பாண்டியர் போல்
பேர் எடுக்குமா?

வாருங்கள் புலிகளே!
தமிழ்ஈழம் காப்போம்!
வாழ்வா? சாவா?
ஒருகை பார்ப்போம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடடா களத்தே!

பத்துத் தடவை பாடை வராது!
பதுங்கிக் கிடக்கும் புலியே தமிழா!
செத்து மடிதல் ஒரே ஒரு முறைதான்!
சிரித்துக்கொண்டே செருக்களம் வாடா!
முத்தமிழோடு மோதினர் பகைவர்!
முடங்கிக் கிடப்ப தென்ன நீதி?
குத்தும் கணைகள் குண்டுகள் வரட்டும்!
குருதி பெய்யடா! கொட்டு முரசே!

ஆற்றல் உடையாய்! ஆண்மைத் தமிழனே!
அட நீ என்னடா அடங்கி நின்றனை!
சோற்றுப் பானையும் நாமும் ஒன்றோ?
சும்மா வயிறு நிரப்பவோ வந்தோம்?
மாற்று வீரன் மருளத் தமிழன்
மானப் போர்செய் திடமாட்டானோ?
நாற்றிசையும் நடுங்க எழடா!
நடந்து போ செங் குருதி நடுவிலே!

அன்னைத் தமிழோ அழுது கிடந்தாள்!
அருந்தமிழ் நாடோ அழுந்திக் கிடந்தது!
முன்னைச் சேர சோழ பாண்டியர்
மூச்சு முடிந்து போச்சோ தமிழா?
உன்னைத் தமிழனாகப் பெற்றாள்
ஊட்டி வளர்த்த முலைப்பால் எங்கடா?
தென்னைக் குலைகள் என்னப் பகைவர்
சென்னி திருகடா! செருவில் எழுகவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை என்ன மலிவு விலையோ?
　　வீதிக் கடையில் விற்பனைக் குண்டோ?
புடலங் காயோ விடுதலை? போடா!
　　போர்க்களம் ஆடப் போ! அதுகிடைக்கும்!
கொடு விலையாகக் குருதியும் ஆவியும்!
　　கொடடா உன் தலை! கொள்க விடுதலை!
அட நாம் மானத் தமிழர் அல்லமோ!
　　ஆளப் பிறந்தோம்...ஆடடா களத்தே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுகவே!

கண்ணீர் கொடுத்தோம்! வியர்வை கொடுத்தோம்!
களத்தில் எங்கள் கழுத்தும் கொடுத்தோம்!
செந்நீர் கொடுத்தோம்! தலைகள் கொடுத்தோம்!
சிரிக்கச் சிரிக்க விடுதலைப் போரில்
மண்ணை நிறைக்கும் பன்னூ றுயிர்கள்
மானத் தெய்வம் மகிழக் கொடுத்தோம்!
இன்னும் கொடுப்போம்! இன்னும் கொடுப்போம்!
எழுக! தமிழர் தோள்கள் எழுகவே!

செய்த தியாகம் சிறிய தியாகமே!
சிதைந்த தமிழர் உடல்கள் சொற்பமே!
பெய்த குருதியின் பெருக்கம் குறைவே!
பெற்ற நன்மை மிகவும் வறியதே!
கொய்து வீழ்ந்த தலைகள் கொஞ்சமே!
கொடுத்த பரிசு சிறிதே! விடுதலை
எய்த வேண்டில் இன்னும் இன்னும்
எழுச்சி தேவை! எழுக! எழுகவே!

இம்மா நிலத்தில் இயக்கம் இன்றி
எதுவும் தானாய் எய்துவ துண்டோ?
சும்மா வருமோ சுதந்திரம்? எங்கள்
தோள்கள் தூங்கினால் துயரம் நீங்குமோ?
அம்மா எனநாம் அழைக்கும் தமிழை
அழகை உயிரை அரியணை ஏற்றி
நம்மா நிலத்தை நாமே ஆள்வோம்!
நாலு திசைகளும் எழுக! எழுகவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூனுமோ தமிழன் வீரம்?

தூற்றினர் தமிழை என்னும்
துடித்திடும் சேதி கேட்டு
மாற்றலர் மண்ணில் பாய்ந்து
மானத்தைக் கல்லாய் மாற்றி
ஏற்றினன் சேரன் ஆங்கே
எதிரியின் சிரமீ தென்ற
கூற்றினைக் கேட்ட பின்னும்
கூனுமோ தமிழன் வீரம்?

பறித்திடத் தமிழன் மண்ணைப்
பரங்கியர் வந்த வேளை
தறித்தவர் தலைகள் கொய்து
தன்வலி காட்டி நின்ற
மறப்புலித் தேவன் வீரன்
மரபினில் வந்த நம்மோர்
துரத்துது குண்டென் றாலும்
துணிவிழந் தோடுவாரோ?

உற்றசெந் தமிழி னத்தை
ஒழித்திட முரசம் ஆர்த்த
துட்டகை முனுவின் கொட்டம்
தூள்படச் செய்வே னென்று
கட்டுடல் தளர்ந்த போதும்
கைதனில் வாள்பிடித்த
கொற்றவன் எல்லாளன் தன்
கூட்டமோ அடிமையாகும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி நிலம் தமிழச்சாதி
மூன்றையும் இன்னல் வந்து
தழுவுமா? தழுவ வந்தால்
தமிழ்க்குலம் புயலாய் மாறும்!
வழிவழி வந்த வீரம்
வருவதை ஒருகை பார்க்கும்!
எலிகளும் தமிழர் மண்ணில்
எழும்! பகை ஓட்டிவைக்கும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரைத் தூக்கி எறி!

பொன்னால் ஆன தமிழைப்
    பொருதும் உடலை முறி!
உன்னால் இயலா தெனில் உன்
    உயிரைத் தூக்கி எறி!

மோதித் தமிழ்வாழ் வழிக்கும்
    முரடன் உடலைச் சுடு!
நாதி இல்லை எனிலோ
    நஞ்சைக் குடித்துப் படு!

பவளத்தமிழர் மண்ணை
    பறிப்போன் உடலை மிதி!
அவனைக் கண்டஞ் சுவையேல்
    ஆற்றிலேனும் குதி!

மறத்தின் தமிழர் மண்ணில்
    மாற்றான் உடலைத் தொலை!
புறத்தில் ஒதுங்கு வாயேல்
    போ! நீ செய் தற்கொலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீறி எழுந்திடடா!

முத்தமிழ் மன்னர்கள் ஆண்ட தமிழ்நிலம்
மூக்கறு பட்டதடா!—சுய
புத்தி இழந்தவர் ஆட்சியிலே தமிழ்
பொத்தென்று வீழ்ந்ததடா!—அட!
எத்தர்கள் சட்டம் எழுதி அனுப்பிய
இந்தி நுழைந்ததடா!—இனிச்
செத்து மடிவதும் வாழ்வதும் ஒன்றுதான்!
சீறி எழுந்திடடா!

தங்கம் இருக்கையிலே தெருக்கற்களைத்
தாலிக்கு வைப்போமோ?—ஒளித்
திங்களை விட்டிங்கு மின்மினிப் பூச்சியின்
தேகத்தை வாழ்த்துவமோ?—அட
பொங்கும் அழகுத் தமிழை மறந்தொரு
பொய்யை வணங்குவமோ?—உடல்
அங்குலம் அங்குலம் ஆயினும் வெங்களம்
ஆடப் புறப்படடா!

என்ன நினைப்பில் துணிந்துவிட்டார்? இவர்
இப்படிச் செய்துவிட்டார்!—நமைச்
சின்னவர் என்று கருதிவிட்டாரெனில்
செய்கை பிழைத்துவிட்டார்!—அட!
அன்னை மொழிக்கொரு தீங்கெனில் இங்கவர்
ஆட்சி நடைபெறுமோ?—ஒளி
மின்னல் முகில்இடி என்ன வரும்படை
மீண்டும் அமைத்திடடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்ட வடிவினள் இந்தி சடலத்தின்
சாம்பல் கரைத்திடுவோம்!—சிறைக்
கட்டை உடைத்துக் களம்புகுந் தாடுவோம்!
காற்றில் வலம் வருவோம்!—அட!
கொட்டு முரசொடு வான்புகழ் கொண்டவர்
கூனி மடிவதோடா?—இமை
வெட்டும் ஒரு நொடி வேளையிலாயிரம்
வீரம் விளைத்திடடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் வருவோம்!

போர்முரசோடு புறப்படடா! தம்பி!
புல்லர்கள் காதில் அறைந்துவைப்போம்!
பேரரசொன்று படைத்திடு வோமென்று
பேட்டைக்குப் பேட்டை முழங்கி வைப்போம்!

ஆளுக் கொருவன் தலைபறிப்போம்! தம்பி!
அணுவணுவாய் அவன் உடல் முறிப்போம்!
நாளுக்கு நாள் தமிழ் நாட்டை அழிப்பவன்
நாடகம் ஓய ஓர் நாள் குறிப்போம்!

மானம் விழுந்து துடிக்குதடா! தம்பி!
மறவன் கதைகள் விளைந்த மண்ணில்
ஈனம் விளைந்து கிடக்குதடா! இதை
எத்தனை காலம் பொறுத்திருப்போம்?

துள்ளி எழுந்து புறப்படடா! தம்பி!
தூய தமிழ்ப்படை ஒன்றமைப்போம்!
எள்ளி நகைக்கும் பகைவன் உடல்களை
எண்பது துண்டுகளாக்கி வைப்போம்!

மூவர் தமிழ்ப்படை அஞ்சுவதோ? தம்பி!
மூலையில் நம்மவர் துஞ்சுவதோ?
சாவை எதிர்த்து வலம்வருவோம்! தமிழ்ச்
சாதி பிழைக்கப் புறப்படடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி சூடுவோம்!

இந்தி வந்து செந்தமிழ்க்கு வாயில் மண்ணை
இட்டுவைக்க நாங்கள் விட்டு வைக்கவோ?
மந்தைபோல வாழ்விழந்து நொந்து கெட்டு
மானவாழ்வில் ஊறுபட்டு நிற்கவோ?
தந்தையர்கள் ஆண்டுலாவி மாண்பு தந்த
தாயகத்து மண்ணை இன்று விற்கவோ?
பொங்குபட்ட மார்பினோடு குண்டு பட்ட
போர்க்களத்தில் ஆடிவெற்றி சூடுவோம்!

ஏடுகட்டி நாம்வளர்த்த காவியத்தை
இன்று வந்த செல்லரித்துப் போகவோ?
கூடுகட்டி நாம்வளர்த்த கிள்ளை ஒன்று
கொல்லவந்த பூனைவாயில் வீழவோ?
நாடுகட்டி நாம்வளர்த்த செந்தமிழ்க்கு
நச்சு மாந்தர் ஊறுசெய்து வாழவோ?
பாடுபட்டு நம்மை வீழ்த்த வந்த மேனி
பாதி பாதி ஆனதென்று பாடுவோம்!

நீதியோடு வீரவாழ்வு கண்டிருந்த
நெஞ்சமின்று போர்முகத்தில் அஞ்சவோ?
நாதியற்று வீடடைந்து மூலைபார்த்து
நாணி நின்று கட்டில் பார்த்துத் துஞ்சவோ?
ஆதியான செந்தமிழ்க் குலத்து மக்கள்
அற்பர்கால் பிடித்துநின்று கெஞ்சவோ?
வீதியெட்டிலும் முழங்கு தானையோடு
வீறுகொண்டு தோளுயர்த்தி ஆடுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்நாள் எங்கே?

முடியோடு முன்னுளில்
மூவேந்தர் புகழோடு
முரசி ஞேடு
கொடியோடு மாற்ருர்முன்
குனியாத மார்போடு
கொற்றத் தோடு
படையோடு தனியான
பண்போடு பிறநாடு
பார்த்துப் போற்றும்
நடையோடு பாராண்ட
தமிழா! உன் நாடெங்கே?
புகழெங்கே?

தரணிக்கோ உன்நாடு
தாய்நாடு! நீயோ பார்
பட்டாய் பாடு!
தெருவுக்கு வந்தாய் பார்!
தேகத்தை விற்றே தின்
ருய் சாப்பாடு!
மரபுக்கு மாருக
மாற்ருன் கால் ஏற்ருய்பார்!
கெட்டாய் கேடு!
பரணிக்குப் பொருள்தந்த
தமிழா! பாழடித்தாய் பார்
வரலாற்றேடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சத்தால் தமிழ்மண்ணின்
வாழ்வுக்குத் தீ வைக்க
வருவோர் தம்மை
நஞ்சுண்ட கைவேலின்
நாவுக்குப் பலியாக்கி
நாடு காத்த
நெஞ்சங்கள் இன்றெங்கே?
தமிழ்மான நெற்காட்டில்
நெருஞ்சிப் பூண்டை
அஞ்சாமல் நட்டதார்?
தமிழா! உன் போர்வீரம்
அழிந்த தோடா?

வாள்தொட்ட கையெல்லாம்
வலிகுன்றிப் புகழ்குன்றி
மானம் குன்றிக்
கால்தொட்டு வாழ்கின்ற
கண்ருவிக் காலத்தைக்
கண்ணுல் கண்டோம்...
பாழ்பட்ட இந்நாட்கள்
பலநாட்கள் ஆகாமல்
பார்த்துக் கொள்வோம்!
தோள்தட்டி மானத்தில்
தோய்கின்ற போராட்டம்
தொடங்கு வோமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழே! உயிரே!

தமிழே! உயிரே! வணக்கம்!
தாய்பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்!
அமிழ்தே! நீஇல்லை என்றால்
அத்தனையும் வாழ்வில் கசக்கும்! புளிக்கும்!

தமிழே! உன்னை நினைக்கும்
தமிழன் என்நெஞ்சம் இனிக்கும்! இனிக்கும்!
அமிழ்தே! உன்எழில் நினைந்தால்
ஆயிரம் பூக்கள் சிரிக்கும்! சிரிக்கும்!

தமிழே! நீயேஎன் இயக்கம்!
தாய்நீ துணைஎன் வழிக்கும்! நடைக்கும்!
அமிழ்தே! நீதரும் இன்பம்...
அடியேன் வாழ்வில்வே றெங்கே கிடைக்கும்

தமிழே! இன்றுனைப் பழிக்கும்
தறுக்கன் உலகில் இருக்கும் வரைக்கும்
அமிழ்தே! நீவாழும் மண்ணில்
அனலே தெறிக்கும்! அனலே தெறிக்கும்!

தமிழே! உனக்கேன் கலக்கம்?
தாயே! பொறம்மா முழக்கம் வெடிக்கும்!
அமிழ்தே! உனைஎவன் தொட்டான்?
அவனைஎன் கைவாள் அழிக்கும்! முடிக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடுக கூனர்களே!

வழிவழி மறவர்கள் குலமென
 வாழ்ந்தவர் தமிழ்நாட்டில்
இழிநிலையொடு தமிழ்ப் பிறவிகள்
 இருப்பதை என்னென்பேன்!
விழியெனும் அரசை இழந்தனர்!
 வீழ்ந்தனர்! வீழ்ந்தனரே!
புலியென இனிநாம் புதுவழி
 புகுவோம்! புகுவோமே!

அன்னையை உயிர்நிகர் தமிழினை
 அடித்தெவன் போட்டானோ?
புன்னகை இழந்தவள் கண்மழை
 பொழிந்திட லானாளோ?
விண்ணகம் இடிபட மறமகன்
 வெடித்தெழ மாட்டானோ?
மண்ணகம் இடிபடும் ஒருநாள்
 மாற்றலர் காணாரோ?

நாளைய வளமிகு தமிழக
 நாட்டினை நாம் செய்வோம்!
கோழைகள் என்பவர் ஓடுக!
 ஓடுக கூனர்களே!
மூலையில் எலியென இனியும்
 முடங்குதல் இயலுமொடா?
சூளுரை செய்துடனே எழு!
 சுழன்றெழு வெம்புயலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயே...!

நாயே! உனக்குமொரு நாடா?—எச்சில்
நாடும் உனக்கு வரலாறு?
தாயாள் புலம்புகிற வேளை—மாற்றான்
தாளைக் கழுவுகிற கோழை!
பேயா இறந்துதொலைவாயா?—நமைப்
பெற்றாள் துயர் அகலவேண்டும்!
நீயே தடை! பகைவர் அல்லர்!—தமிழ்
நிலத்தில் பிறந்த படுபாவி!

காட்டிக் கொடுப்பதுதான் தொண்டா?—சொந்தக்
கண்ணைப் பிடுங்குவது நன்று?
நாட்டில் இருந்தசிறு மானம்—உன்னால்
நாறும் நிலைமை வரலாமா?
சோற்றில் விளைந்த சதைக்கூடு—உன்னைச்
சும்மா விடுவதெனில் கேடு!
ஈட்டி எடுத்தெறிய வேண்டும்!—உன்றன்
இதயம் பிளந்துபட வேண்டும்!

ஆண்டில் முதிர்ந்த தமிழ்அன்னை—அவள்
அறிவாள் இதுவரையும் உன்னை!
தாண்டமுடியாதெனும் தொல்லை—நீ
தந்ததை மறப்பாளா இல்லை!
மாண்டு போ! மறவர்கள் உண்டு!—நாளை
மாற்றார்கள் உடல்துண்டு! துண்டு!
மீண்டுமோர் தமிழகம் தோன்றும்!—தமிழ்
மேன்மைகள் மண்ணில்வேர் ஊன்றும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விருதலை!

இந்த ஆண்டில்...இன்றேல்
இனிவரும் ஆண்டில்
இருக்கமாட்டார் எங்கள்
தோழர்கள் கூண்டில்!

எட்டுத் திசைகளும்
நின்ற இருட்சிறை
விட்டுக் கதிரொளி
வெளியே குதித்தது!
மொட்டுத் தளைகள்
உடைத்தது தாமரை!
சிட்டுக் குருவி
சிறகை அவிழ்த்தது!

இந்த ஆண்டில்...இன்றேல்
இனிவரும் ஆண்டில்
இருக்கமாட்டார் எங்கள்
தோழர்கள் கூண்டில்!


முப்புறம் சிறை
கொண்ட மலைகளை
ஒப்பிலா மலை
ஆறு தகர்த்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பு றக்கடல்
காற்றைக் கவிழ்த்தது!
சிப்பி உடைத்தொரு
முத்துச் சிரித்தது!

இந்த ஆண்டில்...இன்றேல்
இனிவரும் ஆண்டில்
இருக்க மாட்டார் எங்கள்
தோழர்கள் கூண்டில்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில்லடா தம்பி!

முடங்கி வளைந்த முதுகே! நிமிர்வாய்!
நடுங்கிக் கிடந்த நாட்கள் தொலைந்தன!
காய்ந்த தமிழன் கண்ணை விழித்தான்!
தேய்ந்த வீரம் திரும்பி வந்தது!
நில்லடா தம்பி! நெருப்பில் நீநட!
கொல்லும் சாவினைக் கூப்பிட் டழைப்பாய்!
போனாலும் உயிர் போய்த் தொலையட்டும்....
மானம் காத்து மண்டையைப் போடு!
தமிழன் நாட்டைத் தமிழன் ஆளும்
அமிழ்தப் பொன்னாள் இந்நாள் மலர்க!
வெள்ளமே! விரைந்துவா! விடுதலை
கொள்ளும் நாளைக் கொண்டு வருகவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடு குயிலே!

ள்ளிச் சிறகடித்துப் பாடுகுயிலே!—தமிழன்
புதிது பிறந்தானென்று பாடுகுயிலே!
வெள்ளிக் குரலெடுத்துப் பாடுகுயிலே!—எங்கள்
விடுதலை வந்ததென்று பாடுகுயிலே!

நேற்றுவரை உலகில் அஞ்சிநடந்தோம்!—பிறர்
ஊட்டும் எலும்புகளை உண்டு கிடந்தோம்!
காற்றுத் திரும்பியது கண்டு மகிழ்ந்தோம்!—ஒரு
கவிதை பிறந்ததென்று பாடுகுயிலே!

சாதிப் பிரிவினைக்குச் சாட்டைகொடுத்தோம்—தமிழ்ச்
சாதிக்கு மட்டுமிந்த நாட்டைக் கொடுத்தோம்!
வீதிக்கு வீதிமொழி வேட்கை படைத்தோம்!—விடி
வெள்ளி முளைத்ததென்று பாடுகுயிலே!

ஆளப்பிறந்தவர்கள் நாடு சமைத்தோம்!—எமை
ஆட்டிப் படைத்தவர்க்குப் பாடை சமைத்தோம்!
ஈழத் தமிழ்மனைக்குப் பாலம் அமைத்தோம்!—கவி
எண்ணம் பலித்ததென்று பாடுகுயிலே!

எட்டுத்திசைகளிலும் வெற்றி மகிழ்ந்தோம்—விண்ணின்
எல்லைதனிலே கொடிகட்டி மகிழ்ந்தோம்!
கொட்டும் முரசொடுகை தட்டிமகிழ்ந்தோம்!—இது
கொள்ளை மகிழ்ச்சி என்று பாடுகுயிலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செத்த நாள்

ஆடா மயிலாய் அசையா இளங்கொடியாய்
ஓடா நதியாய் ஒரு புதிராய்
நாடெல்லாம்...
வீசாத தென்றலாய் வீசும் தமிழ்ப் பெருமை
பேசாத வாய் பிணத்தின் வாய்!

புறமும் அகப்பாட்டும் காப்பியனுல் பூத்த
இறவா இலக்கணத்தின் ஏடும்
குறள் மொழியும்
ஆர்க்கும் சிலம்பின் அழகு தமிழ் நடையும்
பார்க்காத கண் பாவக்கண்!

கத்து கடல்பறித்தும் கல்லாதார் தீவைத்தும்
குத்து வடமொழியின் கூர்பட்டும்
இத்தனைக்கும்...
வாடாத செந்தமிழின் வரலாறு கேட்டபின்
ஆடாத கால் ஆனைக்கால்!

வானம் அளவு வளர்ந்து மொழிக்கெல்லாம்
தானம் கொடுத்த தமிழேட்டில்
ஈனம்
படைக்க வந்தாரா? அவர்பல்லை ஓங்கி
உடைக்காத கை உலக்கை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளிருந்தால் என்ன? அழகிருந்தாலும் என்ன?
நீள்விழியார் நெஞ்சில் நிறைந்தென்ன?
கேள் தோழா!
வையம் புகழும் தமிழ்க்கவிதை என்வாழ்வில்
செய்யாத நாள் செத்த நாள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களமும் கவிஞனும்

சிங்கள சிறீலங்காவின் காவல் நிலையங்களில் அடியுதை தாங்கியும்—சிறைச்சாலைகளில் கைதியாய் இருந்தும்—மருத்துவ மனைகளில் நோயாளியாய் வருந்தியும் கவிஞர் பாடிய பெருமூச்சுப் பாடல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழக்கம்!

**1957 ஆம் ஆண்டு வண்டிகளின் இலக்கத் தகடுகளில் அரசு சிங்கள 'சிறீ' எழுத்துப் பொறித்ததை எதிர்த்து தமிழ் ஈழமக்கள் போராட்டம் நடத்தினர்கள். இதில் கலந்துகொண்ட கவிஞர் மட்டக்களப்பு காவலர் நிலையம் சென்று—அங்கிருந்த பெயர்ப் பலகையில் சிங்கள எழுத்துக்களை மைபூசி அழித்தார். காவலரால் கைது செய்யப்பட்டார். சித்திரவதைக்கு ஆளானர். அங்கே பிறந்த பாடல் இது:**

துடித்த சிங்களத்தின் தறுக்கனே! மூடா!
தமிழன்யான் உனைக்கண்டு தலைதாழ்த்தவோடா?
துடிப்புள்ள தமிழ்வீரர் தோள்வீரம் அறியாய்...
துள்ளுகின்றயடா! நில்! எங்கள் மண்ணில்
வெடிக்கின்ற குண்டுக்கும் அசையாத வீரர்
விளைந்துள்ள காலம் நீ விளையாடுகின்றய்!
இடிக்கின்றயா? சரி... இடித்துப்பார் என்றன்
எலும்போடு தசைமோதித் தமிழென்றே கூறும்!

செந்தமிழ்க் கனலூறி வளர்ந்த இம்மேனி
சிறுத்தையின் எழில்மேனி வளையுமோ கூனி?
மந்திரமான செந்தமிழோடு வாழ்ந்தோம்!
மலைமோதினுலும் நிலைதாழுவோமா?
தந்தை இராவணன் ஆண்ட பொன்னடு!
தமிழீழ நாடென்றன் தாய்நாடு கண்டாய்!
இந்தமண் மீட்பதே என் முதல் வேலை!
ஏன் மோதினய்? என்முன் நீ எந்த மூலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறியாடும் சிங்களர் படைவீரா! இதுகேள்!
விடுதலை வீரரைத் தொடுதலை நிறுத்து!
பொறிகக்கும் விழியோடு புலிகள்யாம் நின்ருேம்!
பொன்னீழம் உயிரென்ருேம்...போராடுகின்ருேம்!
சிறிதடா நின்பாய்ச்சல்! பெரி தெங்கள் மூச்சு!
செந்தமிழ் வீரரை என்செய வந்தாய்!
அறிக! இங்கோர் புயல் விரைவில் வெடிக்கும்!
அந்நாள் உன்சிங்களம் பாடம் படிக்கும்!

நில்லா இம்மண்மிசை அநீதிகள் நில்லா!
நிறைவெறி யாளனே! நின்படை வெல்லா!
செல்லாதடா நின்றன் செருக்கிந்த நாட்டில்!
செந்தமிழன் கதை படித்துப்பார் ஏட்டில்!
எல்லார்க்கும் இம்மண்ணில் இடமுண்டு கண்டாய்!
எதிரியின் உடல்மட்டும் விழும்துண்டு துண்டாய்!
பொல்லார்க்குப் பொல்லாத நாடெங்கள் நாடு!
புரிந்துகொண்டாயா நீ இப்போதே ஓடு!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலி ஒரு கேடா?

1958 ஆம் ஆண்டு தமிழ்ஈழம் போர்க்கோலம் பூண்டது. சிங்கள சிறீலங்காவில் தமிழர்கள் சித்திர வதைக்கு ஆளானுர்கள். தமிழர்களுக்கு உயிரோடு தழல் மூட்டப்பட்டது. கவிஞர் மட்டக்களப்பில் உள்ள அவரது இல்லத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். இந்தப் பாடல் அங்கே பிறந்தது:-

தமிழன் தமிழ ஞேடு பழகவும்
தடையோடா இறைவா?
தமிழன் தமிழூர் தனில் உலா வரவும்
தடை யோடா இறைவா?
தமிழன் தமிழ்வான் காற்றை நுகரவும்
தடையோடா இறைவா?
தமிழன் தமிழனுய் வாழ்ந்திடவும்
தடையோடா இறைவா?

வானில் நீந்தும் பறவை வானில்
வலம்வரல் கூடாதோ?
தேனில் மகிழும் தேனீ பூம்பொழில்
திரிதல் கூடாதோ?
மானி னங்கள் சோலை எழிலுலா
மகிழ்தல் கூடாதோ?
நானிங்கே என் தாயக மண்ணில்
நடைகொளல் கூடாதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டினார் சிறை பூட்டினார் இவை
மறவனை என் செய்யும்?
வீட்டுக் காவலும் வெறியர் கொட்டமும்
வீரனை என் செய்யும்?
நீட்டு துப்பாக்கிக் குண்டுகள் அஞ்சா
நெஞ்சனை என் செய்யும்?
நாட்டுப் பற்றுடை யானை நாய்களும்
நரிகளும் என் செய்யும்?


பொங்கு மாகடலைச்சிறை செய்தவன்
புவிமேல் உண்டோடா?
வெங்கடும் புயலுக்கு மண்மிசை
வேலி ஒரு கேடா?
சிங்களக் கொடும் பேயே! அட உன்
சேட்டை கை கூடா!
இங்கு நீ தமிழ் இனத்தரைச்சிறை
இடுவையோ போடா!

நூறு போர்க்களம் கண்டுளோம் அறம்
நொய்ந்து போனதில்லை!
சீறு வஞ்சனை யாளர் வென்றதோர்
சேதி மண்ணணி லுண்டோ?
ஆறு பொங்கிஓர் நாள் எழுமடா!
அன்று நீதி வெல்லும்!
வீறுமிக்க செந்தமிழர் வெம்படை
வென்றி கண்டு துள்ளும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறந்தான் வெல்லும் அதனுல் தமிழன்
ஆட்டந்தான் வெல்லும்!
மறந்தான் வெல்லும் அதனுல் தமிழன்
மலைத் தோள்தான் வெல்லும்!
திறந்தான் வெல்லும் அதனுல் தமிழன்
திட்டந்தான் வெல்லும்!
பிறந்தான் வேங்கைத் தமிழன் இங்கவன்
பேரணிதான் வெல்லும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயிலுக்கு வாழ்வு கொடு!

1963ஆம் ஆண்டு கவிஞர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் மாணவராக இருந்தார். மட்டக்களப்பில் காவலர்களால் தாக்கப்பட்டதன் விளைவாக மார்பில் ஏற்பட்ட புண் காசநோய்க்கு வித்திட—வாயால் குருதி கொப்பளித்தவராய் சென்னை அரசினர் மருத்துவமனையில் சிலகாலம் அவர் தங்கியிருக்க நேர்ந்தது. அங்கிருந்தபோதே இப்பாடலைக் கவிஞர் யாத்தார்:-

இறைவா! எனக்கின்னும்
பல்லாண்டுயிர் ஈந்தளிப்பாய்!—என்னை
மறையா திங்கு வைத்துத்
தமிழுக்கு வாழ்வளிப்பாய்!—கொடுஞ்
சிறையால் தமிழ்மாந்தர்
படுந்துயர் அறியாயோ?—அட
இறைவா! எனக்குயிர்
தந்தால் சிறை உடையாதோ?


நோயால் எனையுருக்கி
எலும்பாக மாற்றிவிட்டாய்!—இந்த
வாயால் ஓய்விலாது
குருதி வரவும் செய்தாய்!—உன்றன்
சேயாம் தமிழ்க்குலத்தின்
துயர் களைந்திட்ட பிள்ளை—இன்று
ஈயாய் இருக்கையிலே
வீழ்ந்து கருகவைப்பாயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை வணங்கி நின்ற
பாரதியின் பின்னொருவன்—நின் தாள்
தன்னை வணங்குகின்றேன்...
அவனைப்போல் பாதியிலே—பாவி
என்னையும் நீ பறித்தால்
தமிழ்ச்சாதி ஏங்கிப்போகும்!—என்றன்
அன்னை வீழ்ந்து துடிப்பாள்
நீ என்னை அழைக்கலாமோ?

உயிரை நீட்டி என்னை
முன்போல் உலவ விடுவாய்!—சூழும்
துயிலை நீக்கி வைப்பாய்!
புதிதோர் துணிவளிப்பாய்!—அஞ்சா
வயிரநெஞ்சில் ஒன்றும்
மலைத்தோளும் ஈந்தருள்வாய்!—இந்தக்
குயிலை வாழ வைப்பாய்!
தமிழ் கூவவேண்டும் ஐயா!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் படைப்போம்!

1972ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா குடியரசு ஆன போது—தமிழீழத்தை அடிமைப் படுத்திய குடியரசு அரசியல் அமைப்பை எதிர்த்து கவிஞர் அரசபதவி யான தனது மொழிபெயர்ப்பாளர் பதவியைத் தூக்கி எறிந்தார். தமிழ் ஈழத்தில் உணர்ச்சி தழல்விட் டெரியத் துவங்கிற்று. கவிஞர் கைதானார். வெலிக் கடைச் சிறைச் சாலையில் இரண்டரை ஆண்டுகள் சிறைவாசம் இருந்தபோது பாடிய பாடல் இது:-

இற்றைநாள் வெலிக்கடைச் சிறையினுள்ளே
    இருக்கும் இத் தமிழ்வீரன் எடுக்கும் ஆணை...
நற்றமிழ் ஞாலத்தீர்! நீவிர் கேளீர்!
    நான் தமிழ் ஈழநாடமைத்தே சாவேன்!
வெற்றியில் தமிழீழம் ஆடவிட்டே
    வீழ்வேன்! அந்நாள்வரை விழிகள் மூடேன்!
சற்று முன்பேனும் யான் சாவேனானால்
    சடலத்தில் உமிழ்ந்தே பின் தழல் மூட்டுங்கள் !

ஊர் கேட்டேன்! இன்னுயிர் உரிமை கேட்டேன்!
    'ஒளிஆர்ந்த தமிழீழம் ஆளநீங்கள்
ஆர்?' என்று சிங்களர் அதிரக் கேட்டேன்!
    அறம் கேட்டேன்! எனைச்சிறைஅகத்தே போட்டார்!
கூர்போட்ட வேல்போட்டுக் கொன்றுபோட்டு
    குருதியொடு போட்டாலும் ஒன்றுசொல்வேன்...
போர்போட்டுப் புகழ்போட்டு வாழ்ந்த சாதி
    பொன்னீழக் கொடிபோட்டே தலையைப்போடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறத்துக்குப் பேர்போன தமிழினத்தார்
அறம் வீழ்த்தும் கொடியர்கண்டஞ்ச வாழும்
மறத்துக்குப் பேர்போன தமிழமாந்தர்
மானத்தைப் பெரிதோம்பும் என்றன் மக்கள்
முறத்தின்கண் புடைபடும் பயறு போலும்
மூலைக்கு மூலைநின் றுதைகள் வாங்கும்
புறத்தெரு நாய்போலும் வாழும் வாழ்க்கை
பொறுப்போமா? மாற்ருன்வால் அறுப்போம்
கண்டீர்!

வெஞ்சிறை அழைப்பினும் சரியே எம்மை
வெடிகுண்டு துளைப்பினும் சரியே நாங்கள்
அஞ்சி நில்லோம்! ஒன்றும் அசையமாட்டோம்!
அனல்மூச்சை நிறுத்தோம்! போர்ஓய்தல்
செய்யோம்!

துஞ்சிடோம் குன்றத்தோள் தட்டி நிற்போம்!
தோளேறுவோர் தலைவெட்டி வைப்போம்!
வஞ்சினம்! இதுவெறும் வார்த்தை அன்று!
வையத்திர் இதுநீவிர் அறிதல் நன்று!

தமிழீழம் இன்னுயிர்த் தங்க ஈழம்
தளைநீங்கி எழிற்கோலம் தாங்கவேண்டும்!
தமிழீழம் தன்வலி ஆற்றல் மூலம்
தழைத்தோங்க அதைஞாலம் போற்றவேண்டும்!
தமிழீழம் பலகாலம் பட்ட துன்பம்
தகர்ந்தொரு பொற்காலம் மலரவேண்டும்!
தமிழீழம் தமிழாட்சி காணவேண்டும்!
தனிஆட்சி பெறவேண்டும் தமிழர்வாழ்வே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்புப் பழம்

1975ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத் தலைவர் அல்பிரட் துரையப்பா கொலைசெய்யப் பட்டதைத் தொடர்ந்து கவிஞர் மீண்டும் கைதாகி வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டார். அங்கே இக்கவிதை மலர்ந்தது:-

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!

அன்னைத் தமிழ் ஈழம்
என்றன் உயிர்த்தாயகம்
தன்னை எவன் தொட்டான்?
தமிழா எழுக! என
மின்னை இடியைப்
புயலைத் தமிழ்செய்தேன்...
என்னைக் கொடுங்கவிஞன்
என்றூர் சிறையிட்டார்...

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!

ஓங்கு நெடுமதில்கள்
உள்ளே இருட்கோலம்
தாங்க முடியா நோய்
தாகம் பசிக்கொடுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்கு படைக்கும்
கொடியர் சிறைக்கோட்டம்
ஏங்கி ஒருதமிழன்
இங்கு மடிகின்றேன்...

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...

என்னே இவ்வையம்!
எனைப்போல் ஒரு மனிதன்
மண்ணுள இங்கே
வளர்ந்துயான் அம்மனிதன்
சொன்னபடி கைகள்
கட்டித் தொழும்பியற்றும்
பொண்ணைப் பயலானேன்...
போதும்! இது போதும்!

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!

வானில் கிளி பறக்கும்......
வண்ணக் கொடிமுல்லை
தான் நினைந்த பக்கம்
தழுவிப் படர்ந்திருக்கும்
மாநிலத்தே யான்
அட! இம் மதில் நடுவில்
ஏனிப்படி இருந்தேன்?
என்ன பிழை செய்தேன்?

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு நிலா வான்
மிசை எழப் பாரெங்கும்
கொட்டு முழவிசையில்
கூத்தாட வையத்தின்
எட்டுத் திசையும்
மகிழத் தமிழன்யான்
மட்டும் துயர் தாங்கி
மாளப் பிறந்தேனே?

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது!

"நானோ அடிமை?"
என நா விளிக்கிறது!
கூனோ டிருக்கும்
உடலம் கொதிக்கிறது!
தேனோ மரணம்
என நெஞ் சொலிக்கிறது!
ஏனோ விழியில்
இரத்தம் பனிக்கிறது

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிகாள்!

1975 ஆம் ஆண்டு கவிஞர் வெலிக்கடைச் சிறைச் சாலையில் இருந்த வேளை அவருடைய உடன் பிறப்புக்கள்—தம்பிகள் இருவர் (சிவஜெயம் சுதர்சன்) கண்டிச் சிறைச்சாலையில் கைதிகளாக இருந்தார்கள். அவர்களை நினைந்து கவிஞர் வெலிக் கடைச் சிறைச் சாலையில் இருந்து பாடிய கவிதை இது:—

வெறிச் சிங்களத்தின் கண்டிச் சிறையகம்
வீழ்ந்த என் உடன் பிறப்புக்காள்!
தெறிக்கும் விழிக்கனல் பறக்கும் புலிகளே!
தெய்வம் உண்டு நம்புங்கள்!
பொறிச்சிறை நம்மை என்செயும் பார்ப்போம்!
போர்க்களம் எமக்கென்ன புதிதோ?
குறிக்கோள் இனியது கொண்டோம் தம்பிகாள்!
கூத்தாடுவோம்! இது பொன்னாள்!

எந்தமிழ் ஈழம் ஒளிபெற நாங்கள்
இருட்சிறை ஆடுதல் இன்பம்!
வெந்தழல் ஆடி விழிமழை தோய்ந்து
வெல்லுதல் விடுதலை கண்டீர்!
சிந்துக முறுவல்! மெய்சிலிர்த் திருங்கள்!
செந்தமிழ் மூச்சென்ன சிறிதோ?
வந்தெதிர் கொள்ளும் துயரெலாம் ஏற்போம்!
வைர நெஞ்சங்களே வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமா கடலின் அலைகளே இருங்கள்!
அறம் காத்தல் நம்கடன் அன்றோ?
கோழைகள் அல்லோம்! கொடுஞ்சிறைக் கோட்டம்
குளிர்மலர்த் தோட்டம் என்றூர்ப்போம்!
ஈழமா மண்ணில் எழில் விடுதலை நாள்
இருத்தாமல் நாம் மடிவோமா?
ஊழையும் வெல்லும் உளங்களே! இருங்கள்!
ஒருபெருஞ் செயல் செயப் பிறந்தோம்!

கொள்ளையாம் வீரம் கொந்தளித்தாடும்
குட்டுவன் தமிழ்க்குலச் சேய்காள்!
உள்ளம் மகிழ இசை ஓதுமின்கள்!
உவகையில் ஆடிக் களிப்பீர்!
பிள்ளைகளா பெற்றூள்? எமைப் பெற்றூள்
பெருமைகள் அல்லவா பெற்றூள்?
வெள்ளம் படைப்போம்! புயல்படைப்போம்! நாம்
விடுதலை படைப்போம்! இருங்கள்!

நெடும்போர் ஆடும் நீதி உயிர்களே!
நெருப்பினில் பூத்த நெஞ்சங்காள்!
கொடுஞ்சிங் களத்தின் வெலிக்கடைக் கோட்டம்
குடியிருக்கும் உங்கள் அண்ணன்
இடும்பணி கேளீர்! கண் விழித்திருங்கள்!
இன்னுயிர்தான் விலை எனினும்
கொடுங்களடா என் தம்பிகாள்! கொடுங்கள்!
கூத்தாடு வேன் உடன் பிறப்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்றி சுழித்தால் நெருப்பு

1978ஆம் ஆண்டு புதிய குடியரசு அரசியல் அமைப்பை எதிர்த்தபோது கவிஞர் மட்டக் களப்பில் கைதானர். கண்டிச் சிறைச்சாலையில் கைதியாக இருந்து கவிஞர் பாடிய பாடல் இது :—

கண்டிச் சிறையகம் வைத்தீர்! கவிஞனை
முண்டிக் குதித்தீர்! முரடரே!
தண்டித்தீர்!
வெற்றி கொண்டீரா? இருங்கள்! தமிழ்வேங்கை
நெற்றி சுழித்தால் நெருப்பு!

மின்னைப் புயலை மிதித்தீர்! அடங்கீங்கள்
என்னை மதிலுள் இருத்தினீர்!
அன்னையாம்
நாட்டுக் குழைத்தேன்! வதைத்தீர்! இதோ என்றன்
பாட்டுக்கா னீர்கள் பலி!

அழகுத் தமிழீழ மண்ணை அழித்தீர்!
தழலாய் நான் ஆதல் தவறோ?
எழுகின்றேன்...
கை விலங்கிட்டீர்! கவிஞன் பழி ஏற்றீர்!
உய்யாது காண் உங்கள் ஊர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களத்தீர்! நாள் தொறும் நீங்கள் சீறவோ?
எங்கள் தலைமேல் நீர் ஏறவோ?
உங்கள்
கொழுப்போ? திமிரோ? இருங்கள்! ஊர் கூடி
அழப் போகும் உங்கள் அரசு!

'போ!' என்று வங்கம் துரத்த இங்கே போந்தீர்!
'வா!' என்று நாங்கள் வரவேற்றோம்!
ஆ! இன்று
மோதிக் குதித்தீர்! பிழைப்பீரா? நில்லுங்கள்!
நீதிக்கு முன் ஆவீர் நீறு!

கருங்கல் மனத்தீர்! அட நீங்கள் சாவை
நெருங்கல் இனி இங்கு நீதி!
இருங்கள்!
நசுக்கும் கொடுங்கடல்! உம்மண்ணை நாளை
பொசுக்கும் நெருப்புப் புயல் !

அன்னைமேல் ஆணை! அறம்வெல்லும்! தீயரே!
என்வாய்ச்சொல் பொய்யா! இவன் கவிஞன்!
மின்னல்
சொரியும்! கொடுங்காற்று நின்று சுழலும்!
நரி தின்று போம் உங்கள் நாடு!

கொடி விழும்! கோல்விழும்! ஆள்வோர் தலையில்
இடி விழும்! வாயில் அரிசி
பிடிவிழும்!
நாடெல்லாம் பாழ்விழும்! உங்கள் கொடு நாட்டில்
வீடெல்லாம் வௌவால் விழும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கியூபா முழக்கம்

1978ஆம் ஆண்டு கியூபாவின் தலைநகரான ஹவாணாவில் நடைபெற்ற அனைத்துலக இளைஞர் விழாவில் கலந்து கொண்டு கவிஞர் ஆங்கிலத்தில் யாத்துப் படித்த பாடலின் தமிழாக்கம் இது—மொழிபெயர்த்தவரும் கவிஞரே.

ஆள்கின்றாய் கொடுஞ் சிங்கள லங்கா!
ஆணவம் சேட்டை அனைத்தும் நிறுத்து!
வாழ்தமிழ் ஈழம் தமிழர் தாயகம்!
வரலாற்றுண்மை! நெஞ்சில் இருத்து!

பண்டைத் தமிழன் காலின் சுவடுகள்
பைந்தமிழ் மண்ணில் அழிந்திடவில்லை!
அன்றைத் தமிழன் ஆடியகுளத்தில்
அலைகள் இன்னும் கலைந்திடவில்லை!

ஆள்கின்றாய் கொடுஞ்சிங்கள லங்கா!
ஆணவம் சேட்டை அனைத்தும் நிறுத்து!
வாழ்தமிழ் ஈழம் தமிழர் தாயகம்!
வரலாற்றுண்மை! நெஞ்சில் இருத்து!

கோல வானைக் குருவி விழுங்குமோ?
கொடுவாய் முதலை விழுங்குமோ ஆற்றை?
ஈழ மண்ணை லங்கா விழுங்குமோ?
எங்கே பார்க்கலாம்...! என்னடா சேட்டை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள்கின்ருய் கொடுஞ்சிங்கள லங்கா!
ஆணவம் சேட்டை அனைத்தும் நிறுத்து!
வாழ்தமிழ் ஈழம் தமிழர் தாயகம்!
வரலாற்றுண்மை! நெஞ்சில் இருத்து

பாவி! நீ எம் மண்மிசை இந்நாள்
பாய்ச்சும் துப்பாக்கியின் கொடும் ரவைகள்—
நீ அவை ரவைகள் என நினைந்தாலும்
நிச்சயம் அவைகள் சுதந்திர விதைகள்!

ஆள்கின்ருய் கொடுஞ் சிங்கள லங்கா!
ஆணவம் சேட்டை அனைத்தும் நிறுத்து!
வாழ்தமிழ் ஈழம் தமிழர் தாயகம்!
வரலாற்றுண்மை! நெஞ்சில் இருத்து!

தமிழ் ஈழம் யாம் பெறுவது மெய்யே!
தகர்ந்து சிதறும் எதிரிகள் கையே!
தமிழர் நெஞ்சில் எரிவது நெருப்பே!
தமிழ் வீரம் தமிழர்கை இருப்பே!

ஆள்கின்ருய் கொடுஞ்சிங்கள லங்கா!
ஆணவம் சேட்டை அனைத்தும் நிறுத்து!
வாழ்தமிழ் ஈழம் தமிழர் தாயகம்!
வரலாற்றுண்மை! நெஞ்சில் இருத்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிடி சாபம்!

**1981 ஆம் ஆண்டு தமிழ் ஈழத்தில் சிங்கள இன வெறி தலைவிரித்தாடிற்று. மட்டக்களப்பில் கவிஞரின் வீட்டை இராணுவத்தினர் சோதனை போட்டார்கள். யாழ்ப்பாணத்தின் பல பகுதிகள் தீயில் எரிந்து சாம்பல் ஆயின. மட்டக்களப்பில் இருந்த கவிஞர் சேதி அறிந்து மனம் வெந்து பாடிய பாடல் இது.**

கன்னெஞ்சர் சிங்களத்தர்
கயவர் என் தமிழ்ஈழத்தை
அன்னை மண்ணைச் செந்தீயால்
அழித்தார் என்றெழுந்த சேதி
மின்னலாய்த் தாக்கிற்றம்மா...
விம்மிநின் றழுகின் றேன் யான்!
என்கண்ணில் நீரா? இல்லை!
இதுவும் தீ! இதுவும் தீயே!

யாழ்நகர் நல்லறங்கள்
யாவிலும் ஊறி மக்கள்
வாழ்நகர் தமிழர் வாழ்வில்
வற்றாத கல்வி மேன்மை
சூழ்நகர் கொடியர் தீயில்
துகள் சாம்பலாகி அந்தோ
பாழ்நகர் ஆன தென்றார்!
பதறுதே தமிழ நெஞ்சம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளெல்லாம் தீயால்
வீழ்த்தினர்! கடைகளெல்லாம்
கேடுற நெருப்பு வைத்தார்!
கீழ்மன வெறியர் எங்கள்
பீடுறு யாழ்மா நாட்டின்
பெரியநூல் நிலைய மீதும்
போடுசெந் தீயை என்றார்...!
பொன்னூல்கள் எரித்தார்! சென்றார்!

அம்மம்மா! என்ன சொல்வேன்?
அனலிலே கம்பன் மாண்டான் !
இம்மா நிலம் வணங்கும்
இனியவள் ளுவன் மடிந்தான்!
'உம்'மென எழுந்த தீயில்
உயர்தமிழ் இளங்கோ செத்தான்!
செம்மனப் புலவ ரெல்லாம்
செந்தீயில் வெந்தா ரம்மா!

கொடுந்தீயே! சிங்களத்தின்
கொடுந்தீயே! இது நீ கேளாய்!
நெடுங்காலம் நின்றன் கொட்டம்
நில்லா! இப்புலவன் உன்மேல்
இடுஞ்சாபம் இன்றே ஏற்பாய்!
இருந்துபார்! நீஇம் மண்ணில்
படும்பாடு நாளை பார்ப்பேன்...!
பார்த்தே நான் உலகு நீப்பேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் கனவு

1965-ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகள் மட்டக் களப்பு மருத்துவ மனையில் நோயாளியாய்த் தங்கியிருந்தகாலை 'தமிழன் அரசு மலராதா?' என்னும் தவிப்போடு கவிஞர் பாடிய குறுங்காப்பியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் கனவு

## இறை வாழ்த்து

பூவிரியும் போதினிலே
        வண்டினங்கள் கவிபொழியும்!
தாவிவிழும் மலையருவி
        கவிபொழியும்! சோலைதொறும்
கூவிநின்று பூங்குயில்கள்
        கவிபொழியும் தமிழ் நாட்டில்...
கோவிலிலே மணியொலியும்
        கவிபொழியும்... போதாதோ?
ஆவியொன்று தந்தெனையும்
        அருந்தமிழில் கவிபொழிய
மேவியவன் திருநோக்கம்
        மிகவுணர்ந்து நானொருவன்
நாவினிக்க நெஞ்சினிக்க
        என்னுடையான் அடிநயந்து
மாவிளக்கின் ஒளியேற்றி
        மலர்சொரிந்து கவிபொழிவேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சி

தெய்வம் வாழ்த்திப் புறப்பட்டேன்!
　　தேசம் அமைக்கப் புறப்பட்டேன்!
கைகள் வீசிப் புறப்பட்டேன்!
　　களத்தில் ஆடப் புறப்பட்டேன்!

வீணைக் கொடியோன் தமிழ்மறவன்
　　வெற்பை அசைத்த (இ)ராவணனின்
ஆணைக் குள்ளே வாழ்ந்ததுபோல்
　　ஆட்சி நடத்தப் புறப்பட்டேன்!

எட்டுத் திசையும் தமிழ்ச்சாதி
　　எருமைச் சாதி போலாகிக்
கெட்டுக் கிடந்த நிலை கண்டு
　　கேடு தொலைக்கப் புறப்பட்டேன்!

வீசு குண்டால் எறிந்தாலும்
　　வெட்டி உடலம் பிளந்தாலும்
ஆசைக் கொருநாள் போராடி
　　ஆவி துறக்கப் புறப்பட்டேன்!

வெந்த நெஞ்சில் எழுந்தகனல்
　　விழியில் சிவப்பு நிறந்தீட்ட
சிந்து பாடி வெங்கொடுமைச்
　　செருவில் ஆடப் புறப்பட்டேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் இழந்து தலைசாய்ந்து
மாற்றார்க் கடிமைத் தொழில்செய்து
கூனல் விழுந்த தமிழ்வாழ்வின்
கொடுமை தீர்க்கப் புறப்பட்டேன்!

கட்டு நொறுங்கக் கை வீசிக்
களத்தில் ஆடும் வேகத்தில்
கொட்டும் வியர்வைத் துளியோடு
குருதி கொடுக்கப் புறப்பட்டேன்!

வானை இடிக்கும் போர்ப்பறையின்
வைர முழக்கம் வழிகாட்ட
தானை எடுத்துப் புறப்பட்டேன்!
தமிழர் வாழப் புறப்பட்டேன்!

## கால முனிவன் குடில்

யானும் தானையும் மாமலை காடுகள்
யாவும் கடந்து நடை நடந்து
வானில் முகில்கள் அலைந்தன போலிந்த
வையத் திசைகள் அலைந்து வந்து
பேனும் அழுக்கும் பிடித்த தலையொடு
பிணத்தின் நிலையில் முகங்கறுத்து
மான உணர்வில் மறுபடியும் பல
மலைகள் வழியே நடைதொடர்ந்தோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீர மிருந்தும் வெறியிருந்தும் பகை
வெட்டி வீழ்த்தலோர் படையிருந்தும்
தூர நடந்தும் முழக்கமிட்டும் மலைத்
தோள்களிரண்டும் துடி துடித்தும்
போரை நடத்தி முடிக்க எமக்கொரு
பொழுது வரவில்லை...என்ன செய்வோம்?
ஆரை நினைத்தழுவோம்? கொடும் ஊழ்வினை
அதனை நினைத்துப் புலம்பி நின்றோம்!

விழிகள் இரண்டிலும் நீர் வடியும்! என்றன்
வெந்த மனத்தில் நெருப்பு வரும்!
மொழிகள் அழுவது போலவரும்! பெரு
மூச்சுக்கள் ஆயிரம் ஓடிவரும்!
இழிவு சுமந்த தமிழினத்தின் துயர்
எத்தனை காலம் பொறுத்திருப்போம்?
அழிவு வருமெனினும் பொறுப்போம்...இந்த
அலைச்சல் நிலைமை எவர் பொறுப்பார்?

தொடையை அடித்திட்டார்! பல்கடித்தார்! சிலர்
சோர்ந்து மரத்திலே சாய்ந்திருந்தார்!
படையில் அவ்வேளை ஒருவன் துடிப்பொடு
பக்கத்திருந்த நெடும்புதரின்
இடையில் விரற்குறி காட்டிநின்றான்! அந்த
இடத்தில் ஒரு குடில் கண்டுவிட்டோம்!
அடையத் துடித்தார் தமிழ்மறவர்...அட
அங்கோர் புதுவெறி வந்ததடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளி நடந்தன கால்கள்! குடிசையின்
தூய கதவம் அடைந்து விட்டோம்!
உள்ளம் சிலிர்க்க நிலை மறந்தோம்! குடில்
உடையானடிகள் வணங்கி நின்றோம்!
கள்ளின் வெறிபடைத் தாடினோம்! 'இங்குள
கடவுளர் யாவர்?' என மொழிந்தோம்!
வெள்ளைச் சிரிப்பொடு கால முனிவரன்
விழிகள் திருப்பி மொழிதலுற்றான்...

## கால முனிவன் கூற்று

எனது பெயர் காலமுனி
நானின்றேல் உலகினிலோர்
இயக்க மில்லை!
மனித உயிர் படும் பாடும்
மாநிலத்தில் உருவாகும்
மயக்கம் யாவும்
எனதிறைவன் அறிவதுபோல்
இன்னொருவன் அறிவதெனில்
அவன் யானன்றோ?
பனி மலையும் காடுகளும்
அலைந்து வரும் படைநிலையும்
அறிவேன் மக்காள்!

தோளுயர்த்தி உலகாண்ட
தமிழ்ச்சாதி துடிதுடித்து
மாற்றார் தம்மின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளடிக்கீழ் மடிகின்ற
பேரவலம் தாங்காமல்
முழக்கமிட்டு
மாளடித்தால் அடிக்கட்டும்
எனச் சொல்லி விடுதலைக்கு
மார்பு காட்டி
வாளெடுத்துத் தலை தூக்கி
வந்துள்ளீர் நுந்துணிவை
வாழ்த்துகின்றேன்!

செருக்களத்தில் முன்னொருநாள்
மோரியரைச் சிதறடித்தான்
இளஞ்சேட் சென்னி!
பொருப்பெடுத்த தோளுடையான்
குட்டுவனோ வட நாட்டுப்
போரில் வென்றான்!
உருக்கமிலா மாற்றாரைச்
சுந்தர பாண்டியன் ஒருநாள்
அடக்கி ஓய்ந்தான்!
நெருப்பெழுந்த விழியோடு
தமிழ்மறவர் பொருத கதை
நிறைய உண்டே!

முத்தமிழர் வரலாற்றில்
நேற்றுவரை மூண்டெழுந்த
கொடிய போர்கள்
அத்தனையும் யானறிவேன்
தமிழ் மக்காள்... ஆனாலும்
ஒருசொற் கேளீர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தல்ல நூறல்ல
கோடிமுறை போர்க்களங்கள்
பார்த்தேன்... ஆனால்
இத்தகைய படையொன்றை
மாநிலத்தில் இற்றைவரை
கண்டேனில்லை!

வீட்டினிலே பசித்திருந்து
மனையாட்டி வற்றிவிட்ட
வெறும் முலைக்கு
நீட்டுகின்ற பிள்ளையின் கை
தடுத்தழுவாள் என்பதையும்
நினைந்திடாமல்
வாட்டுகின்ற கொடிய பிணி
வறுமையிலும் தன்மானம்
பெரிதாமென்று
பூட்டுடைத்து விடுதலை நாள்
கொண்டுவரப் புறப்பட்டீர்...
பூரிக்கின்றேன்!

இறப்பதற்கும் சொத்தெல்லாம்
இழப்பதற்கும் அடியுதைகள்
ஏற்பதற்கும்
மறப்போரில் உடற்குருதி
கொடுப்பதற்கும் மலைத்தோளின்
கீழே தொங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புமிகு தடக்கைகள்
அறுந்துபட முழக்கமிட்டுச்
சிரிப்பதற்கும்
புறப்பட்டீர்... அடடாவோ!
தமிழினத்தின் போர்த்திறத்தை
வாழ்த்துகின்றேன்!

முன்பொருநாள் அரசோச்சி
நானிலத்தில் முறைகாத்த
தமிழர் பண்பை
நன்கறிவேன்! அந்நாளில்
உளம் வருந்தி நலிவுற்றோர்
எவருமில்லை!
அன்புடையார் தமிழ்மக்கள்
அவர்மாட்டே நிலைத்திருக்கும்
சிறந்த கொற்றம்
என்பதனால் தமிழாட்சி
வையகத்தில் எழுவதை நான்
அவாவுகின்றேன்......

இப்புவியில் தமிழினத்தார்
பகைவிரட்டி அரசமைப்பார்
எனிலிவ் வையம்
அப்பொழுதே நல்லறத்தின்
வழி நடக்கும்...குறள் படித்தோர்
அமைச்சராவார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்புமுறை அடக்குமுறை
தறுக்கர்களின் கொடுமையெலாம்
சாய்ந்து போகும்!
ஒப்பரிய தமிழ்ச்சாதி
எண்டிசையும் உலகினுக்கே
தலைமை தாங்கும்!

கதவு திறந் திருப்பதனைக்
காண்கின்றேன்...தமிழ்மக்காள்...
எனினும் நீவிர்
புதுமனையுள் விடுதலையின்
மாளிகையில் புகுவதெனில்
தடையொன் றுண்டாம்...!
விதியெனுமோர் கொடுங்கிழவி
இடர் புரிவாள்...தமிழினத்தை
விழவும் வைப்பாள்...
எதுவரினும் அஞ்சாதீர்!
எனமொழிந்து காலமுனி
இன்னும் சொல்வான்...

### வேறு

கேட்பீர் தமிழ் மக்காள்...விதிக்
கிழவி மிகக் கொடியாள்!
ஆட்சி தர மறுப்பாள்! உமை
அலைப்பாள்! துயர் கொடுப்பாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் சில போனால் இவள்
நலிவாள்...உடல் மெலிவாள்!
மீட்சி வருமொரு நாள்...அது
வரைக்கும் இவள் திருநாள்!

வையம் பெறும் இன்பம் ஒரு
வல்லோன் கொடை யாகும்!
தெய்வம் ஒரு நாளும் அட
தீங்கிழைப்ப தில்லை!
எய்தும் துய ரெல்லாம் விதி
இவளின் விளையாட்டே!
ஐயம் இதில் வேண்டாம்...இறை
ஆற்றல்தனை யுணர்வீர்!

ஆண்டிலொரு நூறு? இலை
அதிலே ஒரு பாதி
தாண்டு முனம் தமிழர்க்கொரு
தனிநா டுருவாகும்!
ஈண்டிதனை இறைவன்உமக்
கெடுத்தருளச் சொல்லி
வேண்டினதால் செப்புகிறேன்...
விடுக துய ரென்றான்!

காலமுனி உரைத்தான்! படை
மறவர் களிப் புற்றார்!
நீலநெடு வானம் வரை
பாய்ந்தார்! நிலம் வீழ்ந்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலுதிசை யதிரக் கரம்
அடித்தார்! நகை வெடித்தார்!
கோல முகம் படைத்தார்! முனி
குளிர்ந்து மொழி தொடர்வான்...

பூத்த மரம் போல் விளங்கும்
புதிய தமிழ்க் குலமே!
காத்திருந்து கனி பறிப்பீர்...
அதுவரைக்கும் இமைகள்
சாத்தி உறங்காதீர்! படை
வரிசை சரி பார்ப்பீர்!
கூத்து வருமொரு நாள்...உயிர்
கொடுத்து முடி கொள்வீர்!

போர் நாள் வரு முன்னே...இடை
நாளில் தமிழ் மண்ணில்
கூர் வாளிலும் கொடியோர்-சிலர்
குடி கொன்றிடப் பார்ப்பார்!
சோர்வால் மனங் குலையா நிலை
கொண்டே செயல் புரிவீர்!
ஓர் நாள் வரும்...அந்நாள் தமிழ்
உய்யுந் திருநாளே!

சாதி யெனுந் தீமை...மதச்
சண்டை தலை தூக்கும்!
வீதி குடி ஊர்களென
வேற்றுமைக ளோங்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி நெறி சொன்ன தமிழ்
நிலம் இழிவு தேடும்!
மோதி விதிக் கிழவி செயல்
வென்று முர சார்ப்பீர்!

பிச்சை யுண வொன்றே பெரி
தென்பான் வயிறுடையான்!
எச்சில் வரு மெனினுந் தமிழ்
இனத்தை விலை வைப்பான்!
நச்சு மகன் குடி கேடன்
நன்றியிலாப் பாவி...
உச்சி பிளந்திடுவீர்! இவன்
ஒழிந்தால் விடிவுண்டே!

தீனி முத லென்பான் வயி
றுடையான்! இவன் தோழன்
ஈன மகன் தன்ன லத்தான்
இனத்தை மதிப்பானு?
தா னுயர்வு பெறுவதெனில்
தாள் பிடித்து நிற்பான்!
மானம் விலை வைப்பான்! இவன்
மனைவியையும் விற்பான்!

இழிவுடையான் தன்னலத்தான்
எதுவரினும் அஞ்சான்!
அழிவு தமி ழினமடைய
அத்தனையுஞ் செய்வான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியினிலு மழகு தமிழ்
மொழி மறந்த கொடியன்!
குழி நெருப்பில் இவனுடலம்
கொடுத்து வெறி கொள்வீர்!

என்றுரைத்தான் காலமுனி
எனது முகம் பார்த்தான்...
'நன்று கவிக் குழந்தாய்... ஒரு
நாடமைக்க எழுந்தாய்!
இன்று வரை தமிழ்ப்புலவன்
ஏடெழுதிக் கெட்டான்!
உன்றனைப்போல களத்திலெவன்
உலவியவ னென்றான்!

ஏடு படைக் கின்ற குலம்
இனிய தமிழ் மொழிக்குக்
கேடு படைப் போ ரதிரக்
கிளர்ச்சி செயும் பொன்னாள்
நாடு படைக் கின்ற திரு
நாளென நான் மொழிவேன்...
ஓடு படை யோடு புறம்
உணர்ந்த மறத்தமிழா!

நாள் கனியும் நாள் கனிய
மனங்கனியும் நாட்டில்!
வாள் மறையும்! போர்க்கருவி
கொலை மறையும்! அன்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோள் கொடுக்கும்! தமிழ்ச்சாதி
அறஞ் சுமந்து வெல்லும்!
ஆள்பவராய்த் தமிழினத்தார்
ஆவது மெய் யறிமின்!

என மொழிந்து காலமுனி
இருகரமுந் தூக்கி
புனல் பொழிந்த தென இதழில்
புது முறுவல் சிந்தி
இனியபடி வாழ்த்தி வெறி
ஏற்றி வழி விட்டான்...
முனிவரனின் அடிதொழுது
முழங்கு படை பெயரும்...

## பயணம்

நீல மலைக் குறிஞ்சி நிலம்...முல்லைக்காடு
நெல் விளைந்த மருதம் அதை அடுத்தநெய்தல்
கோலிழந்த தமிழன்போல் இருந்த பாலை
கொண்டிருந்த வையத்தின் திசைகளெட்டும்
காலமுனி சொன்னதுபோல் அலைந்தலைந்து
கவிஞன் யான் பட்ட துயர் கொஞ்சமில்லை!
வேலெறிந்து விளையாடும் மறவர் கூட்டம்
விழி சிவந்த கதை தவிர வேறொன்றில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மண் வளம்

தொல் புவியின் திசைமுழுதும் அலைந்து வாழ்வின்
துயர் முழுதும் உணர்ந்துபுது வேட்கை தூண்ட
நல்ல நறுங் கனிச்சோலை மலர்த்தோட்டங்கள்
நாற்றிசையும் சூழ்ந்துள்ள தமிழர்மண்ணின்
எல்லையிலே மறுமுறையுங் காலவைத்தோம்...
எழில் மிகுந்த வேங்கடமும் தெற்கு நோக்கிச்
செல்லுங்கால் ஈழத்தே தமிழர் வாழும்
திருநிலமும் இடைத்தமிழர் நிலமுங் கண்டோம்!

பொன்னிருக்கும் அடிநிலத்தில் கால்ஊன்றிப்
புனல் சொரியும் மலையிருக்கும்! புனலினுள்ளே
செந்நிறத்தில் மணிபுரளும்! ஆற்றோரத்தில்
செங்கரும்பும் கதிர் வயலும் செழித்து நிற்கும்!
கன்னியரின் விழியோடிக் காதைத் தொட்ட
கதைபோலப் புனல்பாய்ந்து கடலை முட்டும்!
பன்னெடு நாள் ஆழிக்குள் விளைந்த முத்தம்
பளபளக்கும் தாளையது பயணம் போகும்!

கயல்தாவி விளையாடப் பாய்ந்த தண்ணீர்
கடலோரம் குளமாகி உப்பாய்க் காயும்!
மயிலாடிக் களிகொள்ள வானத்தின் மேல்
மழைமேகம் நாடோறும் பந்தல் போடும்!
வயலோரம் கரும்பாலே வேலி நிற்கும்!
வாழையில் தலைசாய்த்த கனிக்குலைக்குள்
ஒயிலாக அணிற்பிள்ளை உறங்கி நிற்கும்...
உணர்ச்சி மிகு படைக்கூட்டம் உருகிச் செல்லும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தென்னந் தோப்பிற் தள் நிலவுசெல்ல
நினைக்கும்...பின் முடியாமல் தோற்றுப் போகும்!
ஒடிந்துள்ள பழமோலை உதிரும்... அந்த
ஒரு சின்ன வழியூடே தென்னந்தோப்பில்
கடுந்தொல்லைப் பட்டுப்பின் நிலவு பாயும்!
களைத்துப்பின் வெளியேறும்! பனைகள்வானம்
இடிந்ததோ எனச்சென்று நிலவை மோதி
இழிவாக நகைசெய்யும் படையுமேகும்!

மண்ணுக்குள் இருக்கின்ற கரியுமெஃகும்
மற்றுள்ள கனிவகையும் வெட்டிப் பேர்த்து
பன்னூறும் உழைப்பாளர் வெளியே தள்ள
பக்கத்தே தொழிலாலை சங்கமூதும்!
விண்ணூரும் மேகம்போல் பசுவின் கூட்டம்
வீடெல்லாம் பால்பெய்து விட்டதாலே
பெண்ணூர்தம் மத்தோசை பெரிது கேட்கும்...
பெயர்கின்ற தானைக்கோ பெருமூச்சோடும்!

தேயிலைத் தளிர்கொய்த மகளிர் பொற்கை
தீண்டிஞல் மெய்யெல்லாம் மணக்குமென்று
பாயிலே புகழ்வார்த்தை மிஞ்சும்...மாவின்
பழம் விற்ற உங்கள் கை இனிக்குமென்று
சேயிழை பதிலொன்று சிந்தும்... வீட்டுச்
சிறு சாளரத் தூடாய் வீசுந்தென்றல்
ஆயிழை காதலன் அன்பின் சொற்கள்
அவை கொண்டு வரும்! தானை அசைந்து
செல்லும்!

வேரோடு பலாக்கனி தொங்கும்! ஆங்கே
வெள்ளாடு பழத்தின்மேல் முதுகுதேய்க்கும்!
நீரோடை வெள்ளத்தில் மீனையுண்டு
நெஞ்சத்தால் வெறிகொண்ட கொக்கினங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூரான வாய்கொண்டு மரத்தின் கொம்பில்
கூட்டுத்தே னுடைத்தலும் தேனிறு
பாரெல்லாம் பெருக்கெடுத் தோடும்! ஆங்கோர்
படைமட்டும் தள்ளாடிப் பயணம் போகும்!

இவ்வாறு தமிழ்நாட்டின் மேன்மை கண்டும்
எழில் கண்டும் ஊர்கின்ற படைஞரெல்லாம்
செவ்வானம் போலான நெஞ்சங்கொண்டார்!
செல்வத்தில் குறையாத தமிழர் நாட்டை
எவ்வாறு பிறநாட்டார் ஆள்தல் கூடும்?
எதுக்காகக் கடன் பட்டோம்? அடிமைப்
ஒவ்வாது நீதிக்கே ஒவ்வாதென்றார்! [பட்டோம்?
உளஞ் சோர்ந்தார்...நடையாலும் இளைத்துப்
போனார்!

பணத்தோட்டம் அழகான தமிழர் நாடு
பார்க்கின்றோம்...என்றாலும் பசியால் வாடும்
பிணக் கூட்டம் பார்க்கின்றோம்...ஓடுகொண்டு
பிச்சைக்குப் போவோரைப் பார்க்கின்றோம் நாம்!
நிணக்கூட்டம் போலிங்கு வாழ்ந்தோமெங்கள்
நிலச்செல்வம் மாற்றார்க்கே கொடுத்து வந்தோம்!
பணத்தோட்டம் இருந்தென்ன? பலன்கண்டோமா?
பர்ழுற்றோம் எனநெஞ்சம் பதறிச் சோர்ந்தார்!

குன்றத்தின் மலர்ச்சோலைக் குள்ளே பாய்ந்து
குளிர்தென்றல் விளையாடும் மாலைப்போதில்
என்றைக்கும் இல்லாத துயர் கொண்டாடும்
இதயத்தின் சுமை தாங்கி யிருந்த வீரர்
நின்றதோர் மரத்தின்கீழ் மரமே போன்று
நின்றிட்டார்...! படைவீரர் நிலைமை கண்டேன்—
என்றங்கு புறப்பட்டான் இரவுத்தேவன்! .
இளைப்பாற நடைகொண்டார் இருந்தோ ரெல்லாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படை இளைப்பாறல்

மலைமீது மலைசாய்ந் தாற்போல்
மழை மேகம் இறங்கினுற் போல்
மலை நின்ற சோலைக் குள்ளே
மாவீரர் இருக்கை கொண்டார்!
மலை தாவி நடந்து வந்த
மயக்கத்தி லுறக்க மென்றோர்
மலையேறி விழுத லுற்றார்...
மரணம்போல் துயிலுங் கொண்டார்!

தானை தான் உறங்கி நிற்கும்...
தமிழ்வீரம் உறங்கிப் போமா?
மானத்தில் வளர்ந்த வீரர்
மலைத் தோளின் அழகு பார்த்தும்
வானையே ஒத்த மார்பின்
வடிவினைப் பார்த்து மங்கே
நானொரு மனிதன் மட்டும்
நனிதுயில் மறந்து நின்றேன்!

எழில்பூத்த மலர்ச்சோ லைக்குள்
இருளோடி மறையும் வண்ணம்
ஒளிபூத்த தென்ன வானில்
ஓவிய நிலவு தோன்றி
விழிபூத்த நிலையில் நானே
வெறிபூத்த மனித னுனேன்...
களிபூத்த நெஞ்சி னோடு
கால் போன போக்கில் போனேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்மழை பொழியும் வண்ணப்
புதுநிலா வானின் மேலே
என்னையும் இழுக்கும்...கால்கள்
இயலாமல் நிலத்தில் நிற்கும்!
மென்மலர் பூத்த பொய்கை
மேலெழுந் தாடும் வண்டின்
இன்னிசை நிலத்தின் மேல் நான்
இருப்பதே சரியென்றோதும்!

ஒப்பிலா அழகில் பூத்த
ஒளிக்காட்டில் கவிஞ னென்னை
இப்படிக் கொணர்ந்த நெஞ்சம்
இளமையில் தோய்ந்த நெஞ்சம்
அற்புதங் காட்டி வைக்க
அழைத்தது போலும்...ஆமாம்...
செப்பவும் முடிய வில்லை
செந்தமிழ்க் கவிதை சொல்வேன்...

அழகடா அழகுக் கோலம்!
அவள் கோலம் அமுதின் கோலம்!
தழலிலே வெந்த கட்டித்
தங்கத்தின் புதிய கோலம்!
பழகவோ எதிரே வந்தாள்...
பைந்தமிழ்க் கன்னிப் பாவை?
நிழலிலே ஒதுங்கி நின்று
நெஞ்சத்தை அருகில் விட்டேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கன்னி தோற்றம்

எத்தனை எத்தனை இன்பக் கனவுகள்...
என்ன புதுமையடா!—அட
புத்தம் புதுக்கிளி சோலைப் புறத்திலே
போடும் ஒலியிவளோ?—வந்து
கத்துங் குயிலின் இசையோ? கலைமயில்
காட்டும் புதுக்கூத்தோ?—அட
முத்தமிழ்க் கன்னியின் பேரெழிலை ஒரு
மொழியில் உரைப்பதோடா?

மன்னர் வளர்த்த புகழுடையாள்! இவள்
மக்கள் உறவுடையாள்! — நல்ல
செந்நெல் வளர்க்கும் உழவ ரிசையில்
சிரிக்கும் அழகுடையாள்!—சிறு
கன்னி வயதின் நடையுடையாள்! உயர்
காதல் வடிவுடையாள்! — தமிழ்
என்னு மினிய பெயருடையாள்! இவள்
என்றும் உயிருடையாள்!

முந்திப் பிறந்தவள் செந்தமி ழாயினும்
மூப்பு வரவில்லையே! — மணச்
சந்தனக் காட்டுப் பொதிகை மகளுக்குச்
சாயல் கெடவில்லையே! — அட
விந்தை மகளிவள் சிந்தும் எழில்தனில்
விழிகள் சுழலுதடா! — கவி
தந்து சிரிக்கும் அழகன் எனக்கிவள்
தன்னைத் தரவந்ததோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூந்திப் பிறந்தவள் செந்தமிழாயினும்
மூப்பு வரவில்லையே!—மணச்
சந்தனக் காட்டுப் பொதிகை மகளுக்குச்
சாயல் கெடவில்லையே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெள்ளு தமிழ்மகள் வண்ண முகத்திலே
செம்மை கொலுவிருக்கும்! — ஒளி
கொள்ளும் இதழில் மலர்நகை யொன்று
குழைந்து குழைந்திருக்கும்! — உயிா
அள்ளும் விழிகள் இரண்டிலு மாயிரம்
ஆற்றல் நிறைந்திருக்கும்! — இவள்
உள்ள மிருக்கும் இடத்திலே காதலும்
ஒளிந்து மறைந்திருக்கும்!

தேனுங் கனியும் மதுவுங் கலந்தொன்று
சேர்ந்த உடலுடையாள்! — கன்னி
மானமெனு மெழில் ஆடையணிந்து
மயக்கப் பிறந்தவளோ? — அட
நானு மிவளும் இருக்கு முலகிலே
நாணம் இருக்குமோடா? — நாங்கள்
வான மளவு பறந்துவிட் டோமிந்த
வையம் தெரியவில்லை!

காலின் சிலம்பும் வளையும் இசையொலி
காட்டப் பறந்து வந்தாள்! — அந்த
நூலின் இடையிலே கைகொடுத்தும் விழி
நோக்கில் உயிர்கொடுத்தும் — ஒரு
வேலின் விரைவில் பறந்துவந்தேன்! அவள்
வெள்ளை மனந் திறந்து...— புதுப்
பாலின் சுவையும் வெறியுங் கலந்தொரு
பாடம் நடத்துகின்றாள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கன்னி காதல்

வண்ணத் தமிழ்க்கன்னி வாய்திறந்து பேசுகிருள்—
மண்ணிற் பிறந்து மணிக்கவிதை பாடிவரும்
பூங்குயிலே உன்னைப் புகழ்வதற்கு நான் யாரோ?
ஏங்கும் இளவஞ்சி எப்படியோ பேச்சுரைப்பாள்?
காத லுருகிவரும் காலத்தில் வாய்மழலை
பாதிவரும் மீதி பதுங்கிவிடு மென்பார்கள்!
ஆனுலும் பொல்லாத ஆசையினுல் நானெருத்தி
ஏனே புதுவிதமாய் இன்று புலம்புகிறேன்!
திட்டமிட்டுப் பேசத் தெரிந்தவள்போல் பேசுகிறேன்!
கொட்டி முழக்கும் கடல்போலக் கூவுகிறேன்!
வண்ணக் கவிஞன் வலக்கரத்தில் நான்கிடந்து
கண்மயக்கம் கொண்டு கதைபேசுங் காலமிது!
நெஞ்சிற் கவலையில்லை! நீலக் கருவிழிகள்
கொஞ்சும் ஒளிமுகமும் கூராயொரு மூக்கும்
ஏலேலோ போடும் இதழ்ப்படகும் கொஞ்சம்போல்
மேலே விழுந்திருக்கும் மீசைக் கருப்பழகும்
பட்டினியால் சோர்ந்தாலும் பார்க்கப் பிடிக்கின்ற
கட்டழகு மார்பும் கவிஞனிடங் காண்கின்றேன்!
வானத் தளவு வளர்ந்திருக்கு மென்றலைவன்
மானத்தின் தோளில் மலர்க்கொடிபோ லாடுகிறேன்!
பாவை எனக்கென்ன பஞ்சம்? எனினுமொரு
தேவை யுரைப்பேன் தெரியாதா மன்னவனே...?
விண்ணின் கதிர்வெடித்து வீழ்ந்த சிறுகோளம்
தண்ணென்று மாறித் தரைபிறந்த காலத்தில்
முன்னம் பிறந்த முதல்மனிதன் வீட்டினிலே
கன்னி பிறந்தேன்... பிறந்துவந்த காலமுதல்
நாலு திசையும் எனக்கிருந்த நல்லபுகழ்
காலம் அறியும்! வரலாறு கண்டறியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பேடறியும்! செதுக்கிவைத்த கல்வெட்டில்
எப்படியு மிந்த எழில்மகளின் பேர்விளங்கும்!
தென்னன் மதுரை சிறப்புடைய வஞ்சிநகர்
பொன்னி நதிபாயும் புகார் நகரம் ஈழநகர்
ஆன தமிழ் நாட்டின அரசிநான் ஆனாலும்
சிந்து வெளிப்பரப்பும் சீறிக் கடல்பறித்த
தென்குமரி மண்டலமும் தேடிப் புதைபொருளின்
தன்மை அறிந்தவர்கள் இந்தத் தரை முழுதும்
என்னுடைமை என்றே எடுத்துரைப்பர்! முன்பெல்லாம்
மன்னரணி மாடத்தில் மாபுலவர் கூடத்தில்
செங்கோ லிருந்த சிறப்புடைய மாளிகையில்
தங்கி யிருந்தேன்! தலைவிதியோ மன்னவரே...
பொத்தென்று வீழ்ந்தேன்...! புகழ்கெட்டுப் போனேனே!
கொண்ட முடியிழந்து கோல வடிவிழந்து
பண்டைச் சுகமிழந்த பாவி எதுசெய்வேன்?
நாலுபேர் பார்த்து நகைப்பதற்கும் ஊராரின்
கேலி உரைக்கும் கிளிப்பிள்ளை என்செய்வேன்?
என்னால் வயிற்றுணவு தேடு மெழுத்தாளர்
என்னையே விற்றுப் பிழைக்கும் இழிநிலையில்
ஆரிடம்போய்ச் சொல்லி அழுவேன்? தமிழினத்தில்
வேறிடம் நான் போனாலும் வெட்கமிலாப் பாவிகள்
பிச்சையிடும் மாற்றாரின் பின்னால் அடிசுமந்து
கச்சையிலார் போலக் கடுகளவும் மானமின்றி
நாட்டை அடகுவைத்தும் நாலுநாள் சோற்றுக்கு
காட்டிக் கொடுத்தும் கதை நடத்தும் காலத்தில்
எங்கு நான் போவேன்...? எளிய தமிழ்ச்சாதி
நூறுவகைச் சாதி நொடிக்கோர் புதுச்சாதி
வேறாய் உருவாக்கி வெவ்வேறாய் மோதுண்டு
தானே அழிந்து தலைசாயும் இந்நாளில்
எங்குநான் போவேன்? எதிர்கால மொன்றில்லாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் நிலையேனே பெற்று விட்டேன்...
நான்பொழியும்

கண்ணீர் நதிக்குக் கரையொன்று தேருதா?
என்றுநான் ஏங்கி யிருக்கையிலே பூமலரும்
குன்றத்தில் வந்தீர்... கொடுத்துவைத்தேன்,
பொய்யில்லை!

வானமழை பார்க்கும் வயலுழவர் கண்ணெதிரே
போனமழை போலப் புறப்பட்டு வந்துள்ளீர்!
வண்ணக் கரத்தால் வளைக்கின்றீர்... ஏழையின்
எண்ணம் பலிக்காமல் என்செய்யும்? நாளைக்கே
கோல முடிபெறுவேன்... கொண்ட பழம்பெருமை
மீளப் பெறுவேன்... மிகப்பெரிய மண்பெறுவேன்!
இல்லையா மன்னவரே? என்றாள் தமிழ்க்கன்னி
முல்லைச் சிரிப்பொன்றை மூடித் திறந்து வைத்தாள்!
நெற்றிப் பிறையின்கீழ் நின்ற புருவத்தைச்
சற்று வளைத்தாள் சரிந்த தலையோடு
காதல் விழியிரண்டில் கைபொருத்திக் கூப்பிட்டாள்!
சேதி தெரிந்து சிறகடித்து நான் போனேன்!
என்கரத்தி லாடும் இவளருகில் இன்னும்நான்
உன்னிப் பறப்பதெனில் உள்ளுணர்வே காரணமாம்!
போதை யுலகம்...புலவனுக்குப் பொன்னுலகம்
வாதை யுலகம் வலம்வந்த வேகத்தில்
கூடல் மகளின் கொதிக்குமுடல் சூட்டினிலும்
வாடும் அவளின் வரலாற்றுச் சூட்டினிலும்
நானொருவன் சூடாகி நல்ல வெறிபடைத்து
தேனமுத மங்கை தமிழ்க்கன்னி என்னுடையாள்
பட்ட துயரம் பறக்க இடிமுழக்கம்
கொட்டி நெடுவான் குலைந்து முகிற்கூட்டம்
ஓசைப் படவும் உலகம் நடுங்குறவும்
ஆசைத் தமிழ்மேல் ஆணை யுரைக்கின்றேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மேல் ஆணை!

தங்கத் தமிழ்மிசை ஆணை!—என்றன்
தாய்நிகர் தமிழக மண்மிசை ஆணை!
சிங்க மறத்தமிழ் வீரர்—எங்கள்
செந்தமிழ்த் தோழர்தம் தோள்மிசை ஆணை!
சங்கு முழக்கி யுரைப்பேன்—நாளை
சண்டைக் களத்திலே சாக வந்தாலும்
மங்கிக் கிடக்குந் தமிழை—மீண்டும்
மாளிகை ஏற்றி வணங்கியே சாவேன்!

கன்னித் தமிழ்மகள் தெய்வம்!—அவள்
காதல் அருள்விழி காட்டிவிட் டாளடா!
என்ன சுகமினித் தேவை?—இந்த
எலும்புந் தசையு மெதுக்கடா தோழா?
மின்னி முழங்குது வானம்—இடி
மேகத்தி லேறி வலம் வர வேண்டும்!
தின்னப் பிறந்து விட்டோமா?—அட
செங்களம் ஆடப் புறப்பட்டுவாடா!

நேற்று மதிப்புடன் வாழ்ந்தோம்!—இந்த
நிலத்தின் திசைகளனைத்தையும் ஆண்டோம்!
ஆற்றல் மிகுந்த தமிழை—அரி
அணையில் இருத்தி அழகு சுவைத்தோம்!
சோற்றுப் பிறவிகளானோம்!—இன்று
சொந்தப் பெருமை யிழந்து சுருண்டோம்!
கூற்ற மெதிர்த்து வந்தாலும்—இனிக்
கூனமாட்டோ மென்று கூவடா சங்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றல் தவழ்ந்திடும் மண்ணில்—நாங்கள்
தீயும் புயலும் வலம்வரச் செய்வோம்!
குன்றும் மலையும் நொறுக்கி—இந்தக்
கொடிய உலகம் பொடிபடச் செய்வோம்!
என்றும் இனிய தமிழை—அட
இன்னுயிர் மூச்சை அமுதக் குழம்பை
மன்றம் மதித்திட வில்லை—என்றால்
மக்கள் உலகம் எதுக்கடா தேவை?

கூவும் அலைகடல் மீதும்—பொங்கிக்
குமுறி வெடிக்கும் எரிமலை மீதும்
தாவும் வரிப்புலி மீதும்—எங்கள்
தடந்தோள் மீதுமோர் ஆணையுரைப்பேன்...
நாவும் இதழு மினிக்கும்—இன்ப
நற்றமிழ் மொழிக்கோர் நாடுங் கொற்றமும்
யாவும் உடனிங்கு செய்வோம்!—இந்த
யாக்கை பெரிதோ? தமிழ்பெரிதோடா?

கொட்டு தமிழா முரசம்!—அட
குறட்டைத் தூக்கம் நிறுத்தடா' என்று
வெட்ட வெளியிடைக் கூவி—என்றன்
விழிக ளெதிரே தமிழ்மகள் வாயின்
பட்டு முறுவல் சுவைத்தேன்!—அவள்
பார்வை எதிரே மறைந்தனள் கண்டீர்!
சட்டென் றுலகில் விழுந்தேன்!—என்றன்
சங்கொலி கேட்டு விழித்தது தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலேயும் களமும்

கண்விழித்த படையினைப் போல்
கதிர் விழித்த வானகத்தில்
பண்ணிசைத்த குருகினங்கள்
பறந்து வரும் .. விடுதலையின்
பொன்னினைவு பாய்ந்து வரும்!
புலம்பலிலே தமிழரசி
முன்னிரவில் சொன்னதெலாம்
முகஞ்சிவக்க வெறிபடைக்கும்!

நீலநெடு வரைப்புறத்தில்
நெஞ்சினிக்க வாய் திறந்து
காலமுனி யுரைத்தகளம்
கண்டுவர மனந்துடிக்கும்!
ஓலமிட்ட சங்கொலியால்
உணர்ச்சிகொண்டு நின்றபடை
வேலெடுத்து நின்றது போல்
விழியிரண்டும் துடி துடிக்கும்!

அன்னையிடம் குடித்த முலை
அமுதத்தின் தமிழ்மானம்
என்னுயிரில் இரத்தத்தில்
இணைந்துநின்ற காரணத்தால்
கன்னிமகள் தமிழணங்கின்
கறைதுடைத்து நொடிப்பொழுதில்
பொன்முடியைக் கொண்டுவரப்
போர்நெஞ்சம் வழிபார்க்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வணமாய் நினைவலைகள்
எழுந்தடித்த நெஞ்சத்தில்
வெவ்வேறு திட்டமெலாம்
வேர்விட்டும் போர்க்களத்தில்
கொவ்வைநிறச் செங்குருதி
கொட்டுதற்குக் கண்ணெதிரே
எவ்வழியுந் தோன்ருமல்
இளமேனி பதைபதைக்கும்!

எத்தனைநாள் எடுத்தகொடி
எத்தனைநாள் அமைத்தபடை
இத்தனைக்கும் களமெங்கே...?
எனப்புலம்பி நின்றவனை
குத்துபடை மறவர்களில்
குன்றமிசை யிருந்தொருவன்
தித்திக்கும் பாவலரே...
செருக்களமா? அதோ என்ருன்!

## உணர்ச்சி

என்னடா தோழா செருக்களமா? அட
எங்கேயடா? எனக் கூவி
சொன்னவன் நின்ற மலை முடியின்மிசை
துள்ளி அவாவுடன் தாவி
என்னிரு கண்கள் எதிரினிலே தொலை
இடத்தி லெதிர்ப்படை கண்டேன்!
பின்னேரு வார்த்தை யுரைப்பதுண்டோ? கொடி
பிடித்துப் பறக்குது தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றங்கள் தாவிக் கொடும்பகைவர் தலை
கொண்டு வரும்படை போலே
சென்றது தானை செருக்களத்தின்மிசை
செப்புகிறார்...அட மாற்றார்
கொன்றிடல் போலும் வசைமொழிகள் எழில்
கொஞ்சுந் தமிழ்மொழி மேலே!
நன்றடா நன்று...பிறமொழிகள் தமிழ
நாட்டை அழிக்கவோ? பார்ப்போம்!

சித்திரச் சோலைப் புறத்தினில் வானிடை
சிறகை அடித்தொலி செய்தே
கத்திப் பறந்த பறவை அணியெனக்
காற்றில் பறக்குது தானை!
புத்தொளி வீசும் விழிகளைப் பாடவோ?
மூச்சுப் புயலை எழுதவோ?
தத்து நடைத்தமிழ் தானைநடையினைப்
பாடத் தகுமோ தமிழரே?

## குழப்பம்

கோடித் தடந்தோளாம்! அங்கே
குன்றமொரு குவையாம்!
ஆடி வருங் கடல்கள்—களத்தில்
ஆயிரம் ஆயிரமாம்!

விழியும் நெருப்பு மொன்றே!—மறவர்
விரைவும் புயலுமொன்றே!
மொழியும் இடியுமொன்றே!—வெம்போர்
முனையை எதுமொழிவேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் மலைக்குவமை'—அங்கே
உடல்கள் புலிக்குவமை!
வெள்ளம் படைக்குவமை! —மறவர்
வெறிக்கும் உவமையுண்டோ?

மெய்கள் சிலிர்த்திடவே—வீரம்
மிளிர்ந்த களப்புறத்தில்...
ஐயோ! ஒரு நொடியில்—நிகழ்ந்த
அழிவை எதுபுகல்வேன்?

கூனல் விதிக்கிழவி—பாவி
கொடுமை இழைத்தனளோ?
மான மறத்தமிழன்—அடடா
மதியை இழந்தனனோ?

என்ன மொழி யுரைப்பேன்?—இந்த
இழிவின் நிலை சிறிதோ?
தென்னர் படைக்குவியல்—களத்தே
சிதைந்து குலைந்ததடா!

பார்ப்பான் மிகவுயர்ந்தோன்... — அவனே
படையை நடத்திடுதல்
சேர்க்கும் பெருமையென்றான்—ஒருவன்
சின்னச் செயல் புரிந்தான்!

ஓங்கி வளர்ந்த மரம்—காற்றில்
உடைந்து விழுந்தது போல்
ஆங்கு தமிழ்மறவர்—நூறாய்
ஆனார் நொடியினிலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிப் புகழுடையோர் — உழவர்
என்றூர் சிலர் அடித்தே!
சாதிக் கொடுமையடா!—இதுதான்
சனியன் எனும் பொருளோ?

செம்படவன் குதிப்பான்!—ஆங்கே
செட்டி செருக்குரைப்பான்!
கும்பம் சரிந்தது போல்...—தமிழர்
கூட்டம் சிதைந்ததடா!

கண்கள் அனல் சுழற்ற—நெஞ்சம்
காய்ந்து சருகுபட
விண்ணில். இடிசிதற—நானே
வேதம் முழக்குகின்றேன்...

## சாதிப்பிரிவினை எதிர்ப்பு

'என்னருந் தோழா! உனக்கொன் றுரைப்பன்...
இதுகேள் நீ களத்திலே
பன்னெடுங் காலம் அலேந்த தனைத்தும்
பாழடா...! குதிக்கின்றுய்!
சின்னக் கதைகள் வளர்க்கின்றுய்! இது
சிறுமையல்லவோ மூடா?
உன்னையே நூருய்ப் பிரிக்கின்றவன் நீ
ஒருவனே... அட பாவி!

எண்டிசை வையம் முழுவதும் நீதி
இயற்றிவைத்த நீ ஏனே
கொண்டஉன் நாடு குலேந்திடவீணே
கொடுமை செய்தனை...ஏடா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டோடா சாதி? எவன்வைத்த சட்டம்?
உணர்க நீ...தமிழ்நாடு
துண்டு துண்டானுல் தோல்விதான் மிச்சம்!
துயரம் ஏனடா தோழா?

முல்லையை வண்ண மயிலை மதித்த
முடிவேந்தர் குலமொன்றில்
இல்லையோ மாந்தரிடத்தில் இரக்கம்?
இழிவோ மனிதரெல்லாம்?
நல்ல பண்பாடு மறந்ததோ நாடு?
நாட்டைக் கெடுத்தவன் யார்?
நில்லடா...இன்றே புதுநிலை கொள்வாய்!
நிறுத்துக சாதி பேதம்!

கற்றவர் கூடி அறிவுரை செய்க!
கயமை ஒழிக தோழா!
நற்றமிழ் மக்கள் அனைவருமொன்றே!
நாமெலா மொரு கூட்டம்!
ஒற்றுமைச் சங்கம் முழங்குக! நெஞ்சம்
உயர்கவே!' எனக்கூவிச்
சுற்றிநின் ருடும் படைமுகம் பார்த்துத்
தொடர்ந்து மொழிதலுற்றேன்!

(வேறு)

காட்டு மரங்களிலே
கள்ளர் மரம் ஐயர்மரம்
தோட்டிமர முண்டோடா தோழா?
நாட்டு மனிதரிலே
வேற்றுமைகள் காட்டுகிருய்...
நட்டமரம் உன்னைவிட மேலா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூண்டுப் பறவையிலே
குறப்பறவை இழிபறவை
தீண்டாப் பறவையுமுண்டோடா?
ஆண்டிப் பிறவியென்றும்
அம்பட்டனென்றுங் குலைப்பாய்...
அறிவால் விளைந்துவிட்ட கேடா?

ஓடும் அணில்களிலே
உயர்ந்த அணில் தாழ்ந்த அணில்
கூடிக் குழப்பமிட்ட துண்டோ?
ஏடு படித்து வந்த
மூடர்களே சாதிகுலம்
என்பதெல்லாம் மானிடர்க்கு நன்றோ?

கோல நதிகளிலே
குலம்பிரித்து நாலு நதி
குழம்பி இதுவரைக்கும் போச்சா?
சாலைப்புறத்தினிலே...
சண்டையிட்டு மோதுகிறீர்...
சாதியினுல் நன்மையேதும் ஆச்சா?

தேனின் மலர்களிலே
சேரிமலர் செட்டிமலர்
பூணூல் அணிந்தமல ருண்டோ?
ஈனப் பிறவிகளே
இழிவுயர்வு பார்ப்பதுதான்
இறைவனுக்கு நீங்கள் செய்யுந்தொண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறு)

ஆற்றுகின்ற தொழிலாலே வருமோ சாதி?
ஆர் சொன்னூர்? பாவிகளே... அழகுவாயில்
ஊற்றெடுக்கும் மொழியாலே மலருஞ்சாதி!
ஒரு சாதி தமிழ்ச்சாதி! உணர்க இன்றே!

எண்ணத்தை எழுத்தாக்கிச் சொல்லுமாக்கி
இலக்கியமா யுருவாக்கி இன்பமாக்கி
வண்ணப்பூந் தமிழரசி வளர்த்த சாதி
வரலாற்றில் தமிழ்ச்சாதியொன்றே கண்டீர்!

ஓடையிலே கண்ணாடி போன்ற நீரில்
ஒளிநிலவு முகம்பார்க்கக் கவிஞர் கூட்டம்
ஏடெழுதித் தமிழ் சுவைத்த நாட்டிற்சாதி
எமது தமிழ்ச் சாதியன்றி இன்னென்றுண்டோ?

வயற்புறத்தே ஒருபறையன் உழவர் மங்கை
வண்ண இதழ் அமுதுண்ட மயக்கமாடி
இயற்றமிழால் வாய் நிறையக் கதைகள்பேசும்
இனியதமிழ்ச் சாதியடா எங்கள் சாதி!

அன்னையெனு மியற்கைத்தாய் மொழியைத் தந்தாள்—
அப்பொழுதே தமிழ்ச்சாதி யாகிவந்தோம்!
சின்னமன முடையார்கள் செய்தசாதிச்
சீர்கேட்டை நாமென்றுஞ் செய்ததுண்டோ?

தமிழ்ச்சாதி மாற்றினத்தைப் பழிப்பதில்லை!
தாழ்வென்று முயர்வென்றும் குதிப்பதில்லை!
அமிழ்தான தமிழுக்கோர் அழிவுவந்தால்
அது பொறுப்பதில்லை...ஒருநாளுமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிமிசை மொழியொன்றே பொருளாங்கண்டீர்!
புன்மையடா...குலமுறைகள் பொய்யின் கூட்டம்!
தேமதுரத் தமிழ்மீதி லாணையேற்பீர்!
தீண்டாமைப் பொய்தொலையத் தீவைப்பீரே!

போர்க்களத்தில் இவ்வழி நான் முழக்கமிட்டுப்
புலம்பி நின்றேன்! கண்ணெதிரே தமிழ ரெல்லாம்
ஓர்நொடிக்குள் புது வேகம் உதைத்ததாலே
ஒற்றுமைதான் பெரிதென்றார்...ஒருவன்
சொல்வான் :

## சமயப்பிரிவினை எதிர்ப்பு

சாதி பொய்யெனச் சாற்றிவிட்டீர்! ஐயா
சமயமும் பொய்யாமோ?
ஆதி சைவமென்றே யுரைப்போம்! நாங்கள்
அரனின் திருக்கூட்டம்!
மீதி யுள்ளவை கீழ்மதங்கள் சைவம்
மெய்மதமாங் கண்டீர்!
நீதி மெய்யெனில் சைவருக்கே இந்த
நிலமென் றுரைத்திட்டான்!

என்ன கேடடா...செந்தமிழர் மண்ணில்
எத்தனை வேற்றுமைகள்!
சின்னச் சாதியைச் சாகடித்தேன்! இன்னும்
சிக்கல் தொலையவில்லை!
என்ன கேடடா...என்றிருந்தேன் அங்கே
இன்னொருவன் வெறியில்
முன்னர் வந்தது விஷ்ணுமதம்என்றான்
மூண்டது போரங்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயை மிதித்தவனாய் நின்றேன் ஐயோ
சிந்தை துடிக்கையிலே
தூய குர்ஆனில் ஆணையிட்டேகண்முன்
துள்ளி யொருவன் சொல்வான்...
ஆய தெய்வங்கள் அனைத்திலும்...நாங்கள்
அல்லா பெரியதென்போம்!
தாயை இழப்போம்...இஸ்லாமெனில் எங்கள்
தலையும் வைப்போமென்றான்!

புத்த மதமென்பான் ஒருவன் ஆங்கே
பொங்கிக் குரல்கொடுத்தான்!
மெத்தப் பெரிது சைனமதம்என்று
மேலுமொருவன் சொன்னான்!
மொத்த மதங்களும் பொய்யடாஎன்றான்
மூலையில் இன்னொருவன்!
சித்திரமொன்று சிதைந்தது போலே
சிதைந்ததடா தானே!

மானம் பெறவே புறப்பட்டோம்சீச்சீ
மாற்றார் கண்ணெதிரே
ஈனம் படைக்கவோ எழுந்தோம்நெஞ்சம்
ஏங்கி அழுதபடி...
ஊனமுற்ற தமிழன் நிலைகண்ட
உள்ளத் துடிப்பினிலே
வானம் இடியவும் பூகம்பம்ஒன்று
வரவு மோசையிட்டேன்...

நில்லுங்கள் தமிழ் நாட்டினரேஉங்கள்
நெஞ்சமும் பாழாச்சோ?
பொல்லாப் பகைவர் முன்புறத்தேநின்று
பூசல் வளர்க்கின்கிறீர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லும் படையே கொண்டுவந்தீர்பாதி
வேளையில் என்செய்தீர்?
தொல்புகழ் சாய்க்கத் துணிந்தீரோ என்று
தொடர்ந்து சிலசொல்வேன்!

நாலு மதங்களும் பேசுவீர் பேசும்
நாக்கை மறந்துவிட்டீர்...!
கோல மகளாம் தூயதமிழ் வஞ்சி
கொள்ளை யுணர்வளித்தாள்!
மூலை நெஞ்சம் இயக்கிவைத்தாள்...ஊமை
முகத்தைப் பேசவைத்தாள்;
ஞாலம் உணர வாய்ப்பளித்தாள் அந்த
நன்றி மறந்துவிட்டீர்!

அன்னை முலையின் பாலுடனே நாங்கள்
அருந்திய செந்தமிழ்!
சின்ன வயதில் தெய்வத்தை நாங்கள்
தெரிய வைத்த தமிழ்!
முன்னர் கண்ட தமிழ்மறந்தீர்! வீணே
மோதிக் குழப்பமிட்டீர்!
என்ன நினைத்துவிட்டீரடா? நெஞ்சம்
இழந்து விட்டீரோடா?

எல்லா மதங்களுந் தெய்வத்தை நாடும்
இன்ப வழிகளடா!
நல்ல நினைவுகள் நெஞ்சினில் வந்தால்
நாயகன் நம்மிறைவன்
எல்லாம் வழங்குவானென்பதே மார்க்கம்
இதுவே மதமென்றால்...
சொல்லால் வளர்வது நெஞ்சடா! தூய
தமிழைத் தொழவாடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ லத்தீன்மொழி தேவையோ? ஏடா
தேம்பாவணி கசப்போ?
செய்ய குர் ஆனின் அரபுதான் நன்றோ?
சீறு வெறுத்ததோடா?
சைவம் பேச சமஸ்கிருதம் தானோ!
சம்பந்தர் தீயவரோ?
வையகத்தில் மனம் வளர்க்கும் சொந்த
வாய்மொழி காத்திடடா!

பண்பு தந்தது செந்தமிழாம் நல்ல
பழக்கம் உருவாக்கி
நன்கு மண்ணி லறம்வளர நெஞ்சை
நாளும் அழகு செய்து
மண்படைத்தவன் கைகளிலே நாங்கள்
மகிழ வாய்ப்பளிக்கும்
இன்ப வழியே செந்தமிழாம் இந்த
எண்ணம் மறந்ததோடா?

ஏசு வந்ததும் நபிநாதர் இங்கே
எழுந்ததும் அணைத்தும்
மாசு நீக்கவே தூயமனம் ஒன்றை
மக்கள் பெறவேயன்றி
தூசுபோல் மதம் பலப்பல செய்து
துண்டு துண்டுபடவும்
கூசு தீமைகள் கூடுதற்கும் மக்கள்
குழம்புதற்குமோடா?

உள்ள மதங்களத்தனையும் இந்த
உலகில் வருமுன்னே...
தெள்ளு தமிழ்மகள் வந்தவள் என்று
தெரிந்தும் மோதுகின்றீர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளை நீதிகள் சொன்னவளை தெய்வம்
கொடுத்த அமுதத்தை
உள்ளம் ஆய்ந்த முதல்மதத்தை நீங்கள்
உணரவில்லையோடா?

ஆயிரந் தலை முறைகளாய் நம்மை
அழகு செய்த தமிழ்
தூய செந்தமிழ், மதங்களும் வந்து
தொழுது நின்றதமிழ்
மாயை பேசிடுந் துறவியர் தாமும்
மயங்கு கின்ற தமிழ்
சாயவோ : மதங்கள் சாற்றினீர் என்று
சாற்றிஉரை தொடர்வேன்...

(வேறு)

தமிழ் மக்காள்! உங்கள் சமயத் தாகத்தால்
தமிழைப் புறக்கணிக்காதீர்! — தமிழ்
அமிழ்தத்தை நீங்கள் மறந்ததோ? அட...
அதிகம் கதைவளர்க்காதீர்!

இந்துக்கள் வைணவர்கள் கிருத்தவர்
இசுலாமியர்களும் ஒன்றே! — உயர்
செந்தமிழ்க் குலமொன்றே' நாங்களென்றும்
சிதைந்திடா மலைக்குன்றே!

மதங்கள் கூறும் மறைகளை நாட்டிலே
மணித்தமிழினல் விதைப்போம்! — பல
விதங்களாய் நம்மை வெட்டிச் சிதைத்திடும்
விதியையும் உடன் சிதைப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ப நற்றமிழ் ஒன்றே நமையெலாம்
இயக்கு மாருயிர் மூச்சாம்! — மத
அன்பினுல் குழம்பி நிற்பார்புலம்பல்
அறியாமைப் புயல் வீச்சாம்!

எழுக தோழர்காள்! இன்றே மதங்களின்
இடையில் மோதல் விடுத்தே! — என
அழுது கூவினேன்...ஏற்ருரனைவரும்
ஆமென்று குரல் கொடுத்தே!

ஒன்று பட்டதடா தானை! களத்தில்
ஒன்று திரண்டது நாடு! — இனி
வென்று வரும்படை யென்றிருந்தேனு...?
விளைந்ததடா புதுக்கேடு!

## நிலப்பிரிவினை எதிர்ப்பு

அழகு நிலாவைக் கல்லா லடித்ததை
ஆயிரந் துண்டுக ளாக்கிவைப்பாரோ?
எழுது சித்திரம் ஒன்றைச் சிதைப்பரோ?
என்ன கொடுமையடா தமிழ் நாட்டிலே...
பழைய செந்தமிழ்க் குலத்தை ஆயிரம்
பங்கு போடுவான்...அங்கே இன்னெரு
விழலன்... கொடுமை விளையப் பிறந்தவன்...
வேறு புதுவகைப் பேதம் விளம்புவான்!

சாதி சமயப் பிரிவுகள் சாடினீர்...
சார்ந்து வாழும் நிலத்தால் பிரிவதும்
நீதியன்றெனச் செப்புவீர்களோ?
நீண்டு பரந்த பெருநிலத் தமிழன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி ஈழத் தமிழன் ஆவனோ...?
ஆழக் கடலை மறந்து விட்டதோ?
வாதிக்காதீர்... இலங்கை வேற்றுமண்...:
வண்டமிழ் நிலம் வேறெனச் செப்பினான்!

தஞ்சையா னொரு தமிழ்மகனங்கே...
தனக்கும் மதுரைக் காரன் றனக்கும்
கொஞ்சமும் உறவில்லையெனக் குரல்
கொடுத்து நின்றனன். கோவை நிலத்தான்
மிஞ்சுஞ் சொற்கள் வளர்ப்பான்...சென்னையான்
மேலும் வளர்ப்பான்...நெல்லை நாடனும்
செஞ்சுவைத் தமிழுறவு மறந்தே
செல்வான் முகவைத் தமிழனைச் சீறுவான்!

மட்டக்களப்பும் யாழ்நகர் மண்ணும்
மரபில் வேறுபட்டவை யென்றொரு
குட்டித் தலைவன் குழப்புவா னங்கே...
குன்றஞ் சூழ்ந்த மலை நாட்டானை
திட்டுவானொரு சிறுமகன்...மன்னார்
திருமலை யெனச் செந்தமிழ்க் கூட்டம்
எட்டுப்பத்தாய்ப் பிரிந்தது மாற்றான்
இருந்த களத்தில் எரிந்தது நெஞ்சே!

விழிகள் சிவந்து விரையும் வரிப்புலி
வேட்கை கொண்ட இரையை மறந்து
வழியில் குப்பை கிளறும வழக்கமும்
வையகத் தினில் உண்டோ தோழரே?
மொழியும் நாடும் முதலெனக் கொண்டு
முழங்கு களத்தில் இறங்கிய தானை
பழிக ளாயிரம் தம்முள் வளர்ப்பதோ?
பாவிகா ளென்று பலப்பல சொல்லுவேன்—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றடா இங்கே யுள்ள தமிழ் நிலம்!
ஊர்கள் பிரிந்தா லுண்டோ தமிழ்க்குலம்?
குன்றுகள் யாவுங் குலைந்து படுமெனில்
கோல மாமலை வாழவும் கூடுமோ?
நின்ற கண்களும் மூக்குங் கன்னமும்
நீங்க முகத்தின் நிலையென் னாகும்?
என்றும் ஒற்றுமை எண்ணம் வளர்ப்பீர்!
இனிய தமிழகத்தீரே...எழுமினோ!

கோடி கோடி மானிடர் கூட்டம்
கூடி வாழ்ந்த தமிழ்மண் குலைந்து
பாடி யென்றும் பேட்டையென்றும்
பத்து நூறு தெருக்க ளென்றும்
சாடிநின்று சண்டை யிட்டால்
தமிழர் மா நிலம் தன்னிலை கெட்டு
மாடி நின்று குதித்து மாண்டவன்
மண்டை போலுஞ் சிதறி மறையவோ?

அரிய தமிழர் நாட்டை யலைகடல்
அன்றொரு காலை அழித்துப் போனபின்
உரிய பகுதியா யுள்ள சிறுநிலம்
ஓங்கு வேங்கடம் ஈழமாயிடைப்
பெருமை மிக்க தமிழர் பிறப்பிடம்
பின்னும் பின்னும் பிளவுபடுமெனில்
ஒருவன் தமிழன் உலகில் வாழவும்
ஊரொன் றிருக்குமோ உணர்வீர் தோழரே!

தூய தமிழ்ச்சொல் தோன்றிய மண்ணை
தொன்மை மிகுந்த குமரித் தொட்டிலை
தாயகத்தை ஆழி பறித்தபின்
தப்பிநின்ற ஈழத் தமிழ்நிலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீய கடலால் ஒதுங்கித் தேய்ந்து
தீவாய் மாறினுந் தேசம் மாறுமோ?
ஆய தமிழ்நில மனைத்து மொன்றே!
அன்னை நாட்டின் அருமை போற்றுவோம்!

தஞ்சை யாயினும் மதுரை யாயினும்
தமிழ னெங்கிருந் தாலும் தமிழனே!
அஞ்சா இலங்கைத் தமிழ வீரனும்
அழகு தமிழகத் தானும் ஒருவனே!
நெஞ்சமொன்றே தமிழருக் கெல்லாம்!
நிலமு மொன்றே குலமுமொன்றே!
செஞ்சுவைத் தமிழொன்றே மூச்சாம்!
சேர்ந்து வாழிய செந்தமிழ் நாடே!

அன்னை மண்ணை அருந்தமிழ் மண்ணை
அள்ளி வலக்கை யதனல் எடுத்தே
சின்ன முத்த மொன்று கொடுத்துச்
செருவிலாட வருவீர் தோழரே!
இன்னு மின்னும் எளிய வேற்றுமை
இயம்பு வீரோ? என நானு ரைத்தேன்!
பொன்னு ளொன்று புலர்ந்தது கண்டீர்!
புதிய தமிழ்க்குலம் பூத்தது மாதோ!

## படை எழுச்சி

தானைத் தோழர் தடந் தோள்கள்
இணைந்தன...அடடாவோ தமிழ்நாட்டில்
தேனை மறந்து கள்ளுண்டு
கிடந்தவர் திருந்தி எழுந்தாரங்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை நாயெனத் தமிழன்
இழிவுற்ற புன்மையினி இல்லையென்று
வானை இடித்ததோர் சங்கம்!
ஒருவன் வல்லவன் ஆங்கே உரைசெய்வான்

பூமாந் தளிர் போலும் விழி
சிவந்தே அப்போர் வீரன் உரைபுகல்வான்...
நாமாகக் கெட்டோமா? விதி
மூதாட்டி நமைக்கெடுத்தாள்...கொடும்பாவி!
ஏமாந்து போனோம்... வேற்றுமை
வளர்த்தோம்...இடருற்றோம் இனிமேல் நாங்கள்
பாமாலை கட்டுங் கவிஞன்
குழந்தைகள் படைநடத்துவோ மென்றான்!

நீறு போலுந் துகளாகி
நாங்கள் இனி வீணாய் நிலைகெடோமென்றே
கூறுவா னொருவன் நாங்கள்
கொடிய பகைவர்க்கே பகைவரென்றான்!
ஏறுபோல் மறவர் கூட்டம்
இன்றே கிளம்புக! என்றான துகேட்டார்
நூறு நூறு பல்லாயிரம்
தமிழ் வீரர் திரண்டார் நொடிப் போதிலே!

தேச மமைக்கவும் கொற்றம்
தமிழுக்குத் தேடவுமே புறப்பட்டோம்!
வீசு தடக்கை வீரர்காள்...
பகைக் கூட்டம் எங்கேயென்றான் ஒரு வேங்கை!
பாசத்தால் தமிழுக்குயிர்
தரத் துடித்தவ னொருவன் களத்தில்
ஓசையிட்டே இனி வேலை
உண்டென்றான்...எரிதழலுயிர்ப்ப நின்றான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமிக்க தமிழ்க்குலம்
ஒன்றுபட்டெழுமெனில் விடுதலை நாள்
தூரமோ? தேச மமைப்போம்
என்பதும் ஒருபெருந் தொழிலோசொல்வீர்!
ஆரம்போ லிணைந்த படை
வீரர் அணியணியாய் எழவுமாங்கே
பாரந் தாங்குமோ இலையோ
மண்ணென்று பயந்தன திசைகளம்மா!

தாயின் மிசை ஆணைசெய்வார்...
சிலர் தமிழ் மேலும் ஆணையேற்பர்...ஆங்கே
தீயின் மிசை ஆணைகொள்வார்
தாமுமுளரே... இளைஞரோ தேவியர்
வாயின்மிசை முத்தமிட்டே
ஆணையுரைப்பர்...அதுகண்டு வருந்தி
நோயின் மிசை வீழ்வரென
உடல் நுடங்கி வீழ்வார் பகைவர் மாதோ!

கோல மாமலைக் குன்றுகள்
எனவே வந்து குவிந்தனவாம் தோள்கள்!
சால வைரங் கொண்ட பனை
போலு முயர்ந்தனகாண் மறவர்கைகள்!
ஞால முழுது மோரிடம்
திரண்டதோ என அமைந்த களத்தில்
நீல வானெலாந் தமிழர்
கொடிகள் நிரை நிரை எழுந்தனவே!

ஓடும்...ஓடும் மாற்றான் திமிர்
உடனடக்குவோம் என்பார் சிலவீரர்!
தேடும்... தேடும் பகைவர்தம்
தலைகளே இனித் தேவையென்பார் உண்டே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடும்... பாடும் ஓர் பரணி
என்று பலவகை முழக்கமிட்டங்கே
கூடும்... கூடும் தமிழ்க் கூட்டம்
புயலின் கூட்டமோ? அன்றியாதுகொல்லோ?

காளையர் முதியோர் மனை
யறங் கண்டோர் துறவியர் சின்ன மைந்தர்
வாளை நிகர்த்த கண் மாதர்
வலியோர் உடல் மெலிந்தவர் அசடர்
நாளை எதிர்பார்க்கும் கருப்
பெண்டிர் உடலீனர் பிணியாளரென்று
மூளையிழந்தவர் செத்தார்
அன்றி மற்றனைவரும் மொழிப்போர் செய்தார்!

கூவு சங்குகள் கூவின...
எண்டிக்கும் முரசுகள் கொட்டின கண்டீர்!
தாவுபோர் மறவர் நடை
ஓசை தடதடவென் றெழுந்த தாங்கே!
தூவு குண்டுகள் வெடித்து
முழங்கின! துகள்பட்டன உடல்கள்!
சாவு விளையாட்டில் வாழ்வு
காண்பம் என்றோடின தமிழ்ப்படைகளே!

## வயிறுடையான் போர்

குருதி ஆற்றில் குளித்தபடி—அங்கே
கோலச் சிவப்பில் களித்தபடி
இருவர் தோள்கள் இடித்தபடி—மலை
இரண்டு பிளந்து வெடித்தபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருது பகைவர் இறந்தபடி—சிலர்
போர்க்களம் விட்டுப் பறந்தபடி
அரிய தமிழர் மறவலியும்—படை
அழகும் எழுதக் கவிவருமோ?

சாவின் பசிக்குத் தலைகொடுத்தே—எங்கள்
தமிழர் செருக்கள மாடுகையில்
பாவி ஒருவன் 'வயிறுடையான்!—எனும்
பச்சைத் துரோகி...தமிழ்ப்பிறவி
கூவி முழங்கி வலம்வருவான்!—அவன்
கொடிய வரவில் தமிழ்ப்படைகள்
ஆவி கலங்கித் துடித்தனவே...விதி
அரக்கி களத்தை நடத்துகிறாள்!

வயிறு பசிக்க விடுதலையோ?—என்று
வஞ்சகர் போடு முணவினுக்காய்
எயிறு சிரிக்க அடிபிடித்தே—தமிழ்
இனத்தை அழிக்கும் இழிசெயலோன்!
கயிறு விரித்தார்...சுருக்குவைத்தார்—அவர்
கையில் இவன் போய் விழுந்துவிட்டான்!
பயறும் பருப்பும் பெரிதெனவே—தமிழ்ப்
பாசம் மறந்து கிளம்பி விட்டான்!

கால முனிவன் உரைத்தது மெய்!—இவன்
காட்டிக் கொடுக்கும் கயவனடா!
ஓலைப் புழுவும் உணவருந்தும்—ஈயும்
ஓந்தியுங்கூட உணவருந்தும்
நாலுந் தெரிந்த மனிதர்களும்—அட
நக்கிப் பிழைக்கவோ வாழ்வெடுத்தார்?
கோலத் தமிழை மறந்துவிட்டான்—பாவி
குடலை மதிக்கப் பிறந்தவனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளே வளர்ப்போம்...எவரெதிர்த்தார்?—பசி
போக்க நினைத்தல் பொதுப்பணியே!
ஒருவர் பசிக்க ஒருவரிங்கே—நாட்டில்
உண்டு கொழுத்தல் கொடுமையடா!
கருணை நெஞ்சம் எமக்குமுண்டே... —எனில்
காட்டிக் கொடுத்து மொழிப்பொருளே
திருடரிடத்தே பறிகொடுத்தல் —எந்தத்
தேசம் வகுத்த அறமுறையோ?

ஊன வயிற்றுப் பசி பெரிதோ?—அட
உள்ளம் வளர்த்த மொழிபெரிதோ?
ஈனத் தசையின் உடல் பெரிதோ?—எங்கள்
இன்பத் தமிழினுயிர் பெரிதோ?
பானைச் சோறுதான் பெரிதோ?— அட
பண்டைத் தமிழின் சுவைபெரிதோ?
தானைத் தமிழர் வயிறுடையான்—தலை
தருவீர்... தருவீரென எழுந்தார்!

முகில்கள் குழம்பிக் கிடந்தது போல்—படை
மோதிக் கிடந்த செருக்களத்தில்
மிகவுங் கொடியன் வயிறுடையான்—அவன்
மேனி பிளப்போ மெனமுழங்கி
அகிலங் குலேந்து நடுநடுங்க—வீரர்
அணிகள் நிரையே எழுந்தனவாம்...
முகமும் உடலும் மறைத்தபடி—செரு
முனையில் நடப்பான் வயிறுடையான்!

தீய பகைவர் அடிபிடித்தே—இவன்
திட்டம் வகுப்பான்! திரைமறைவில்
மாய வடிவில் வலம் வருவான்!—பகை
மறவர்க் கிவனே பலந்தருவான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய மறந்து தமிழ்மறவர்—இந்த
உலுத்த னுடன்போர் நடத்துகின்றார்...
நாயில் எளியன் களத்தினிலே—உடல்
நடுங்கி நடுங்கிச் சுழலுகின்றான்.

(வேறு)

வஞ்சத் தசை யுடலம் பகை
வருக்கும் அருவருக்கு மிவன்
நஞ்சை விடக் கொடியவன்! விட
நாகத்திலுந் தீயன்! தமிழ்
நெஞ்சை விலை வைத்தே வெறும்
நிணத்தை வளர்த்திடுவோன்! கொடு
வஞ்சனுயிர் சிதைய வலம்
வருகுதொரு தானை!

கட்டுடைய ஓடிவரும்
கங்கையென அங்கேஇடி
கொட்டு முரசொலியில் வெறி
கொண்டு நடைபோடு முயர்
வெற்றி மறத் தமிழர் படை
வீணனொடு பொருதபடி
சுற்றி வருங் களத்தை யொரு
சொல்லில் அளவிடவோ?

ஈன வயி றுடையா னுடல்
இரத்த மழை யாடும்! அவன்
ஊனுடலைத் தமிழர் படை
உதைத்து விளையாடும்! இழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவனை மரணமது
வழிவழியே தேடும்! அசை
தீனியுடல் நாணமுடன்
திசைமுழுது மோடும்!

சொந்தமொழி இன மழகு
சூழ்ந்த தமிழ் நாடு தமை
நிந்தை செய வந்த உடல்
நீசனுடல் கொண்ட உயிர்
சிந்துவது காணவெனச்
சேர்ந்து வரும் மக்களொடு
பைந்தமிழர் போர்ப்படையும்
பரந்த செருக்காடு!

நெற்றி வியர்வைத் துளிகள்
நிலத்தில் விழ... ஆங்குகளம்
சுற்றிவரும் மறவரிடை
தோள் வலிய ஞெருவன்... உலை
பற்றியெரியும் விழிகள்
படைத்த தமிழ் வீரன்... இனி
வெற்றியெனத் தீயனுடல்
வீழ முரசார்த்தான்!

நாலிடமும் அடியுதையால்
நலிந்த வயிறுடையானுடல்
காழலகு கையழகு
கழிந்து முடமாகி வெறும்
தோலுடனும் எலும்புடனும்
தொப்பெனவே வீழ... உயிர்
காலனிடம் போன கதை
கண்டது மண்ணம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலத்தான் வீழ்ச்சி

ஓகோ வென்று தமிழர்
　　உளங்கனிந்தே ஆர்ப்பரித்தார்!
தீயோன் மேனி சாய்ந்த
　　தென மகிழ்ந்தார்...சங்கமார்த்தார்!
போரோ நாளை விரைவு
　　பெறுமென்றார்... புதிதாயங்கே
வேறோர் செய்தி கொணர்ந்தான்
　　ஒரு வீரன் இராப்போதிலே!

அரத்தம் பூவில் புழுவொன்
　　றுறங்குமாப்போல் அழகுகாணீர்!
பெருத்த தன்னலத்தான்
　　அதோ பிணமாய் ஓர்புறத்தே
சிரித்த தீயில் கருகி
　　அவிகின்றான் திறல்மாவீரர்
மரத்த நெஞ்சமுடையான்
　　அவனையுந்தான் மாய்த்தாரென்றான்!

கால முனிவன் போடும்
　　கணக் கென்ன பிழையா போகும்?
ஆலம் போல இவனும்
　　வயிறுடையான் அமைப்பேகண்டீர்!
கோல மிகு செந்தமிழை
　　விலைவைத்தும் பதவிகொள்வோன்!
ஞாலம் விட்டே மறைந்தான்
　　எனுஞ் செய்தி நல்லதொன்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியன் தன்னலத்தான்
    தமிழினத்தைக் காட்டிக் கொடுப்போன்!
முடிவடைந்தா னென்று
    முகமலர்ந்தார் படையிலுள்ளோர்!
அடிபிடித்தே வாழும்
    எளியன் அனலாடல் கண்டு
குடிகெடுத்தான் பதவி
    கொளு மழகோ கொள்ளையென்றார்!

தானடையும் வாழ்வே
    பெரிதென்பான்...தமிழை... இன்பத்
தேனை அற்பன் சிறிதாய்
    மதிப்பிடுவான் தன்னலத்தான்!
வானடைந்து போன
    வயிறுடையான் வழியே போனான்...
தானைவீரர் பிழைக்கும்
    தமிழ்ச்சாதி இனிமேலென்றார்!

உறுமி கொட்டும் ஆங்கே
    ஒலிசெய்யும் சங்கின் கூட்டம்!
வெறிகொள் வீரர் தானை
    எழும்! பகைவர் விழிகளஞ்சும்!
சிறையின் கதவு நாளை
    உடைந்து விழுமென்று சீறி
மறவாள் தூக்கும் வீரர்
    தடந்தோள்கள் மலைகளொக்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிக் கொடுப்பதொன்றே
தொழிலாக்கி வாழுங் கயவர்
கூட்டமொழிந்து மான
முடையாரே குவிந்த களத்தில்
நாட்டுச் சேவலொன்று
தொலைவினிலே கூவ... நாளை
ஓட்டும் பரிதி எழுந்தான்...
உரிமைப்போர் தொடங்கிற்றம்மா

## நெடும் போர்

கொட்டு செங் குருதிக் களத்தினி லாங்கே
கொதித்தெழும் மறவர்தம்மிடையே
கட்டுடல் வீரன் ஒரு தமிழ் நெஞ்சன்
கடலென அதிர்ந்தொலி செய்வான்:

தமிழர் பொன்னாட்டைத் தாயக மண்ணைத்
தரமறுக் கின்றவ னெவனோ...?
இமை நொடிப் போதி லெழுந்திரு தமிழா!
இன்னுயிர் நமக்கொரு பொருளோ?

ஓடுக தானை! ஓடுக பகைவர்
உலவிடும் திசை வழி யெல்லாம்!
தேடுக தமிழர் தேசத்தின் மானம்...
தெய்வத்தில் ஆணையிட் டெழடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைந்தமிழ் மொழியை எவன் பழித்தாலும்
பழித்தவன் தலை கொண்டு வாடா!
ஐந்து துண்டாக்கி அடுப்பினில் வைப்போம்!
அது நமக் குணவாகும் போடா!

கருவினில் அன்னை வளர்த்ததும் இந்தக்
கைகளைத் தந்ததும் எல்லாம்
செருவினில் வெற்றிக் கொடியுடன் நின்று
சிரிப்பதற் கன்றோடா தமிழா!

ஆழிபோல் ஆழி அலைபோல் முழங்கி
ஆடடா... போர்க்களமாடு!
நாழிகை யொன்றில் நாடாள வேண்டும்
நாமென்று சிங்கம் போலார்த்தான்!

சங்கொன்று களத்தில் முழங்கிற்று! வீரர்
தானையும் முழங்கிற்று கண்டீர்!
பொங்குபோர்க் களத்தில் மாற்றரும் போந்தார்!
போரென்று கொட்டிற்று முரசம்!

அதிர்ந்தன திசைகள்! அசைந்தன மலைகள்!
அழிந்தன காடுக ளெல்லாம்!
உதிர்ந்தன கரங்கள்! உடைந்தன தலைகள்!
உயர்ந்தன பிணமலைக் குவியல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (வேறு)

மறவலி யொடுபகை
அழிவுற எழுதமிழ்
மாந்தர் களத்தினிலே
சுறவுகள் கடல் மிசை
வெறியொடு சுழல்வன
போலும் சுழல்கின்றார்...
நறநற வென எயி
றொலிசெய மறவர்கள்
ஆட்டம் நடக்குதடா!
புறமெனு மழகிய
தமிழ்க்குல வீரரின்
வாழ்க்கை வீண்போமோ?

மாமலை யொத்தன
தமிழரின் ஓங்கிய
தோள்கள்! சினங்கொண்டு
தாமரை யொத்தன
செந்நிற அழகொடு
விழிகள்! ஓவென்னும்
தீமலை நெருப்பினை
யொத்தன சுழன்றன
வீரர் மூச்சுக்கள்!
தேமதுரத் தமிழ்
உயிரெனக் கொண்டவர்
திரண்டார்! போர் செய்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடியடி தலைமிசை
படவிழும் அரவென
வீழ்ந்தார் பகை வீரர்!
இடிபட வேரொடு
விழுமரம் என உடல்
சாய்ந்தார் சிலரங்கே!
அடிபுய லிடைநிலை
கெடுமொரு புவியென
ஆனார்... அம்மம்மா
பொடிபடு தசையுடல்
சுமந்தவர் அழிவுறு
போரை என்னென்பேன்?

தாவிடு வேங்கைகள்
குகையிடை ஒளிந்தன
போலுந் தமிழ்வீரர்
காவிய மார்பிடை
ஒளிந்தன குண்டுகள்!
களத்தே செவ்வானின்
ஓவியம் வரைந்தது
தமிழரின் குங்குமக்
குருதி நீரோட்டம்!
சாவிலும் விடுதலை
பெறுவது மெய்யென
வீழ்ந்தார் தமிழ்நெஞ்சர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவையின் நிரையென
வானிடை யெழுந்தன
பகைவர் ஊர்திகளே!
சிறகுகள் துகள்பட
அவைமிசை பறந்தன
தமிழர் கருவிகளே!
திறலுடை தமிழரின்
பொறிபல கணைகளை
அள்ளிச் சிதறினவே!
விறகுகள் எனமதில்
வீடுக ளெரிந்தன!
ஊர்கள் வீழ்ந்தனவே!

ஆவியில் இனியது
தமிழென உணர்ந்தவர்
அழகின் வடிவுடையார்...
தேவியர் மான்குலத்
திரளென அமர்க்களம்
ஆடிச்சிவக்கின்றூர்!
தாவிடு வேல்விழி
தமிழ்விழி கொண்டவர்
கற்பின் தழல்முன்னே
சாவிடை கொழுநரை
அனுப்பிய பகைவரின்
தானை எரியாதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடும்பொறிக் குண்டுகள்
வெடித்தெழ வானகம்
கூந்தல் விரித்தாற்போல்
நெடும்புகை எழுந்தது!
பகைவரின் கொடிகளும்
நெருப்பி லாடினவே!
கடும்புயல் அடித்ததை
நிகர்த்தது களத்திலே
தமிழர் போராட்டம்!
திடும் திடுமென ஒலி
செய்தது பகைவரின்
ஓட்டம் செவியெல்லாம்!

ஆடின கழுகுகள்...
வான்மிசை! அழுகின
பிணத்தின் இரைதேடி
ஓடின நரிகளும்
தெருப்புற நாய்களும்!
ஊரே காடாகி
மூடின பிணங்களின்
விழிகளைக் கரடிகள்
மோந்து களந்தோறும்
தேடின! பூமியின்
திசைகளும் நாறின!
புழுக்கள் திரண்டனவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறப்போர்

தெய்வ மாவீரர் தமிழ் வீரர்
திரண்டு களத்தின் கண்ணே
செய்யும் அறப்போரை என்னென்று
தமிழில் செப்புவேனோ?
பெய்யும் மழைத் துளிகளென்னப்
பெருகிக் கொட்டும் மாற்றார்
கையின் குண்டுகளிடையிலே
தமிழர் களித்தாரம்மா!

குண்டின் அடிபட்டார் சில தோழர்
கூட்டஞ் சிறையாடிற்று!
தொண்டர் பலரங்கே தடியாலும்
தூள் தூளானார்! தமிழன்
மண்டையுடைந்ததே கதையெங்கும்!
எனினும் மாற்றார் தானை
கண்ட காட்சியோ சிறிதேனும்
கலங்காத் தமிழர் படையே!

கொள்கை உயிரென நினைக்கின்ற
கூட்டம் உரிமைக் கோயில்
உள்ளே விடுதலை இறையோனை
அடைய ஓடுங் கூட்டம்
வெள்ளை நெஞ்சமும் அறநோக்கும்
அன்பும் கருவிகளாக்கித்
துள்ளுமொரு கூட்டம் பகைவர்க்கு
நடுங்கித் தூங்குமோடா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறு)

எட்டுத் திசைகளும் பட்டுத் தெறித்தன
ஈனர் குண்டுகளே!—குண்டு
பட்டுத் தமதுடல் கெட்டுச் சிதறிடப்
பாய்ந்தார் தொண்டர்களே!

மானம் பெரிதென ஊன உடல்விழ
மாண்டார் தமிழ் வீரர்!—ஆவி
தானம் எனத்தந்த மானத் தமிழன் தோள்
தங்கம்! தங்கமடா!

பெண்களை மென்மைப் பிறவிகளென்று
பேச மனம் வருமோ?—அங்கே
மண்ணி லுயிர்சிந்தும் இளைஞர்க்கு வாய்த்த
மகளிர் குலமல்லவோ?

பள்ளிச் சிறுர்களும் நல்லறப் போரிலே
பாய்ந்து களிக்கின்ருர்!—செந்நீர்
வெள்ளத்திலாடி மரணத்தின் முத்தம்
விரும்பித் துடிக்கின்ருர்!

ஓவென்றிரைந்து நடக்குதடா எங்கும்
உரிமைப் போராட்டம்!—வாழ்வு
தாவென்று கேட்டு மடியுதடா எங்கள்
தமிழர் படைக்கூட்டம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை வருத்தியும் தன்னுயிர் தந்தும்
தமிழன் மடிகின்றான்!—தங்கள்
பொன்னுயிர் சிந்தும் புருக்களைக் கண்டு
புலவன் மலர்கின்றான்!

எங்கும் பிணத்திரள்! எங்கும் பிணநெடி!
இனிய அறமங்கை—கண்ணில்
பொங்கி வழியும் புனலின் நெருப்பிலே
பூமி அழியாதோ?

ஈழம் தமிழ்மண் இரண்டிலுஞ் செந்நீர்
எழுந்து பெருக்கெடுத்து—நின்ற
ஆழியுஞ் செங்கடலானது கண்டார்!
அதிர்ந்தார் புவிமாந்தர்!

## பூத்தது விடுதலை!

புவிமாந்தர் அதிர்ச்சி!
களத்தே புறத்தோடும்
பகைவர் வீழ்ச்சி!
இவைகண்டு சிரித்தாள்
இனியாள் தமிழச்சி!
மக்களெல்லாம்
குவிமகிழ் கொண்டார்!
ஊர்கள் திசைகளெலாம்
கொள்ளை மகிழ்ச்சி!
சுவைகாண் விடுதலை
எனுஞ்சொல்! பூத்ததடா
தமிழன் ஆட்சி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் பொன்னாள்

காலங்கனிந்திடும் அழகுதானோ?
　　படைத்தவன் அருளோ? தமிழ்க்கன்னி
ஞாலம் மகிழ்ந்திட அரசுகொண்டு
　　வாழும் நாள் அடடா... மலர்ந்தாச்சோ?
கோலம் இதுபெருங் கோலமென்பேன்!
　　கொடுமைகள் பொடியாயின கண்டீர்!
நீல வான்மிசை தமிழ் நாட்டினர்தம்
　　கொடிகளும் எழுந்து நிறைந்தனவே!

கூனல் விதிக்கிழவியுடல் தேய்ந்தாள்
　　நிலைகாணீர்... குடுகுடென ஓடிப்
போன நரிபோலவே போகின்றாள்...
　　தமிழ் மண்ணின் மனைகள் தெருப்புறங்கள்
ஆன திசைகளெங்கணுங் கொண்டாட்டம்!
　　ஒளிப் பந்தல்! அழகின் சிரிப்பம்மா!
மான விடுதலை மலர்ந்த கோலம்
　　உளங்கண்டு மகிழும் திருநாளோ?

முத்து வளைவுகள்! மணிகள்! பச்சை
　　மாவிலைப் பந்தல்! முகங்குனியும்
பத்தினிபோல் குலைசரித்த வாழை
　　தெருப்புறத்தே! கோலம் தரையெல்லாம்!
குத்து விளக்குகள்! மலர்கள்! காற்றில்
　　எழுந்தாடும் வண்ணக் கொடிக் கூட்டம்!
பத்துத் திசைகளும் அழகுக்காட்சி!
　　கவிஞன்கண் பார்த்துக் களிப்பதற்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீள நெடுநாள் அலைந்து களத்தே
போராடி நின்ற தமிழ்மறவர்
ஆள ஒரு நாள் கிடைத்த தென்றே
அணி சேர்ந்து பாடி அகமகிழ்வார்!
பாளையென எழில் முறுவல் விரிப்பர்
இளம் பெண்கள்! அவர்வாய்ப் பனிமுத்தம்
வேளைதொறும் அருந்தி விடுதலை நாள்
களிக்கின்றார் கொழுநர்! விழாவன்றோ?

(வேறு)

முரசுகள் அதிர்ந்தன கேண்மினோ! கேண்மின்!
முழங்கின ஊதுகுழல்!
புரவிகள் ஆடின காண்மினோ! காண்மின்!
பொழிந்தன தமிழ்ப்பாடல்!
நிரை நிரை காவடி நிறைந்தன கண்டீர்!
நிகழ்ந்தன நடனங்கள்!
அரசொடு தமிழகம் மலர்ந்தது கண்டார்!
அனைவரும் மகிழ்கின்றார்!

தூயவெண் சங்குகள் கூவின! கூவின!
தோன்றின கவிதைகள்!
ஆயிரம் வகை வகை வீணைகள் ஆர்த்தன!
அதிர்ந்தன வேட்டுக்கள்!
தாயகம் தனியரசானது! தேனிசை
தவழ்ந்தது காற்றெல்லாம்!
சேயிழை தமிழ்மகள் வாய்மலர் இதழ்களும்
சிரித்தன சிரித்தனவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தூயவெண் சங்குகள் கூவின! கூவின!
தோன்றின கவிதைகள்!
சேயிழை தமிழ்மகள் வாய்மலர் இதழ்களும்
சிரித்தன! சிரித்தனவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீள்நெடு மாளிகை வீடுகள் நிறைந்தன!
குடிசைகள் நீங்கினவே!
நாள்தொறும் வாடிய ஏழையர் பூமுகம்
நகைத்தன! நகைத்தனவே!
ஆள்பவர் அடிமையர் உள்ளவர் அற்றவர்
ஆகிய பேதங்கள்
தூள்பட விடுதலை வந்தது! விண்மிசை
பறவைகள் துள்ளுதடா!

பனிமலர் புகைப்பொருள் சந்தனம் மணத்தன!
பாவையர் எழில் காட்டும்
கனிவகை பாலொடு சர்க்கரை கரும்புகள்
இனித்தன வாயெல்லாம்!
தனியெழில் கொண்டது தமிழகம்! பந்தல்கள்
தாங்கின வீதிகளே
மனிதரின் திரள்நிறைக் கின்றதால் ஊர்மிசை
வீதிகள் மறைந்தன காண்!

கோயில்க ளெங்கணும் மணியொலி கொஞ்சின!
தமிழ்மனம் குளிர்ந்ததடா!
போயின ஊர்வலம்! வீடெலாம் பொன்விழா!
பூத்தன நிறைகுடங்கள்!
ஆயிரம் எழில்வகை! விடுதலை நாளெனில்
அழகொரு காட்சியன்றோ?
வாயிதழ் எங்கணும் வாழ்த்தொலி நின்றது!
வாழிய தமிழ் நாடே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா

முத்து நிலாப்பொழியும் முற்றம் நெடுந்தொலைவில்
கத்துங் குயிலின் கனிப்பாடல்
குத்து
விளக்கெரியும் வண்ண விழாமேடை! ஆங்கே
உளக்கனியில் தேன்கொண்ட ஊர்!

வெள்ளி ஒளித்தூண்கள்! மேலே மணிக்கூரை!
கொள்ளை அழகு நிறைகோயில்!
உள்ளே
இருக்கை பசும்பொன்! எழில்சேர் இரவின்
திருக்கோலம் வேறு சிறப்பு!

தங்க நகையாள் தமிழ்க்கன்னி தேன்பாவை
பொங்க இருந்தாங்கே பூக்கின்ருள்!
திங்கள்
ஒளிச்சுகமும் தென்றல் உணர்த்துஞ் சுகமும்
களிக்கின்ருள்...ஓவியங் காண்!

நீல நெடுவானம் எங்கும் கொடிநிரைகள்!
கோலமொழிக் கன்னியின் கொண்டாட்டம்!
காலமுனி
ஆங்கு விழாக்காணும் ஐயன் இதழ்முறுவல்
தாங்கும் அழகோ தனி!

மரகதம் பூத்த மணிமுடி சூட்டும்
திரளிடை வாழ்கின்ருள் தேவி!
கரமிசை
செங்கோல் சுமந்து சிரிக்கின்ருள்...ஞாலத்தே
பொங்கும் மகிழ்ச்சிப் புனல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவள இதழ்கள் பளபளக்கும்...! ஆசை
தவழ ஒரு முறுவல் தாவும்!
இவளேன்
விழியாலே என்னை வெறிக்கப்பார்க் கின்ருள்?
அழியாத காதல் அழகு!

கோமேதகத்தின் குளிர்ந்த ஒளிகொண்டாள்!
நாமீதிலாடும் எழில் நங்கை!
பூமூடும்
தேனுகி நிற்கின்ற தேவி அருந்தமிழே
நானுகி நிற்கின்றேன் நான்!

வைர நெடும்போர் ஆடி உடல்வளைந்து
மையின் தலைநரைத்த மானிடன்
செய்யதமிழ்ப்
பாவலன் பெற்ற பசுங்காதல் ஓவியமே!
தேமொழியே வாழ்க திகழ்ந்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

இறைவா! நினையே பிடித்தேன்!
இனிதே கவிதை வடித்தேன்!
உறைவா யெதிலும் இறைவா! கவியும்
உனதே மிக நான் களித்தேன்!

அமைதி எனுமோர் பொருளே!
அறத்தின் எழில்சேர் வடிவே!
இமையுள் ளொளியே! உடலுள் உயிரே!
இறைவா! தமிழுன் அழகோ?

உலகம் முழுதும் நிறைவாய்!
உயர்வான் மழைபோ லருள்வாய்!
தலைவா! உணர்வின் அமுதே! உயிரே!
தமிழ்முன் வைத்தேன்...வணக்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிக்கவிஞர்
பதிப்பகம்

மூவேந்தர் அச்சகம்,
சென்னை—14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org